# கண்ணீரில் கரைந்த தேசம்

(நாவல்)

முருகையா சதீஸ்
(கவிஞர் முல்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் கரைந்த தேசம்

(நாவல்)

முருகையா சதீஸ் B.A (Hons)

(கவிஞர் முல்லை)

உதவி விரிவுரையாளர்,

தமிழ்த்துறை,

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

வெளியீடு

யேர்மனி - தமிழ் எழுத்தாளர் சங்கம்

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : கண்ணீரில் கரைந்த தேசம் (நாவல்)

ஆசிரியர் : முருகையா சதீஸ் (கவிஞர் முல்லை)

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு : முதற்பதிப்பு – ஆனி, 2022

வெளியீடு : யேர்மனி – தமிழ் எழுத்தாளர் சங்கம்

அச்சுப்பதிப்பு : ஹறிஸ் பிறிண்டேர்ஸ்,

சேர்.பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

Title : Kanneeril Karaintha Thesam (Novel)

Author : Murukaiya Sathees

Copyright : Author

Edition : First Edition - June, 2022

Published by : Germany - Tamil Writers Association

Printed by : Haris Printers,

Sir.Pon.Ramanthan Road, Thirunelvely,

Jaffna.

ISBN : 978-624-99407-0-3

Price : 650.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வன்னி இடப்பெயர்வுக் காலத்தில், தேசக்காற்றோடு மூச்சாகிப்போன என் தேச உறவுகளுக்கு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

முருகையா சதீஸ் எழுதிய "கண்ணீரில் கரைந்த தேசம்" என்னும் நாவல் ஒரு போர்க்களப் பட்டறிவு எழுத்துருவாக அமைகிறது. ஆசிரியரே கதைமாந்தனாக நின்று நாவலின் கதையை நடத்திச் செல்கிறார். இந்த நாட்டிலே அரசபடைக்கும் புலிகளுக்குமிடையே வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற போரின் முடிவுப் பகுதியைச் சித்திரிப்பதாக இந்த நாவல் அமைகிறது. புதுக்குடியிருப்பிலிருந்து உயிர்ப் பாதுகாப்புக்காகப் பல்வேறு இடங்களில் பல இன்னல்களுக்கும், குண்டுகளுக்கும் தப்பி வட்டுவாகல் பாலத்தைத் தாண்டும் வரையான களத்தினையும் காலத்தினையும் கொண்டதாக அது அமைகிறது.

உலகிலே போர்கள் நடைபெற்ற நாடுகளில் அப்போர்கள் தொடர்பான நாவல்கள் தோன்றியிருப்பதை நாம் அறிவோம். அத்தகைய ஒரு நாவலாக இதுவும் அமைகிறது. இது ஆசிரியருடைய நேரடி அனுபவம் மலிந்ததாக அமைகிறது. வலிகளையும், துன்பங்களையும் சுமந்து செல்லும் ஆசிரியர் தன்னுடன் வந்தவர்கள், எதிர்ப்பட்டவர்கள் ஆகியோரின் நிலைப்பாடுகளுடன் தன்னுடைய உணர்வுகளையும், கண்ட காட்சிகளையும் சித்திரிக்கிறார்.

வன்னிப்போரினை அறிய விரும்புபவர்கள் அதனின் ஒரு வெட்டு முகத்தை இந்த நாவலூடாக அறிந்துகொள்ள முடியும். இந்த அச்சமுள்ள அவலங்களுக்கிடையிலும் சின்னச்சின்ன மகிழ்ச்சி நிலைகளையும் ஆசிரியர் வெளிக்காட்டுகிறார். ஒரு எடுத்துக்காட்டு:

"புதுக்குடியிருப்பில் எங்களுக்கருகில் இடம்பெயர்ந்திருந்த பெரியப்பா, நாங்கள் வீட்டைவிட்டுப் புறப்படும்போது கோம்பாவில் பகுதிக்குச் சென்றிருந்தார். இப்போது அங்கு இருக்க முடியாமல் இங்கு வந்துவிட்டார். இதனால் போர் அவலத்திலும் எனக்கு மகிழ்ச்சிதான். ஏனென்றால் பெரியப்பாவின் மகன் லவன் மற்றும் மகள் கஜனி அக்கா முதலியோர் இருந்ததால் எனக்குப் பொழுதுபோக்குக் கிடைத்துவிட்டது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல் புலப்படுத்தும் பொருளை, காட்சிகளை, உணர்வுகளைத் தெளிவாக உணர்ந்துகொள்ளக்கூடிய நல்ல தமிழ் நடையினை ஆசிரியர் பயன்படுத்துகிறார். ஒரு கலைப்படைப்பாகவும், ஆவணமாகவும் இந்நாவல் அமையக்கூடியதாயுள்ளது. ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் கூறி இந்த அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

**வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீட்டுரை

இளம் எழுத்தாளர், இளவல் சதீஸ் முருகையா அவர்கள், எழுத்தில் புதுமைகளைப் புகுத்தும் எழுத்தாற்றல் கைவரப்பெற்ற ஆசிரியராகத் திகழ்கின்றார். இளைஞர் சதீஸ் அவர்கள், இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். இவர் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை: திரியாய்க் கிராமத்தின் பாரம்பரியத்தில் தோன்றியவர். ஆயினும் போர்ச்சூழல் தந்த இடப்பெயர்வினால், வன்னி மண்ணில் பிறந்து வளர்ந்தவர். வன்னி மண் பலவிதத்திலும் இவருக்குப் பல அனுபவங்களையும், ஆளுமைகளையும் வழங்கியுள்ளது. சிறுவயதிலிருந்தே பல ஆற்றல்களையும் பெற்று வளர்ந்து வருகின்றார். சிறப்பாக எழுத்தாற்றல் மிக்க இவர், அதில் தன்னை ஈடுபடுத்திச் சிறப்பான படைப்புக்களை எழுதுபவர். பள்ளிப் பருவத்திலிருந்தே நாடகம், கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றை எழுதத் தொடங்கியவர். இன்று இளைஞனாக இளந்துடிப்புடன் புதியபுதிய உத்திகளைக் கைக்கொண்டு பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குகின்றார்.

அண்மையில் இவர் "ஆறிப்போன காயங்களின் வலிகள்" (2021) என்ற கவிதை நூலையும், "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு" (2022) என்ற ஆய்வுக் கட்டுரை நூலையும் எழுதியுள்ளார். இதில் "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு" என்ற ஆய்வுநூல் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலின் வெளியீட்டு விழா கடந்த 25.06.2022ஆம் திகதி யேர்மனி, டோட்முண்ட் நகரத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் சதீஸ் முருகையா அவர்கள் மெய்நிகர்வழியாகப் பங்குகொண்டு கண்ணுற்றதோடு, ஏற்புரையினையும் வழங்கியிருந்தார். இவ்விழாவில் இவரின் "ஆறிப்போன காயங்களின் வலிகள்" என்ற கவிதை நூலின் பார்வையும், அறிமுகமும் இடம்பெற்றமை குறிப்பிடக்கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரிசையில் இன்று இவரால் எழுதப்பட்ட "கண்ணீரில் கரைந்த தேசம்" என்ற நாவல் வெளிவருகின்றமை பெரும் சிறப்புக்குரியதாகும். இந்நூலினையும் "யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்" மூலம் வெளியீடு செய்வதற்கு முன்வந்த ஆசிரியருக்கு மனம் மகிழ்ந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நாவல் இலங்கைத் தேசத்தில் வாழ்ந்த தமிழ்மக்களின், விடிவை நோக்கிய நீண்ட நெடிய போராட்டப் பயணத்தில் நடைபெற்ற சம்பவங்களின் வரலாற்று நிகழ்வுகளை, நிழலாக இருந்து உண்மைகளைக் கூறும் கதையாக அமைந்துள்ளது. பகலவன் ஒளியில் பளீரெனத் தெரியும் வெளிச்சம்போல் இந்நாவலும் நடந்தவற்றைத் தெளிவாக எடுத்துக்கூறும் கதையாக அமைந்துள்ளமை மிகச்சிறப்பானதாகும்.

இந்நாவல் முழுமையும் ஒரு கதை சொல்லியின்மூலம் சொல்லப்படும் கதையாக உருவாக்கம் பெற்றுள்ளது. போர்க்காலச் சூழலில், பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சிறிய வயது மாணவனே கதை சொல்லியாக உள்ளான். அந்த மாணவன், தான் நடந்து – கடந்து வந்த பாதைகளில் நடந்தவைகளையும், கண்டவைகளையும், கேட்டவைகளையும் தானே சொல்லுவதாகவும், தன்னுடனும், மற்றவர்களுடனும், அக்கம்பக்கத்தில் சேர்ந்து கதைத்தவர்களின் உரையாடல்களையும் விளம்பி, நாவலை இறுதிவரை நகர்த்தியிருப்பது புதுமையும், சிறப்புமாகும்.

போர்க்காலச் சூழலில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையில் நடந்த உண்மைகளைச் சொல்லும் தன்மையும், போர் நடந்த களங்களில் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், விரக்திகள், சுமைகள் போன்றவற்றை வெளிப்படையாகக் கூறிய தன்மைகளும், இது ஒரு நியக்கதை என்பதைத் தெளிவாக்கியிருக்கின்றன. "போர்வெடியின் ஓசைகளில் வாழ்ந்தவர்களுக்கு எங்கிருந்து பயம் வரும்?" என்ற வினாவின்மூலம், "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே! உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதினும், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாரதியின் பாட்டில் வாழுகின்ற மக்களின் பயமில்லாத் தன்மையை ஆசிரியர் ஆணித்தரமாகக் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மையில் போர் உக்கிரமடைந்து, அன்றைய நாட்களில் குடில்களுக்கு மேலே விழுந்து வெடித்து, அங்கிருந்தவர்கள் இறந்தாலோ, காயப்பட்டாலோ உறவுகள் மட்டுமே அந்த நேரத்தில் இருப்பார்கள். தப்பிய குடும்ப உறுப்பினர்கள் இறந்தவர்களை அதிலேயே அடக்கம் செய்துவிட்டுக் காயப்பட்டவர்களோடு வேறு இடம் நோக்கிச் செல்லும் நிலையையே பின்பற்றினார்கள். எங்கு பார்த்தாலும் ஒப்பாரியே மிஞ்சியிருந்தது. இதனால், தானும் தன்னைச் சார்ந்த குடும்பமும் தப்பினாலே போதுமென்ற மனநிலையே உருவாகியிருந்தது. எல்லா வீடுகளிலும் துன்பம் இருந்ததால், யார் துன்பத்தை யார்தான் ஆற்றிவிடப் போகிறார்கள்?" என்ற வரிகள் போன்று, அகதிகளான – அனாதைகளான மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தைக் காட்டும் பல வரிகள் இந்நாவலில் செறிந்துள்ளன.

போர்க்கால உண்மையைக் கூறும் அனுபவ வெளிப்பாடாகவே இந்நாவல் அமைந்துள்ளது. ஈழத்தில் நடந்த இறுதிக்கட்டப் போரின் உண்மைகளை நம்மவர்களுக்கு மாத்திரமன்றி, உலகத்திற்கே சொல்லும் சாட்சிப்பதிவாக இந்நாவல் விளங்குகின்றது. எதிர்காலச் சந்ததியினர் இந்நாவலை வாசிக்கும் சந்தர்ப்பத்தில், இலங்கையில் வாழ்ந்த தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத் தன்மைகளையும், மக்கள் எதிர்கொண்ட அவலங்களையும் அறியகூடியதாக இருக்கும். "கண்ணீரில் கரைந்த தேசம்" என்ற நாவலை, யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஊடாக வெளியீடு செய்வதில் நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். ஆசிரியர் திரு. சதீஸ் முருகையா அவர்களை நெஞ்சமெல்லாம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்!

**பொ.சிறீஜீவகன்,**
**தலைவர்: தமிழ் எழுத்தாளர் சங்கம், யேர்மனி.**
**தலைவர்: யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை, ஐரோப்பா.**
**செயலாளர்: உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

இறுதிக்கட்ட ஈழப்போர் நிகழ்ந்த அந்தக்காலம், நான் பள்ளிப்பருவத்தில் துள்ளித்திரிந்த காலம். அக்காலத்தில் போர்வெடியோசைகளும், கந்தகக்குண்டு வெளிச்சங்களும் எமக்குப் புதிதல்ல. இலங்கை இராணுவத்தினரின் அதிவிரைவான முன்னகர்வுச் செயற்பாடுகளின் விளைவாக வன்னிமண், அவர்களின் கைகளில் விழுந்துகொண்டிருந்தது. அச்சூழ்நிலையில், 2009ஆம் ஆண்டு தைத் திங்களை அண்டிய தினங்களில் முல்லைத்தீவு – புதுக்குடியிருப்புப் பகுதி மக்களும் பாதுகாப்பான இடங்களைநோக்கி இடம்பெயரத்தொடங்கினர்.
எறிகணைத் தாக்குதல்களும், கிபீர் தாக்குதல்களும், துப்பாக்கிச் சூடுகளும் முழுமூச்சாய்ச் செயற்பட்டன. வன்னி நிலத்தில் மரணங்கள் மலிந்தன. ஒப்பாரிகள் ஒலித்துக்கொண்டேயிருந்தன. புதுக்குடியிருப்பிலிருந்து இடம்பெயரத் தொடங்கி இறுதியாக மே மாதம் 18ஆம் திகதி, எத்தனையோ இழப்புக்களையும் எத்தனையோ அவலங்களையும் சந்தித்தபின்னரே முள்ளிவாய்க்காலையடுத்த வட்டுவாகல் பகுதியில் நாம் இராணுவத்தினரிடம் சரணடைந்தோம். அத்தகைய இறுதிக்கட்ட ஈழப்போரில் அனுபவித்த போர்க்கால வாழ்வினை மையப்படுத்திய கதையாகவே இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது.

ஒரு சமயம் (பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனாக இருந்த காலமென நினைக்கிறேன்), தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் அவர்களோடு முல்லைமண் பற்றிய பல்வேறு விடயங்களைப் பேசிக்கொண்டிருந்தபோது, நான் அனுபவித்த போர்க்கால அவலங்களைச் சொல்ல நேர்ந்தது. அதைக்கேட்டுவிட்டு, 'இதனை ஒரு நாவலாகவே எழுதலாம்' என்று சொன்னார். அந்த வார்த்தை, எப்படியாவது இக்கதையை நாவலாக எழுதிவிடவேண்டுமென்ற நெடுநாள் ஆசையாகியது. அதன் விளைவாகவே "கண்ணீரில் கரைந்த தேசம்" என்ற நாவல் உருப்பெற்றுள்ளது.

இந்நாவல் வெறும் கற்பனைப் புனைவு அல்ல. குறிப்பிட்ட காலச் சமூகவாழ்வை, வரலாற்றைச் சொல்லும் உண்மைக்கதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக்கட்ட ஈழப்போரில் நடந்த சம்பவங்களை மையப்படுத்திய ஆவணமாகவே இதைப் பார்க்கலாம். 'நான் போர்தின்ற மண்ணில் இருந்து மீண்டவன். சொல்லிலடங்கா வலிகளையும், வேதனைகளையும் அனுபவித்தவன். இதனால் நான் எழுத வேண்டிய கதைகளும், கவிதைகளும் நிறையவே இருக்கின்றன' என்று "ஆறிப்போன காயங்களின் வலிகள்" (2021) எனும் கவிதைத்தொகுப்பின் முன்னுரையில் கூறியிருந்தேன். அதன் ஒரு செயற்பாடாகவே இந்நாவல் பூர்த்தியாகியுள்ளது என நினைக்கிறேன்.

இப்படைப்பு உதயமாவதற்குத் தூண்டுகோலாக இருந்த தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் ம. இரகுநாதன் அவர்களுக்கும், இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மதிப்புமிகு தகைசால் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், இந்நூலிற்கு வெளியீட்டுரை வழங்கிய யேர்மனி – தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், பொ. சிறீஜீவகன் அவர்களுக்கும், இந்நாவலை நான் எழுதிக்கொண்டிருந்தபோது 'தம்பி நல்ல விடயம். இது எழுத வேண்டிய கதை. எழுது' என்று ஆர்வத்தைத் தூண்டிய தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன் அவர்களுக்கும், இந்நாவலின் நூலுருவாக்கப் பணியின்போது கரிசனையுடன் ஆலோசனைகள் கூறிய தமிழ்த்துறைப் பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் மற்றும் பண்டிதர், கலாநிதி செ. திருநாவுக்கரசு அவர்களுக்கும், இந்நாவற் படைப்பினைச் சிறப்புற வெளியீடு செய்யும் யேர்மனி – தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முருகையா சதீஸ் (கவிஞர் முல்லை),**
**உதவி விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை,**
**கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**15. 06. 2022.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01

அன்று மாலை நேரம் இருக்கும், ஊரே பீதியில் உறைந்தது. மக்கள் எல்லோரும் செய்வதறியாது பதுங்குகுழிகளுள் காப்பெடுத்துக் கொண்டனர். மன்னாகண்டல் பக்கமிருந்து வந்த எறிகணைகளின் இரைச்சல் தலைக்குமேலால் கூவும் பொழுதே, அருகில் எங்கேயோதான் விழப்போகிறது என மனம் எச்சரிக்கை தந்தது. சிறிது நேரத்தில் அவை கைவேலிக் காவலரணைத் தாண்டிச் சாலை ஓரத்தில் விழுந்து வெடித்ததாய்ச் சொன்னார்கள். இராணுவத்தின் இலக்கு காவலரணாய்த்தான் இருந்திருக்க வேண்டும். அன்றுதான் புதுக்குடியிருப்பு மக்கள் எறிகணைத் தாக்குதலை முதன் முதலில் எதிர்நோக்கியிருந்தார்கள். ஓமந்தை, நெடுங்கேணி, அளம்பில், செம்மலை, குமுழமுனை, வற்றாப்பளை என எல்லா இடங்களிலிருந்தும் சனங்கள் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்புப்பகுதிக்கு வந்து, ஆங்காங்கு தமக்கு வசதியான இடங்களில் தறப்பாழ் கொட்டில்களை அமைத்துத் தங்கிருந்தனர். குமுழமுனையில் இருந்து வந்த எங்களின் சொந்தக்காரர்கள் சிலரும் எங்கள் வீட்டுக்கருகில் இவ்வாறே தங்கியிருந்தனர். வன்னிச் சனத்திற்கு இப்படி ஒரு நிலை வருமென யாருமே நினைத்திருக்கவில்லை.

> "எங்கட பெடியள் விடமாட்டாங்கள்..! எங்கட பெடியளை உவையள் எங்க அடிக்கிறது..! தொண்ணூற்றாறில முல்லைத்தீவில நல்ல அடிவாங்கினவையள் மறந்திட்டினமோ?... திட்டம் இருக்குக் கொஞ்சம் கிட்ட வரட்டுமெண்டு பெடியள் பிளான்பண்ணிட்டாங்கள் போலை கிடக்கண்ண"

செல்லாண்ணை வீதியில் யாருடனோ பேசிக்கொண்டு போகும் அரவம் எனக்கு விளங்கியது. இப்பிடித்தான் எங்கள் சனங்கள் எல்லோரும் தம் ஊரை விட்டு வரும்போது மனதில் நினைத்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்புப் பகுதி, போராளிகளின் கோட்டையாக இருந்ததால் அதைவிட்டுப் போக வேண்டிய சூழல் வராது என்றும், கொஞ்ச நாட்களில் மீண்டும் தங்கள் ஊருக்குப் போய்விடலாம் என்றுமே எல்லோரும் எண்ணியிருந்தார்கள். நான் சின்ன பெடியனாக இருந்ததால் இந்த இடப்பெயர்வுச் சூழல் ஆரம்பத்தில் எனக்கு மகிழ்ச்சியையே தந்தது. ஏனெனில் பள்ளிக்கூடங்களிலெல்லாம் சனங்கள் இடம்பெயர்ந்து தங்கியிருந்ததால், பள்ளிக்கூடம் நடைபெறவில்லை. எங்களுக்கு அந்தச்சூழலில் படிக்கவேண்டிய அவசியமும் இருக்கவில்லை. விமானத்தாக்குதல்கள், எறிகணைத்தாக்குதல்களில் இருந்து உயிர்தப்பி வாழ்வதே எமது இலக்காகவிருந்தது. கைவேலிக் காவலரணுக்கப்பால் விழுந்த எறிகணைகளால் பயந்துபோன மக்கள், அன்று மாலையே தம் உடைமைகளோடு தேவிபுரம், வள்ளிபுனம், சுதந்திரபுரப் பக்கமென இடம்பெயரத் தொடங்கினர். புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் விழுந்த முதல் எறிகணைத்தாக்குதல் இதுவென்பதால் புதுக்குடியிருப்புப் பிரதேசமே பதற்றத்தில் இருந்தது. அன்றைய இரவில் உழவு இயந்திரங்களின் சத்தங்களும், மாட்டுவண்டில் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணமே இருந்தன. எங்களுக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. எல்லோரும் வீட்டு முற்றத்தில் இருந்து கதைத்துக்கொண்டிருந்தோம்.

> "நாளைக்கு விடிய மூட்டை முடிச்சுக்களைக் கட்டவேண்டியதுதான்... எல்லாச் சனமும் போகுதுகள்போலக் கிடக்கு... இனி இஞ்சயிருந்து வேலையில்லை. இந்த நேரத்தில ஊரோட ஒத்தோடுவதுதான் நல்லது..."

அப்பா கூறிய வார்த்தைகள் எனது மனதை வாட்டிக்கொண்டே இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்பிடி எங்கட வீட்டை விட்டிற்றுப் போவன். நான் சின்ன வயசில இருந்து ஓடியாடித் திரிந்த மாலதி மைதானம், றோட்டுக்கள், உலகளந்த பிள்ளையார் கோவில், பள்ளிக்கூடம் எல்லாத்தையும் இனி எப்ப பாப்பன்?.. என்ரை பக்கத்துவீட்டு நண்பர்கள இனி எப்ப சந்திப்பன்! அவர்களோட இனியெப்ப விளையாடுவன்?.."

என் மனதோடு மனதாக என்னையறியாமலே நான் பேசிக்கொண்டிருந்தேன். அன்றிரவு முழுதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. அம்மா, அப்பாக்கள் 1990ஆம் ஆண்டு திருகோணமலை – திரியாயிலிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவுக்கு வந்து, புதுக்குடியிருப்பில் குடியேறியிருந்தார்கள். இதனால் திருகோணமலை எப்படியிருக்குமென்று எனக்குத் தெரியாது. நான் பிறந்தது புதுக்குடியிருப்பு என்பதால் இம்மண்மீது அளவு கடந்த பாசம் இருந்தது. அதனால்தான் என்னவோ இம்மண்ணை விட்டுப்போக மனது விரும்பவில்லை. போய்த்தான் ஆகவேண்டிய சூழல் என்னசெய்வது?

சேவல் கூவும் சத்தம், முற்றத்தில் தூங்கிப்போன எல்லோரையும் எழுப்பிவிட்டது. அன்று தைப்பொங்கல். 2009. 01. 15 ஆம் திகதி என்பது எனக்கு நன்றாகவே நினைவிருக்கிறது. வீட்டில் பொங்கவே இல்லை. அயல் வீடுகளிலும் யாரும் பொங்கியதாகத் தெரியவுமில்லை. புத்தாடை புனைந்து, நண்பர்களோடு உலாச்செல்லும் இந்நாள் இப்படி அமைந்துவிட்டதே என்பதும் மனதை வாட்டியது. காலை ஏழு மணியிருக்கும், அப்பாவும் நானும் இரண்டு சைக்கிள்களில் தேவையான சாமான்களைக் கட்டிக்கொண்டு தேவிபுரக்கொலனிப் பக்கம்நோக்கிக் கால்நடையாகப் புறப்பட்டுச் சென்றோம். குடும்பத்தினர் எமக்குப் பின்னே நடையாய்ப் பின்தொடர்ந்து கொண்டிருந்தனர். அன்று தைப்பொங்கல் என்பதால் உலகளந்த பிள்ளையார் கோவிலில் யாரோ ஓரிருவர் பொங்கிக்கொண்டிருந்தனர். ஆளரவம் அற்ற இடமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலடி காணப்பட்டது. முன்பெல்லாம் கோயிலில் பொங்கல் என்றால் எங்களுக்குக் கொண்டாட்டம்தான். மோதகம், பொங்கல்வடை வாங்குவதற்கென்றே நான் கோயிலுக்குச் சென்றுவிடுவேன். என்னைப்போல எத்தனை சின்னப்பெடியங்களை இந்தக்கோவில் கண்டிருக்கும்? பூசை முடியும்வரை கோவிலின் வெளிவீதியில் நண்பர்களோடு கிரிக்கெட் விளையாடிவிட்டு, பூசை முடிந்தவுடன் ஓடோடிச்சென்று பொங்கல் வாங்கியுண்ணும் அந்தச் சந்தோசம் இன்று பறிபோனதை மனதுக்குள் நினைத்துக்கொண்டு, வீதியில் நின்றபடியே பிள்ளையாரை வணங்கிவிட்டு நகர்ந்தேன்.

> "உலகளந்தவா! இதென்ன சோதனை.. இது எத்தினை நாளைக்கப்பா தொடரும். போனோடன கொஞ்சநாளுக்குப் பிறகு திரும்பி வாறத்துக்கு நீதானப்பா வழி செய்ய வேணும்"

அம்மாவின் வேண்டுதல் எல்லோருக்குமே விளங்கியது. எங்களைப் போலத்தான் எத்தனை பேர் வேண்டியிருப்பார்கள்? எல்லோருக்கும் பிள்ளையார் எப்படி அருள்புரிவார்? சனமெல்லாம் இடம்பெயர்ந்தபின் பிள்ளையார் மட்டுமே தனியாக இருக்கப்போகிறாரே. ஐயராக்களும் இன்றோ அல்லது நாளையோ வெளிக்கிட்டுவிடுவார்கள். பிறகு யார்தான் பூசை வைப்பார்கள்? யார்தான் பொங்கல் படைப்பார்கள்? என்று மனதுக்குள் பல கேள்விகள் தோன்றிமறைந்தன. சைக்கிளைத் தள்ளியபடி புதுக்குடியிருப்புப் பரந்தன் வீதிக்கு ஏறிவிட்டோம். சனமெல்லாம் இரவிரவாகப் புறப்பட்டுவிட்டதால், வீதிகளில் சன நடமாட்டம் ஓரளவாகவே இருந்தது. எறிகணைகள் எங்கோ தொலைவில் வெடிக்கும் சத்தங்களும் கேட்டுக்கொண்டே இருந்தன. ஓரிரண்டு எறிகணைகள் புதுக்குடியிருப்புச் சந்திப்பக்கம் விழுந்து வெடித்ததாகவும், காயப்பட்ட நாலைந்து பேர் புதுக்குடியிருப்பு ஆதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்றும், அப்பாவுக்கு யாரோ ஒருவர் கூறிவிட்டுச் சென்றார்.

"என்னப்பா வண்டு இரவிரவாச் சுத்துறான். துலைவார், நாங்கள் போற பக்கம்தான் துலைக்கப்போறாங்களோ தெரியா?"

"வாய மூடிக்கொண்டு கெதியாய் வாவண... காவல்துறைப் பொயின்ரைக் கழிஞ்சால் பயமில்லை. வேகமா நடையக்கட்டுங்கோ.."

அம்மாவின் கேள்விக்கு அப்பா பதில்கொடுத்தபடியே நடையின் வேகத்தை அதிகரித்தார். அப்பா ஜென்ஸ் சைக்கிளில் இரண்டு சூட்கேஸ் பெட்டிகளையும், தேவையான சட்டிபானைகளையும் கட்டியிருந்தார். நான் லேடிஸ் சைக்கிளில் இரண்டு உரப்பைச் சாமான்களைக் கட்டியிருந்தேன். பெரும்பாலும் அதற்குள் உடுப்புக்கள்தான் இருந்திருக்க வேண்டும். அம்மா, தங்கச்சியைத் தூக்கிக் கொண்டு கையிலே ஆவணங்கள் அடங்கிய ஒரு பையுடன் வந்துகொண்டிருந்தார்.

வீதிக்குத் தார் போட்டிருந்தாலும் அதன் கோலம் வெறும் கிரவல் பாதையாகவே காட்சியளித்தது. எங்களைப் போலப் பலர் சைக்கிள்களில் சாமான்களைக் கட்டியபடி இவ்வழியே நகர்ந்துகொண்டிருந்தனர். கைவேலிக் காவல்துறையின் அரணைக் கடந்து சென்றுகொண்டிருந்தபோது நேற்று விழுந்துவெடித்த எறிகணைகளின் பாதிப்பைக் கண்ணுற்றேன். கிரவெல் வீதியின் இருமருங்கிலும் வளர்ந்திருந்த பெரிய முதுரை மரங்கள் முறிந்து விழுந்திருந்தன. அவற்றின் கிளைகள் கருகியபடியும், பட்டைகள் உரிக்கப்பட்டனவாகவும் காட்சியளித்தன. எறிகணைகளின் உக்கிரத்தைக் காட்டும் இக்காட்சிகளைப் பார்த்தபடியே நகர்ந்துகொண்டிருந்தோம். காவல்துறைக் காவலரணுக்கு முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த, காட்டுராணி அக்காவின் வளவும் கருகிப்போய் இருந்தது. ஒரு மாதத்திற்கு முன்னர் கிபீர்த்தாக்குதலால் வந்த விளைவே இவை என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஏனெனில் ஒருநாள் நாங்கள் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த போது, காலை பத்து மணியளவில் வந்த நான்கு கிபீர் விமானங்கள் கைவேலிப் பகுதியில் அமைந்துள்ள வெண்புறா நிறுவன வளாகத்திற்குத் தாக்குதலை மேற்கொண்டதோடு, அருகில் உள்ள காவல்துறைக் காவலரணுக்கும் தாக்குதலை மேற்கொண்டிருந்தன. இதனால் இலக்குத் தவறிவிழுந்த விமானக்குண்டுகள் அயற்சூழல்களில் விழுந்துவெடிக்க நேரிட்டன. காட்டுராணி அக்காவின் வீடும் அத்தகைய இலக்குத் தவறிய கிபீர்க் குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்டிருந்தது.

நாங்கள் பள்ளிக்கூடத்திற்குப் போகிற காலங்களில், 'இண்டைக்குப் பள்ளிக்கூடம் நடக்கக் கூடாது' என்று கடவுளை வேண்டிக்கொள்வது வழமையாகவே இருந்தது. என்னைப் போலவே அன்றைய சூழலில் வாழ்ந்த மாணவர்களும் வேண்டியிருப்பர். ஏனென்றால் மக்களின் குடியிருப்புப்பகுதிகளில் பரவலாக இயக்கத்தின் சிறியதும் பெரியதுமான முகாம்கள் அமைந்திருந்ததால், இராணுவத்தின் கிபீர்க்குண்டுகள் இலக்குத்தவறி மக்களின் குடியிருப்புக்கள்மீதே விழுந்து வெடிப்பதுண்டு. நான் புதுக்குடியிருப்பு வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயத்தில் ஏழு, எட்டாம் தரங்களில் படித்துக்கொண்டிருந்த காலம் அது. வேணாவிலில் போராளிகளின் முகாங்கள், பாடசாலையை அண்டிய வனப்பகுதிகளில் அமைந்திருந்ததால் விமானத்தாக்குதல்களுக்குக் குறைவேயில்லை. இதனால் பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்புவதற்குப் பெற்றோரும் விரும்புவதில்லை. கிபீர்த் தாக்குதல்கள் அயற்சூழலில் நிகழ்ந்தால்கூடப் பள்ளிக்கூடமும் முடிவடைந்து விடும். பதுங்குகுழியும் வாழ்க்கையுமாகவே பள்ளிப் பருவம் நகர்ந்தது. இதனால் அன்றையபொழுதுகள் எமக்குத் தற்காப்பையே கற்றுத்தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உலகளந்த பிள்ளையாரே இண்டைக்கு வண்டு சுத்தவேணும்.. கிபீர், மிக் வரவேணும்.. பள்ளிக்கூடத்தில பாடம் ஒண்டும் நடக்கக்கூடா.. நீதானப்பா அருள்புரியோனும். கிபீர் வந்து பக்கத்தில எங்கயும் குண்டு போடோனும். கடவுளே நீ உண்மை எண்டால் இது நடக்கோனும்”

இவ்வாறான வேண்டுதல்கள் பள்ளிக்கூடம் போகும் போது நிகழ்த்தப்படுவதுண்டு. வண்டு தாழ்வாகச் சுத்தினால் கிபீர் வரப்போகிறான் என்பதை அனுபவம் கற்றுத்தந்திருந்தது. வண்டு சுத்தும் போதெல்லாம் ஒவ்வொரு வகுப்பும், தத்தம் வகுப்புக்குரிய பதுங்குகுழிகளுள் பதுங்கிவிடும். கிபீர் வந்து தாக்குதலை நிகழ்த்திச் செல்லும்வரை பதுங்குகுழிக்குள்ளேதான் கற்றல் நடவடிக்கைகள் நிகழ்த்தப்படுவதுண்டு. கிபீர் வரப்போவதை ஐந்து நிமிடங்களுக்கு முன்னரே நாங்கள் அறிந்துவிடுவோம். கிபீரின் வருகையை எதிர்வுகூறுவதாகப் போராளி முகாங்களில் மணி ஒலிக்கப்படுவது வழமையாக இருந்தது. மணி ஒலிக்கப்பட்டு ஐந்து நிமிடங்களில் கிபீர் அல்லது மிக் ரக விமானங்கள் எமது வான்பரப்பிற்குள் வந்துவிடும். இதனால் வண்டு சுத்தினாலும் பயமில்லாமல் சில சந்தர்ப்பங்களில் வகுப்பறைகளில் பாடம் நடத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. ஒவ்வொரு வகுப்புக்களுக்கும் ஒவ்வொரு பதுங்குகுழிகள் வெட்டப்பட்டிருந்தன. அவை ஆரம்பத்தில் திறந்தநிலைப் பதுங்குகுழிகளாகவே இருந்தன. பின்னர் விமானத்தாக்குதல்களின் விதத்தினைப் பொறுத்து, ஆங்கில எல் மற்றும் ரீ வடிவப் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டதுடன் மூடுநிலையிலுள்ள பதுங்குகுழிகளும் அமைக்கப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் விமானத்தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட குண்டுகள், நிலத்தில் விழுந்து வெடிக்கும் தன்மை உடையனவாக இருந்ததால், குண்டுகள் வெடித்துச் சிதறும் போது நிலத்தின் மேற்பகுதியில் நிற்பவர்களுக்கே பாதிப்பை அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தின. இந்தவகையான விமானக்குண்டுத் தாக்குதல்களுக்காகவே திறந்த நிலையில் ஆங்கில எல் மற்றும் ரீ வடிவப் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டன. அதுமட்டுமன்றிப் பதுங்குகுழிகள் இல்லாத இடங்களில் அகப்பட்டுக்கொண்டால் உடலை நிலத்தில் சமாந்தரமாகக் கிடத்தி இவ்வகையான தாக்குதல்களிலிந்து தப்பித்துக் கொள்வார்கள்.

அடுத்தநிலை விமானத்தாக்குலாக 'எயார் சொட்' என்ற வகைத் தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டார்கள். விமானத்தால் இலக்கு நோக்கி ஏவிவிடப்பட்ட குண்டுகள், நிலத்தை வந்தடைய முன்னர் நிலத்திற்கு மேலே குறிப்பிட்டளவு தூரத்தில் வெடித்துச் சிதறுவதால் திறந்த நிலையில் உள்ள பதுங்குகுழிகளில் உள்ளவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தின. இதனாலேயே இத்தாக்குதல்களில் இருந்து தப்பிக்க மூடியநிலைப் பதுங்குகுழிகளை மக்கள் அமைத்திருந்தார்கள். மூடிய நிலைப் பதுங்குகுழிகளில் இருப்பதால் எவ்விதப் பாதிப்பும் இன்றித் தப்பும் நிலை இருந்தது. அடுத்த நிலைத் தாக்குதலாக இராணுவத்தினர் விமானத்தினால் 'ரிலேக்' குண்டுத்தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். போர் மும்முரம் பெற்ற அச்சூழலில் 'எயார் சொட்', 'ரிலேக்' குண்டுத்தாக்குதல்களே விமானங்களால் அதிகம் மேற்கொள்ளப்பட்டன. 'ரிலேக்' குண்டுத்தாக்குதலில், குண்டுகள் நிலத்தை ஊடறுத்துப் பல மீற்றர்கள் ஆழத்திற்குச் சென்று வெடிப்பதனால் பெரும் அதிர்வுகள் ஏற்படுகின்றன. இவ்வதிர்வுகள்மூலம் திறந்த மற்றும் மூடிய நிலையில் உள்ள பதுங்குகுழிகள் இடிந்துமூடிப்படுவதால் பதுங்குகுழிகளுக்குள் இருப்பவர்களுக்குப் பெரும்பாதிப்பு ஏற்படுகின்றன. இவ்வாறான விமானத்தாக்குதல்களை எதிர்கொண்ட சந்தர்ப்பங்கள் எமக்குப் புதிதல்ல.

பாடசாலை நேரங்களில் கிபீர் வந்து அயற்சூழலில் இருக்கும் போராளிகளின் முகாங்களுக்குத் தாக்குதல்களை நிகழ்த்திவிட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றவுடன் பாடசாலை முடிவடைந்து விடுவதால், நண்பர்கள் கூட்டத்தோடு தாக்குதல் நடைபெற்ற இடத்திற்குச் சென்று பார்வையிடுவது இயல்பாகிப்போனது. முகாங்களுக்கு அருகில் உள்ள குடியிருப்புக்களின் மேலே அவை விழுந்து வெடிப்பது வழக்கமாயிருக்கும் நிலையில், அங்கு விழுந்து வெடிக்காமல் கிடக்கும் குண்டுகளையும் பார்வையிடுவதுண்டு. ஆனாலும் அடுத்த தாக்குதலுக்குத் தகவல் சேகரித்தபடி வண்டு சுத்தியபடியே இருக்கும். பயம் அறியாத வயதில் விளையாட்டுத்தனத்தோடு திரிந்த அக்காலம் எமக்கு வசந்தமாய்த்தான் இருந்தது. இப்படித்தான் முன்பும் காட்டுராணி அக்காவின் வீடு, விமானத்தாக்குதலுக்கு உட்பட்டபோது நண்பர்களோடு பார்க்க வந்திருந்தேன். இப்போது பார்க்கும் போதும் எவ்வித மாற்றமின்றி அது அப்படியே இருந்தது. காட்டுராணி அக்காவின் வீட்டு முற்றத்தில் 'ரிலேக் குண்டு' வெடித்ததால் பெரிய பள்ளம் ஏற்பட்டுப் பல அடி ஆழங்களிற்குத் தண்ணீர் இருந்தை நான் பார்த்திருக்கிறேன். அவ்நினைவுகள் மீளவும் கண்முன்னே காட்சிகளாய்த் தெரிந்தன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02

எங்கிருந்தோ வந்த எறிகணைகள் சில, நாங்கள் பயணித்துக்கொண்டிருக்கும் பாதையோரமாக வந்து வெடித்தன. காதுகளைச் செவிடாக்கும் சத்தம். பழைய நினைவுகளின் மீட்டல்களோடு சென்றுகொண்டிருந்த என்னை அத்தாக்குதல் நிலைகுலைய வைத்தது. எம்மை அறியாமலேயே நாம் எல்லோரும் அப்படியே நிலத்திலே குந்திவிட்டோம். வீதியிலே சமான்களைக் காவிக்கொண்டு சென்றவர்கள் அப்படியே வாகனங்களை நிறுத்திவிட்டும், சாமான்களைப் போட்டுவிட்டும் வீதியோரமாகக் கிடந்த பதுங்குகுழிகளில் காப்பெடுத்துக் கொண்டனர்.

"தம்பீ டேய் பதுங்குங்கோடா... சைக்கிளை அப்பிடியே போட்டிற்றுக் குப்பறக் கிடவடா...."

அம்மா சொல்லி முடிக்கும்போதே தொலைவில் வெடிக்கும் சத்தங்கள் கேட்டன.

"டும் டும் டும் டும் டும் டும் டும் டும் டும்......."

"அப்பா.... திருப்பியும் ஷெல்லடிச்சிட்டான்போல கிடக்கு எனப்பா..? நேற்றும் இப்பிடித்தான் கேட்டது.. அதுதான் தலைக்குமேலால போய் வெடிச்சது எனப்பா..?"

"ஓம் மோனே...முதல் எல்லோரும் குப்பறக் கிடவுங்கோ... திருப்பியும் குத்திறான்போல கிடக்கு எழும்பாதேங்கோ...யாரும் எழும்பாதேங்கோ"

அப்பா சொல்லி முடிக்கும் முன்னரே கூவிக்கொண்டு வந்த எறிகணைகள் பல ஆங்காங்கு வீதிக்கரைகளில் வெடித்துச் சிதறின. ஒரே புகை மூட்டமாமாகவே காட்சியளித்தது. வீதிக்கரைகளில் பதுங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்த பலபேருக்குக் காயம். வீதிகளில் கிடந்தவர்கள் சிதறுண்டு ஓடினார்கள். மரங்கள் பல முறிந்து வீதிப்பயணத்தைத் தடைசெய்தன. அதையும் பொருட்படுத்தாது, காயப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு, புதுக்குடியிருப்பு வைத்தியசாலையைநோக்கி வாகனமொன்று வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

"எல்லாரும் எழும்புங்கோ இனி நிண்டு வேலையில்லை... இது சிக்கலான இடம்... நடையக் கட்டுங்கோ வேகமா..."

அப்பாவின் வார்த்தைகளைக் கேட்டதுந்தான் தாமதம் விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினோம். பயத்தின் காரணமாகச் சைக்கிளில் இருந்த பாரம் கூடக் குறைவாகவே தெரிந்தது. சனங்கள் எல்லாம் எங்கு போகிறோம் எனத் தெரியாமல் பதறிக்கொண்டு திரிந்தார்கள். எவ்வளவு வேகமாக நடந்தாலும் தாக்குதல் வலயம் இன்னும் கழியவேயில்லை. ஆம், இப்போது வெண்புறா முகாமடிக்கு வந்துவிட்டோம். அந்த முகாம் வளாகத்தைக் கண்ணுற்றபடியே பயணித்துக்கொண்டிருந்தேன். அந்தக் காட்சியை என்னால் எப்படிச் சொல்லமுடியும்? அந்த வளாகமோ போர்வெடியின் கந்தகத்தினால் கருகிப்போய் இருந்தது. மரங்கள் எரிந்து வரண்டுபோய் இருந்தன. கிளைகள் முறிந்தபடி, பட்டைகள் உரிந்தபடி, தும்படிக்கப்பட்டுக் காணப்பட்டன. அங்கிருந்த கட்டடங்களின் கூரைகள் சிதறுண்டு கிடந்தன. கட்டடங்கள் அழிவடைந்து குண்டுச் சன்னங்களால் நிர்மூலமாக்கப்பட்டிருந்தன. அந்த வளாகத்தின் வேலித்தகரங்களெங்கும் குண்டுச்சிதறல்கள் கிழித்த அடையாளங்களே தென்பட்டன. உயிர்ப்புள்ள மரங்களையே கண்ணுகுத்தெரிந்த தூரம்வரை நான் காணவில்லை. எல்லாம் கந்தக நெருப்பால் கருகிப்போய் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் வேணாவில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் நாட்களில் அவ்வப்போது வந்த விமானங்கள் அதிகமான தடவைகள் இங்குதான் தாக்குதல்களை நடத்தியிருந்தன. இதனால் எழும் புகை மூட்டங்களைப் பள்ளிக்கூட மைதானங்களில் இருந்து பார்த்திருக்கிறோம். வேணாவில் பள்ளிக்கூடத்தில் ஒன்பதாம் வகுப்பு வரையே இருந்தது. இதனால் மாணவ தலைவர்களுள் ஒருவராக நானும் நியமிக்கப்பட்டேன். வண்டு சுத்தும் போதோ, கிபீர் வரப்போவதற்கான மணி ஒலித்தவுடனோ அல்லது கிபீர் வந்தவுடனோ எமக்குக் கீழே உள்ள வகுப்பு மாணவர்களைப் பதுங்குகுழிகளுக்குள் அனுப்பி, அவர்களைக் காப்பெடுக்கத் தயார்ப்படுத்துவது எங்கள் பணியாக இருந்தது. இதன் காரணமாக நாங்கள் எப்போதும் மைதானங்களில் அமைந்துள்ள திறந்த நிலைப் பதுங்குகுழிகளின் அருகில் நின்று நடப்பவற்றைக் கண்காணிப்போம். அங்கிருந்தபடியே மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தகவல்களை வழங்கிக்கொண்டிருப்போம். மிகக்கிட்டிய தூரத்தில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும்போதே பெரும்பாலும் என் நண்பர்கள் கூட்டம் பதுங்குகுழிகளுள் பதுங்குவதுண்டு.

எத்தனை கிபீர் அல்லது எத்தனை மிக்ரக விமானங்கள் வந்து வட்டமிடுகின்றன?... எங்கிருந்து குத்துகிறான்? எத்தனை குண்டுகள் போடுகிறான்? ... அவை எங்கு விழுந்து வெடிக்கின்றன?... என்று எல்லாத் தகவல்களையும் நாங்களே நேரடி அவதானங்களூடாகச் சொல்லிக்கொண்டிருப்போம். அதனால் பள்ளிக் கூடத்தில் எங்களுக்கென்று தனித் திமிர் இருந்தது. கிபீர்த்தாக்குதல்கள் நடக்கும்போது நாங்கள்தான் பாடசாலையை நிர்வகிக்கிறோம் என்ற எண்ணம் தலைதூக்கியிருந்தது. அதிபர், ஆசிரியர்கள் ஏனைய சிறிய வகுப்பு மாணவர்களைக் காப்பெடுக்கவைப்பதில் பெரும் அக்கறைகாட்டி நிற்பார்கள். நாங்கள் கொஞ்சம் வளர்ந்த பெடியள் என்பதால் நாங்கள் தக்கசமயங்களில் நேரமறிந்து காப்பெடுத்துக் கொள்ளுவோம் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அதனால் எங்களைச் சுதந்திரமாகவே விட்டிருந்தனர். ஆனாலும் சில நேரங்களில் கண்டிக்கப்படுவதும் உண்டு. அந்தப் பள்ளி நாட்களில் நடந்த விமானத்தாக்குதல்களில், நான் இப்போது பார்த்துக்கொண்டு போகும் இவ்வெண்புறா முகாமும் பெரும் பாதிப்பைச் சந்தித்திருந்தது. ஒரு நாள் காலையில் பள்ளிக்கூடத்தில் காலைப் பிரார்த்தனை நடந்துகொண்டிருக்கும்போது வந்த ஆறு மிக்ரகவிமானங்கள், வானத்தில் தாழப்பதிந்து வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அருகில்தான் தாக்குதலை மேற்கொள்ளப்போகிறான் என்பதை அறிந்து, எல்லோரும் மைதானங்களில் இருந்த பதுங்குகுழிகளுள் காப்பெடுத்துக் கொண்டோம்.

தாழ்வாகப் பறந்த விமானங்கள் வெண்புறா முகாமைத் தாக்கியழிப்பதாக உடனே தெரியவில்லை. மிக அண்மையில் குண்டுகள் விழுந்து வெடிப்பதாகவே தோன்றின. விழுந்து வெடித்த குண்டுகளால் நிலம் அதிர்ந்தது. விமான இரைச்சல் காதுகளை அடைத்தது. வெடித்துச் சிதறிய குண்டுச்சிதறல்களில் ஒன்று, எனக்கருகில் பதுங்கியிருந்த நண்பனின் காலை அறுத்தது. அது அவனுக்குத் தெரிய வில்லை. இரத்தம் பெருகுவதைக் கண்ணுற்றபோதே அவன் காயப்பட்டதை நாம் அறிந்துகொண்டோம். குண்டுகள் வெடித்துச் சிதறும்போது எரிதழலாக வரும் சிதறல்கள், வரும் வேகத்தில் உடற்பாகங்களை அறுப்பது உடனடியாக எமக்குத் தெரிவதில்லை. காயம்பட்ட பகுதிகளில் இருந்து பெருகும் குருதியாலும், எரிவினாலுமே காயப்பட்டதை அறியமுடிந்ததெனக் காயப்பட்டவர்கள் சொல்லியிருக்கிறார்கள். காயப்பட்டவனை உடனே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. விமானங்கள் சென்றபின்புதான் கொண்டுசென்றார்கள். அதற்கிடையில் குருதி வெளியேறி அவன்மயங்கி விட்டான். இச்சந்தர்ப்பம் என்றைக்கும் என்னால் மறக்க முடியாது. அன்றைய தாக்குதல்கள் வெண்புறா முகாம்மீதே மேற்கொள்ளப்பட்டதாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளில் பயணித்துக்கொண்டிருந்த பொதுமக்கள் பலர் இறந்ததுடன் பலர் காயப்பட்டதாகவும் ஊருக்குள் செய்தி வந்தது. வெண்புறா நிறுவனம் கால், கைகளை இழந்தவர்களுக்குச் செயற்கைப்பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். அதனை இயக்கமே நிர்வகித்து வந்தது. போரில் அவயங்களை இழந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்களையும், போராளிகளையும் மீள் இயங்கவைத்ததே இந்நிறுவனத்தின் உற்பத்திகளென்றே கூறலாம். பள்ளிக்கூடத்தில் காவலாளியாக இருந்த அண்ணன் ஒருவரும் பொய்க்கால் போட்டிருந்தார். அவரும் இந்த நிறுவனவுற்பத்திச் செயற்கைக்காலைத்தான் போட்டிருந்தாரோ? என எண்ணத்தோன்றுகின்றது. இந்த நினைவுகள் இப்போது வெண்புறா நிறுவன வளாகத்தைப் பார்க்கும்போது மனதில் வந்து போகின்றன.

கால்கள் வீதியில் வேகமாக நகர்ந்துகொண்டே இருந்தன. அப்பாவின் நடைக்கு ஈடுகொடுக்கவே முடியவில்லை. அம்மாவும் தங்கச்சியைத் தூக்கிக் கொண்டு எப்படித்தான் இவ்வாறு நடக்கிறாவோ..? என எண்ணினேன். இப்போது கைவேலிப் பள்ளிக்கூடத்தடிக்கு வந்து விட்டோம். பள்ளிக்கூடம் சனங்களால் நிரம்பியிருந்தது. முல்லைத்தீவு, முள்ளியவளைப் பக்கமிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இந்தப்பள்ளிக் கூடத்தில்தான் தஞ்சமடைந்திருந்தார்கள். வகுப்பறைகள் எல்லாம் நிரம்பியிருந்தன. மைதானத்திலும் தறப்பாழ்களால் கொட்டில்கள் அமைத்து மக்கள் தங்கியிருந்தனர். இனி எங்கு போவோம்? என்ற ஏக்கமே அவர்களின் முகங்களில் தென்பட்டது. இன்னொரு புறத்தில் திரிபோசாப் பைகளுக்காகக் குழந்தைகளையுடைய பெற்றோர்கள் வரிசையில் தூங்கிக்கொண்டிருந்தனர். இந்த எறிகணைத்தாக்குதல்களிலும் இவர்கள் இப்படி நிற்பது அவர்களுக்குப் புதிதல்ல. இக்காலங்களில் பொது நிறுவனங்கள் மக்களுக்கு இயன்றளவு உலருணவுப் பொருட்களை வழங்குவது பெரும் உதவியாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மக்களைப் பார்க்கும்போது இப்படித்தான் நாங்களும் ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் தங்கப்போகிறோமோ? என்று மனம் கேள்வி எழுப்பியது.

“அப்பா நாங்கள் இப்பிடியே எங்கயப்பா போறம்?”

“நாங்கள் இப்ப தேவிபுரம் கொலனிப்பக்கம் போறம். அங்காலதான் இப்ப எல்லாச் சனங்களும் போகுதுகளாம். ஏனெண்டால் பரந்தன் பக்கத்தாலயும் சனங்கள் இங்காலதான் வந்து கொண்டிருக்குதுகள்”

“அப்ப நாங்களும் அங்கயிருக்கிற பள்ளிக்கூடத்திலயோ தங்கப்போறம்?”

“உங்கினேக்க இருக்கிற பள்ளிக்கூடங்கள் எல்லாத்திலயும் சனங்கள் நிறம்பி வழியுது. இருக்க இடமிருக்காது. நாங்கள் தேவிபுரக்கொலனிப் பக்கம் போய், காட்டுக்கரைப்பக்கமாத் தறப்பாழக் கட்டிற்று இருப்பம்.”

“சரியப்பா”

என்னால் நடக்கவே முடியவில்லை. கால்கள் எல்லாம் நடந்து வலியெடுத்திருந்தன. என்ன செய்வது? நடந்துதானே ஆகவேண்டும். கைவேலி வயல்வெளிகளெல்லாம் கழிந்து தேவிபுரச்சந்திக்கு வந்துவிட்டோம். எங்கு பார்த்தாலும் உழவு இயந்திரங்களிலும், மாட்டுவண்டில்களிலும், சைக்கிள்களிலும் மக்கள் சாமான்களைக் கட்டிக்கொண்டு வீதிகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்தார்கள். கடைகளிலும் சாமான்களுக்காய் மக்கள் வரிசைகளில் நின்றுகொண்டிருந்தார்கள். ஆங்காங்கு எறிகணைகள் விழுந்து வெடித்துக்கொண்டே இருந்தன. வேவு விமானம் எந்த நேரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழப்பறந்து சுற்றிக்கொண்டேயிருந்தது. எங்கோ தொலைவில் விமானங்களின் இரைச்சல்களும் அதன் தாக்குதல்களின் எதிரொலிகளும் கேட்டுக்கொண்டேயிருந்தன. வன்னி நிலமே இப்போது அகதிநிலமாகுவதை உணர்ந்தேன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

நேரம் காலை ஒன்பது மணியைத் தாண்டிவிட்டது. தேவிபுரச் சந்தியிலிருந்து தேவிபுரக்கொலனிக்கு நகர்ந்தோம். அப்போது சந்தியிலிருந்து எழுநூற்றைம்பது மீற்றர் தூரமளவில் நடேசம்மான் திட்டம் எனும் குடியிருப்புப் பகுதி இருந்தது. அதனை நெருங்கும்போது கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு ஆலமரத்தின் கீழ் சனக்கூட்டம் தென்பட்டது.

"முனியப்பர் கோவிலடில நிறுவனம் ஏதோ சாமான் குடுக்கிறான் போலை கிடக்கு..."

அப்பாவின் வார்த்தைகள் காதில் விழுந்தன. அப்படித்தான் நானும் நினைத்தேன். ஆனாலும் அது பொய்த்து விட்டது. ஆலமரத்தின் கீழே சனங்கள் முனியப்பருக்குப் பொங்கிப்படையலிட்டு வழிபாடியற்றிக் கொண்டிருப்பது அருகில் சென்றபோதுதான் புலனானது. இன்று தைப்பொங்கல் என்பதால் சனங்கள் பொங்கிப்படைத்துக் கொண்டிருந்தார்கள்.

"அப்பா என்னாலை இனி நடக்கேலாது... வயிறும் பசிக்குது... கோவிலடில நிண்டு கொஞ்சம் ஆறிட்டு, பொங்கலும் சாப்பிட்டுப் போவமப்பா..."

"ம்...... சரி சரி ஆறிட்டுப்போவம்... கொஞ்சம் கரையாக் கொண்டே இணலுக்க சைக்கிள விட்டிற்று வருவம்"

நானும் அப்பாவும் ஆலமர நிழலில் சைக்கிள்களை நிறுத்திவிட்டு, முனியப்பரை வணங்கியபடி அதிலே சற்று அமர்ந்து விட்டோம். அம்மாவும் தங்கச்சியை எங்களருகில் இருத்திவிட்டுப் பொங்கல் வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து தந்தார். எல்லோருமாகப் பொங்கலை உண்டுவிட்டு இளைப்பாறினோம். புதுக்குடியிருப்பிலிருந்து நடந்து வந்ததால் தண்ணீர்த்தாகம் எடுத்திருந்தது. அம்மாவின் கைப்பைக்குள் இருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து மடமடவென்று தண்ணீரைக் குடித்துவிட்டு அப்படியே அம்மாவின் மடியில் படுத்துவிட்டேன். ஆலமர நிழலும், சில்லென்ற காற்றும் சொல்லியா தெரியவேணும்?

"சரி இப்பிடியே இருந்தால் இருக்கத்தான் வேணும். கெதியாய் எழும்பி நடையக் கட்டுங்கோ.."

அப்பா சொல்லி முடிப்பதற்குள்,

"கொஞ்சம் பொறுங்கோப்பா..கொஞ்சம் இருந்திட்டுப் போவம்... காலெல்லாம் நோகுது."

என்று சொன்னேன்.

"தம்பி இப்பிடியே இருந்தால் வேலையில்லை. இன்னும் கனதூரம் போகக் கிடக்கு... போனாத்தான் கொட்டிலப் போட்டிற்று பங்கரும் வெட்டலாம்.... இப்ப வரவரச் ஷெல்லடியும் கூடிற்று இருக்கு.... முதல்ல வெளிக்கிடுங்கோ."

என்று சொல்லியபடியே அப்பா எழுந்தார். பிறகென்ன? மறுபடியும் சைக்கிளை எடுத்து உருட்டிக்கொண்டு நடந்தோம். வீதி நெடுகிலும் சனங்கள் மூட்டை முடிச்சுக்களோடு நகர்ந்துகொண்டிருந்தனர். கோவிலடியில் இருந்து கொஞ்சத்தூரம் போயிருப்போம், யாரோ அப்பாவை அழைப்பதுபோல இருந்தது. "ஆசை ஆசை ...." என்று கந்தசாமியண்ணை ஓடிவந்தார். கந்தசாமியண்ணை பெரியப்பாவின் மகன். பெரியப்பாமாரின் பிள்ளைகள் எல்லோரும் அப்பாவை "ஆசை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே அழைப்பார்கள். நாங்களும் பெரியப்பாவை "ஆசை" என்றுதான் அழைப்போம். "ஆசை" என்பது அப்பாவின் சகோதரர்களை அழைக்கப் பயன்படுத்தும் உறவுமுறைச் சொல்லென்றே நினைக்கிறேன். கந்தசாமியண்ணையைக் கண்டவுடனே இனம்புரியாத ஒருவித மகிழ்ச்சி ஏற்பட்டது.

"ஆசை... ஆசை... உங்களைக் கோவிலடியில கண்டனான். சைக்கிளில இருந்த சாமான்களை இறக்கி வைக்கிறதுக்கிடையில இஞ்சால வந்திட்டியள்... அன்ரி எல்லாரும் எப்பிடி இருக்கிறியள்? கடைசியில நீங்களும் எழும்பவேண்டி வந்துட்டுது என...?"

"ஓஓஓ... நாங்கள் எல்லாம் நல்ல சுகம்தான். உதில பொங்கல் சாப்பிட்டிற்று வேளைக்கு வெளிக்கிட்டிற்றம். நீ எங்கை இப்ப இருக்கிறாய்?"

"நாங்கள் தர்மபுரத்தவிட்டு வந்து இருபதுநாள் இருக்கும். அப்பிடியே வந்து உடையார்கட்டில இருந்தம்.. ஷெல்லடி கொஞ்சம் மோசமாய் இருக்குது.... அதுதான் இங்காலை வந்திட்டம். மனிசி பிள்ளையள் எல்லாரையும் கோவிலடியில விட்டிற்று, உங்களைக் கூப்பிட்டுக்கொண்டு ஓடி வந்திட்டன்... உங்களைக் கண்டது நல்லதாப் போச்சு... நில்லுங்கோ எல்லாரையும் கூட்டிற்றுச் சைக்கிளையும் எடுத்திட்டு வாறன்...."

என்று பதிலைச் சொன்னபடியே கோவிலடிக்கு ஓடினார் கந்தசாமியண்ணை. கந்தசாமியண்ணையைக் கண்டு எவ்வளவு நாளாகிவிட்டது. அப்பம்மாவின் செத்தவீட்டுக்குக் கடைசியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துபோனது ஞாபகம் இருக்கிறது. கிளிநொச்சி: தர்மபுரத்தில் கலியாணங்கட்டி அங்கேயே வசித்தவர். அங்கு இருக்கிற காலங்களில் எங்கள் வீட்டுக்கு வந்துபோறது கிடையாது. கனகாலத்திற்குப் பிறகுதான் அவரை இடப்பெயர்வு காணவைத்திருக்கிறது. கந்தசாமியண்ணையும் வேகமாகக் கோவிலடிக்குச் சென்று தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு மனைவியையும், இரண்டு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார்.

"கந்தசாமி... இந்த இடப்பெயர்வு எங்களை ஒன்றிணைச்சிருக்கு.... எல்லோரும் இந்தப்பிரச்சினை தீரும் மட்டும் ஒண்டாவே இருப்பம். ஒண்டா இருந்தாத்தான் ஆளுக்காள் உதவியாயிருக்கும்."

"ஓம் அன்ரி. நாங்க சந்திச்சது நல்லதாப்போச்சு. அநாதையா அங்கயிருந்து, இங்கயிருந்து இப்படியே இங்காலப்பக்கம் எங்கபோறதெண்டே தெரியாம வந்திட்டம். இடையில உங்களைக் கண்டது பெரிய சந்தோசம். இந்தக்காலத்தில எங்கட சொந்தபந்தங்களோட இருந்தாத்தான் நல்லது. எப்ப எங்கயடிக்கிறான்? யாற்ற தலையில வந்து விழுமெண்டே சொல்லேலாது..."

அம்மாவின் பேச்சுக்குப் பதிலளித்தபடி எங்களோடு சேர்ந்து நடக்கத் தொடங்கினார் கந்தசாமியண்ணை. தேவிபுரம் பச்சைக்கேற்றுப் பகுதியைத் தாண்டி நகர்ந்துகொண்டிருக்கிறோம். பச்சைக்கேற்றுப்பகுதி பெரும் தென்னந்தோட்டம் அமைந்துள்ளபகுதி. சனங்கள் அந்தத் தென்னந்தோப்புகளுக்குள் கொட்டில்களைப் போட்டுத் தங்கியிருந்தனர். வருகின்ற சனங்கள் எல்லாம் கிடைக்கிற இடங்களில் தம் வசதிக்கேற்பக் கொட்டில்களைப் போட்டுத் தங்கினார்கள். நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றும் ஓயாமல் பயணித்துக்கொண்டே இருந்தோம். எங்களோடு பலநூற்றுக்கணக்கான மக்களும் வீதி நெடுகிலும் நகர்ந்து கொண்டிருந்தார்கள். வீதியின் இருகரையும் பெரும் காட்டு மரங்கள் சூழ்ந்திருந்தன. இடையிலே ஒரு பிள்ளையார் கோயில் . அவ்வீதியால் போய் வரும் சனங்கள் எல்லோரும் அந்தப் பிள்ளையாரைக் கும்பிட்டுப் போவது வழக்கமாக இருந்தது. அது தேவிபுரக்காட்டுப் பிள்ளையார் கோவில் என்றுதான் அன்றைய நாட்களில் அறியப்பட்டிருந்தது. கோவிலில் பொங்கல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பலர் அங்கு சமான்களை இறக்கி வைத்துவிட்டும், வாகனங்களை நிறுத்திவிட்டும் இளைப்பாறிக்கொண்டிருந்தனர். நாங்கள் பிள்ளையாரப்பாவைக் கும்பிட்டபடியே நகர்ந்துகொண்டிருந்தோம்.

கோவில் கழிந்து நூறுமீற்றர் தொலைவு சென்றிருப்போம். ஏதோ சகிக்க முடியாத மணம். போய்வரும் மக்களெல்லாம் மூக்கைப் பொத்தியபடியே பயணித்தார்கள். இறந்த விலங்குகள், புழுத்தள்ளிவீசும் மணத்தினை விடவும், இது வீரியம் நிறைந்ததாகவே இருந்தது.

"என்ன இப்படி உதில மணம்?"

யாரோ ஒருவர் கேட்டுவிட்டுப் போனதிற்கு இன்னொருவர் பதிலளித்துச் சென்றார்.

"அது உதில எங்கட பெடியளின்ரை பொடி கிளீன் பண்ற இடம் இருக்கு. அதுதான் இப்பிடி மணக்குது"

வன்னியெங்கும் பெரும் சமர் நடந்துகொண்டிருந்த காலம். இதனால் காயங்களும், இறப்புக்களும் அதிகரித்துக்கொண்டே இருந்தன. இறந்த போராளிகளின் வித்துடல்களைத் தூய்மைப்படுத்தும் நிலையங்களும் ஆங்காங்கு ஒதுக்குப்புறமான வனப்பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தன. போர்க்களங்களில் உயிர்நீத்த போராளிகளின் உடல்கள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்சென்றும், பகுதிகளாகவும் கிடைக்கக்கூடியதாகவிருக்கும். அதுமட்டுமன்றிப் போரின் உக்கிரத்தால், இங்குவரும் வித்துடல்களின் எண்ணிக்கைகளும் அதிகரித்துக்கொண்டே இருந்தன. இப்படிக்கொண்டு வரப்படும் வித்துடல்கள் போராளிகளால் தூய்மைப்படுத்தப்பட்டு இறுதி வணக்கத்திற்காகத் தயார்ப்படுத்தப்படும். இதனால் அங்கிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளாலும், நாட்பட்ட உடல்களாலும் இப்பகுதியே ஒருவித நாற்றத்தினால் நிறைந்திருந்தது. இம்மணத்துடன் எப்படித்தான் போராளிகள் இதற்குள் நின்று பணியாற்றுகிறார்களோ தெரியவில்லை. நிலத்திலே விதைக்கப்படப்போகும் வித்துடல்களைத் தயார்ப்படுத்தும் பணியை மேற்கொள்ளும் வீரர்களுக்கு இது சாதாரணம். இவ் மணம் எமக்குப் பின்னாளில் பழகிப்போய்விடுமென்பது தெரியாமலே நகர்ந்தோம்.

தேவிபுரச்சந்தியிலிருந்து சுமார் பத்துக் கிலோமீற்றர் தொலைவுவரை பயணித்துவிட்டோம். தேவிபுரக் கொலனிக்குச் சற்றுமுன்பு அமைந்துள்ள சந்திப்பகுதிக்கு வந்துவிட்டோம். பெருங்காட்டுப் பகுதியோடு அமைந்திருந்த பகுதி அது. அப்பகுதியில் வீதியோரமாக ஒரு சிலரே நிரந்தரமாக வசித்து வந்தனர். இப்போது இடம்பெயர்ந்து வரும் மக்கள் காட்டுக்கரைகளிலோ, ஆங்காங்கு தெரியும் வெட்டைகளிலோ தறப்பாழ்க் கொட்டில்கள் அமைத்துப், பதுங்குகுழிகளை வெட்டி வசிக்கலானார்கள். நாங்களும் அந்தக் காட்டுச் சந்திப் பகுதியில் தங்குவதற்கு முடிவெடுத்தோம். அந்தச் சந்தியில் இருந்து இடக்கைப் பக்கமாகச் சுமார் ஐம்பது மீற்றர் தொலைவில், அடர்ந்து வளர்ந்த பெரும் வாகைமரத்தின் கீழ்ச் சென்று, கொண்டுவந்த சாமான்களை இறக்கி வைத்துவிட்டு இளைப்பாறினோம். நேரம் நான்குமணியாகிவிட்டது. இப்போது எறிகணைகள் வெடிப்பது அதிகமாகவே கேட்டது. காலையிலிருந்து கால்நடையாகவே வந்ததால் களைப்பும், பசியும் எல்லோரையும் சோர்வாக்கிவிட்டது. வரும் வழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் உண்டதால்தான் இங்கு வந்துசேர முடிந்தது. இல்லையேல் இடைவழியில் தங்கியிருக்கவேண்டி வந்திருக்கும்.

"இனிச் சும்மா இருந்து வேலையில்லை. இதிலை உலைவச்சாத்தான் சாப்பிட்டிற்று மற்ற வேலைகளைப் பார்க்கலாம். கந்தசாமி... உதிலை தெரியுற வீட்ட போய் உந்தக் கேனில தண்ணி எடுத்துட்டுவா.. சோறப்போடுவம்."

"ஓமன்ரி நான் போட்டுவாறன். அடுப்ப மூட்டுங்கோ"

என்று கூறிவிட்டுக் கந்தசாமியண்ணை புறப்பட்டார். நானும் அவருக்குப் பின்னால் சென்றேன். பெரும் காட்டோரமாகச் செல்லும் சிறு வீதி. அக்காட்டின் கரைகளில் ஆங்காங்கு ஓரிரண்டு வீடுகளே நிரந்தரமாக அமைந்திருந்தன. இப்போதுதான் மக்கள் இந்தப்பகுதிக்குவந்து கொட்டில்கள் போட்டுக்கொண்டிருந்தனர். அங்கிருந்த எல்லாச்சனங்களும் நிரந்தரமாக அமைந்துள்ள வீடுகளில் சென்றுதான் தண்ணீர் எடுத்தார்கள். நாங்களும் அருகில் இருந்த ஒரு வீட்டில் சென்று, கிணற்றில் தண்ணீர் அள்ளி வந்தோம். அதற்கிடையில் அம்மா அங்கிருந்த கருங்கற்களைக்கொண்டு அடுப்பைத் தயார் செய்து, சுள்ளி விறகுகளை வைத்து நெருப்பு மூட்டியிருந்தார். அங்கு விறகிற்குப் பஞ்சமே இல்லை. பெருங்காடு அருகில் இருந்ததால் எமக்கு விறகுகள் தேவைப்படும்போது காட்டிற்குள் சென்று விறகு எடுத்துவர இலகுவாயிருந்தது. இரண்டு குடும்பத்திற்கும் அளவாகக் கொண்டுவந்த அரிசியில் கொஞ்சம் எடுத்து உலை ஏற்றப்பட்டது. உலை ஏற்றிக் கொஞ்ச நேரத்தில் அம்மா கஞ்சி வடித்து, கந்தசாமியண்ணையின் இரண்டு பிள்ளைகளுக்கும், எனக்கும், தங்கச்சிக்கும் அதனைப் பகிர்ந்து தந்தார். அதைக்குடித்ததும் ஒருவித உற்சாகம் பிறந்தது. சோறு ஆக்கியவுடன், பருப்புக்கறி வைக்கப்பட்டது. பருப்புக்கறியுடன் சோற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டுவிட்டுச் சற்று அந்த வாகைமரத்தின் கீழ் எல்லோரும் தலைசாய்ந்தோம். வாகைமரம், தன் கிளைகளை அசைத்துக் காற்றை உண்டாக்கி எம்மை அரவணைத்துக்கொண்டிருந்தது.

மாலை ஐந்தரையிருக்கும், முல்லைத்தீவுப்பக்கமிருந்து கூவிக்கொண்டு வந்த ஷெல்லொன்று அருகில் உள்ள சந்திப்பகுதியில் விழுந்து வெடித்து, எல்லோரின் தூக்கத்தையும் கெடுத்தது. திணறிப்போய் எழுந்தோம்.

> “ஆசை, வங்கர் வெட்டோணும். இனிச் ஷெல்லடி எல்லா வளத்தாலயும் வரும்போல கிடக்கு... கொட்டில் போடுறதுக்குத் தடிகள் வெட்டோணும். வாங்கோ உந்தக் காட்டில தடிகள் பாத்திட்டு வருவம்”

கந்தசாமியண்ணையின் பேச்சைக் கேட்டுவிட்டு, அப்பாவும் கத்தியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். நானும் பின்னால் சென்றேன். அடர்ந்து வளர்ந்த காட்டில் ஆங்காங்கு பெரும்மரங்களெல்லாம் வெட்டப்பட்டிருந்தன. இப்போதெல்லாம் பதுங்குகுழிகளுக்காகவே காட்டில் மரங்கள் வெட்டப்படுவதுண்டு. நாங்களும் கொட்டிலுக்குத் தேவையான தடிகளை வெட்டிவந்தோம். அவற்றில் நல்ல நேரான தடியை எடுத்துப் பிடிசீவி, கொண்டு வந்த கோடாரிக்கும், மண்வெட்டிக்கும் பிடி போட்டார் அப்பா. நான்கு மூலைகளிலும் குழிதோன்றித் தடிகள் நட்டுத் தறப்பாழைக் கட்டினோம். அதுதான் தற்போதைய எங்கள் வீடு. இது நிரந்தரமில்லை. கொஞ்ச நாட்களில் மீண்டும் வீட்டிற்குச் சென்றுவிடலாம் என்றே நினைத்தோம். ஆனால் நினைத்ததெல்லாம் கனவாகிப்போகும் என்று யார் கண்டார்? பொழுதும் இருண்டது. குப்பிவிளக்கு வெளிச்சத்தில் அன்றைய இரவுப்பொழுது நகர்ந்தது. எல்லோரும் கனகாலத்திற்குப் பிறகு சந்தித்தமையால், அந்தயிந்தப் புதினங்களையெல்லாம் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனி படர்ந்தது. ஆங்காங்கு தொலைவிலே இராணுவம் அடித்த பராவெளிச்சங்கள் எரிந்து அணைந்துகொண்டிருந்தன. தொலைவிலே பலத்த ஷெல்லடிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. இடையிடையே அருகாமையில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. வானத்தில் தாழ்வாக வண்டு சுத்திக்கொண்டிருந்தது. நாம் இருக்கும் காட்டுப்பாதை வழியாக இரவில் பெரிய வாகனங்கள் இரைச்சலுடன் செல்லும் சத்தங்களும் கேட்டன. கிபீர்கள் தொலைவில் பறக்கும் சத்தங்களும் கேட்டன. பீதி கலந்த உணர்வுடன் எல்லோரும் அந்த இரவைக் கடக்க வேண்டியிருந்தது.

காலை விடிந்துவிட்டதற்கான அறிகுறியாய் 'புலிகளின் குரல்' வானொலியில் ஏழரை மணிச்செய்தி ஒலித்துக்கொண்டிருந்தது. முன்னிரவில் எல்லோரும் விழித்திருந்ததால் பின்னிரவிலே நன்றாகத் தூங்கி விட்டோம். அதனாலேயே சற்றுத்தாமதமாய் எழவேண்டியிருந்தது. எழுந்தும் என்ன வேலையைத்தான் செய்வது? என்ற வினாவும் எல்லோரின் மனதிலும் ஓடிக்கொண்டிருந்தது. சுதந்திரபுரத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தொடர் எறிகணைத்தாக்குதலால் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாகச் செய்தியில் கூறப்பட்டது. பல நூற்றுக்கும் மேற்பட்டோர் காயப்பட்டதாகவும், அவர்கள் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் செய்தியில் கூறப்பட்டது. இதுதான் அன்றைய 'ஈழநாதம்' பத்திரிகையின் தலைப்புச் செய்தியாகவும் வந்திருந்தது. இப்போர்க்கால வன்னி இடப்பெயர்வில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது அமைந்திருந்ததால் எல்லோரின் மனதிலும் துக்கம் படர்ந்திருந்தது. அன்றைய நாட்களில் சுதந்திரபுரப்பகுதி, மக்களின் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் கிளிநொச்சிப் பக்கத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்து வந்த அதிகமான மக்கள் சுதந்திரபுரத்திலேயேதான் தங்கியிருந்தார்கள்.

"உவங்கள் பாதுகாப்பு வலயம் எண்டு சுதந்திரபுரத்தை அறிவிச்சிட்டு, இப்புடிச் செய்திருக்காங்கள். சனங்களைக் கொல்லுறதுதான் உவங்கட பிளான். நல்லகாலம் உதுக்குள்ள இருந்து நாங்கள் முதல்ல கரப்பட்டது. உவங்கள் பாதுகாப்பு வலயம் எண்டு அறிவிச்சோடன மக்கள் அதுக்குள்ள போய் இருக்குங்கள். அவனுகளுக்குக் கொல்லுறதும் ஈசிதானே. எவ்வளவு குழந்தைகள், வயதுபோனதுகள் செத்திருக்குங்கள். காயப்பட்டிருக்குங்கள். உதுதான் நேற்று உங்காலப்பக்கம் ஷெல்லடி கொஞ்சம் கூடவாக்கிடந்தது."

கந்தசாமியண்ணை இவ்வாறு கூறிமுடிப்பதற்குள் அப்பா தொடர்ந்தார்.

"ஓமடாப்பா, சனங்களெல்லாம் உவன் சொல்லுற பகுதிக்க ஏன் போய் இருந்தவை? உவங்கட குணம் இவையளுக்குத் தெரியாதோ? அவங்கள் வன்னிச் சனத்தைப் புலிகளாத்தான் பாக்கிறாங்கள். அதுதான் விமானங்களாலயும், ஷெல்லுகளாலயும் சனங்கள் வாழுற பகுதிகளுக்கு அடிக்கிறாங்கள். உங்க புதுக்குடியிருப்புக் கொஸ்பிற்றலில இடமும் இல்லையாம். மருந்தும் இல்லையாம். கொண்டு போறவையளைக் கீழ தறப்பாழை விரிச்சிட்டு, அதில இருத்தித்தான் பராமரிக்கிறாங்களாம்."

அப்பா கூறியதும் உண்மைதான். போர் தொடங்கியவுடன் வன்னி நிலப்பரப்புக்குள் எந்தவகையான அத்தியாவசியப் பொருட்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராதவாறு இலங்கை அரசு தடுத்திருந்தது. ஓமந்தைக்கு இந்தப்பக்கம் எந்தப் பார ஊர்திகளும் வரவில்லை. பொருளாதாரத்தடைகள், போக்குவரத்துத் தடைகள் எனப்பல தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. அவ்வப்போது அரசாங்க அதிபரூடாகச் சில அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டாலும், அவை போதுமான அளவாகக் கிடைக்கவில்லை. இதனால் இருப்பதை வைத்துக்கொண்டு மக்கள் வாழப் பழகிக்கொண்டார்கள். ஷெல்லடிகளில் காயப்பட்டாலும் வைத்தியசாலைக்குச் சென்று பயனில்லை என்பதை அறிந்து, மூலிகை மருந்துகளை வைத்தோ, பழைய துணிகளாலோ காயங்களுக்குக் கட்டுப்போட்டுக் கொண்டனர். உள்ளூர் உற்பத்திகள் கைவிடப்பட்டதாலும், பொருளாதாரத் தடைகளாலும் உணவுப்பொருட்களின் தட்டுப்பாடு உச்சம்பெற்றது. இதனால் கூட்டுறவுச்சங்கக் கடைகளில் மக்கள் வரிசையில் நின்று, நிர்ணயிக்கப்பட்ட அளவுடைய உணவுப்பொருட்களையே வாங்கிக் கொண்டனர்.

அன்றைய சுதந்திரபுரத்தாக்குதல் வன்னி மக்களையே உலுப்பியிருந்தது. வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்திருந்த மக்கள், பாதுகாப்பு வலயப்பகுதியான சுதந்திரபுரப்பகுதியில் சென்று வாழத் தலைப்பட்டபோதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவரும் எதிர்பாராத விதமாகவே, மக்கள் செறிந்திருந்த அப்பகுதிக்குத் திட்டமிட்டே இராணுவத்தினர் இத்தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். இதனாலேயே பல நூற்றுக்கும் அதிகமான மக்கள் பலியாகவும், படுகாயமடையவும் நேரிட்டது. அன்றைய தாக்குதலுக்கு முன்னரான நாட்களில், வன்னிப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலும் எறிகணைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டாலும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான உயிர்ச்சேதங்களே ஏற்படுத்தப்பட்டன. ஆனால் சுதந்திரபுரத் தாக்குதலைத் தொடர்ந்து மக்கள் வாழும் பிரதேசங்களை நோக்கிய எறிகணைத்தாக்குதல்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானத்தாக்குதல்களும் தீவிரப்படுத்தப்பட்டன. ஒவ்வொருநாளும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்படலாயினர். பலநூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் படுகாயப்படுத்தப்பட்டனர்.

விசுவமடு, மூங்கிலாறு, தேராவில், சுதந்திரபுரம், உடையார்கட்டு, வள்ளிபுனம் என எல்லாப் பகுதிகளிலும் இருந்த குடியிருப்புக்கள் நோக்கிய எறிகணைத்தாக்குதல்களும், வான் தாக்குதல்களும் உச்சம் பெற்றதால் மக்கள் தங்கள் அதிமுக்கிய உடைமைகளோடு தேவிபுரப் பகுதி நோக்கி இடம்பெயர்ந்தனர். அவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள், தேவிபுரப் பச்சைக்கேற்றுப் பகுதியிலும், நாங்கள் தற்போது வசிக்கும் தேவிபுரக் கொலனிப்பகுதிகளிலும், அதனை அடுத்த தேவிபுரக்கடற்கரையோடு இணைந்த சாலைக்கடற்கரைப் பகுதிகளிலும் தற்காலிகமாகத் தங்கியிருந்தனர். அவர்கள் தங்கிய இடங்கள் எங்கும், எறிகணைகள் குடிமனைகள் மீதே விழுந்து வெடித்தன.

அன்றைய நாட்களில் இங்கு என்ன நடந்தது? என்ன நடக்கிறது? என்ற புதினங்களையெல்லாம் 'புலிகளின் குரல்' வானொலியூடாகவே மக்கள் உடனுக்குடன் அறியக்கூடியதாகவிருந்தது. வானொலிப்பெட்டிகளுக்குரிய பற்றிகளின் தட்டுப்பாட்டினால், பாவித்த பற்றிகளை வாயால் கடித்தும், அவற்றினைச் சூரிய ஒளியில் வைத்தும், பாவித்த நாட்கள் கொஞ்சமில்லை. நாங்கள் வசித்த பகுதியிலுள்ள வனப்பகுதியில் போராளிகளின் முகாம் இருந்ததால் எங்களுக்குப் பற்றிகள் கிடைக்கக் கூடியதாகவிருந்தன. ஏனெனில் எங்களோடு வேணாவில் பள்ளிக்கூடத்தில் படித்த குமார் என்ற அண்ணன் ஒருவன், கட்டாய ஆட்சேர்ப்புக்காரணமாக இயக்கத்தில் சேர்க்கப்பட்டான். அவன் என்னோடு நல்ல பழக்கம். மாலை நேரங்களில் பாடசாலை மைதானத்தில் கிரிக்கெட் விளையாடும்போதெல்லாம் இவனின்றி விளையாடிய நாட்களே இல்லை. பேனை சுமக்கும் வயதில் அவன் இப்போது துப்பாக்கி சுமந்து திரிகிறான். அவன் இப்போது நாமிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனப்பகுதி முகாமில்தான் இருக்கிறான். அவனைத் தினசரி மூன்று வேளையும் காணலாம். ஏனெனில் அவன்தான் அந்த முகாமில் உள்ள அனைத்துப் போராளிகளுக்கும், பிரதான வழங்கல் பகுதியிலிருந்து சாப்பாடு எடுத்து வருபவன். பச்சைநிற வரியுடன் ஆயுதமேந்தியபடி, பச்சைநிற உழவியந்திரத்தில் இப்போது அவன் வலம் வருகிறான். இப்படி எத்தனையாயிரம் சிறுவர்கள் இப்போராட்டத்தில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டார்கள்? உழவியந்திரத்தின் சத்தம் கேட்டாலேபோதும், அவனைப் பார்ப்பதற்கென்றே ஓடிச்செல்வேன்

“என்னடா தம்பீ...! எப்பிடி இருக்கிறாய்? ஒவர்நாளும் உதிலை உன்னைக் காணுறனான். உதிலை தெரியுற கொட்டில்லயே இருக்கிறியள் இப்ப?”

“ஓமண்ண... இப்ப நீங்கள் எங்களோடையெல்லாம் கதைக்கிறியள் இல்ல. கண்டாலும் மிசினை நிப்பாட்டாமப் போறியள். பள்ளிக்கூடத்தில எங்களோடை திரிஞ்சதெல்லாத்ததையும் மறந்திட்டியள் என?”

“இல்லையடா தம்பீ, ரைமுக்கு ரைம் சாப்பாடு இழுக்கவேனும். நிண்டு கதைக்க நேரமில்லை. அதுதான் நிக்கிறேல்லை.”

“சரியண்ணா... மற்றது எனக்குப் பாவிச்ச வோக்கி பெற்றி இருந்தா தாங்கோண்ண. ரேடியோ கேக்கிறதுக்குப் படாதபாடு படுறம்.”

“சரி சரி. அடுத்த ரேனுக்கு வரேக்க கொண்டாறன். கவனமா இருங்கோடா... ஷெல்லடிகள் கொஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுது.... சரி நான் வேளைக்குப் போகோணும். வாறனா..."

"ஓமண்ண போட்டு வாங்கோ... பெற்றிய மறந்திடாதேங்கோ."

இப்படி எத்தனை நாள் அவனுடன் கதைத்திருப்பேன். அவனிடந்தான், றேடியோ கேட்பதற்காகப் பழைய பற்றிகள் வாங்குவதுண்டு. சொல்லிய மாதிரியே பல தடவைகள் பற்றிகள் கொண்டு வந்து தந்திருக்கிறான். நாட்கள் நகர்ந்தன. குறிப்பாக இரண்டு கிழமைகள் நகர்ந்திருக்கும். இப்போது உணவு எடுப்பதற்காகக் குமார் அண்ணை வருவதில்லை. பதினாறு வயது மதிக்கத்தக்க இன்னொரு அண்ணனே உழவு இயந்திரத்தில் தொடர்ச்சியாக வந்து போனார்.

"அவருக்கு என்னாச்சு? ஏன் இப்ப வாறேல்லை?"

என்ற வினாக்கள் என் மனதிலே தோன்றி என்னைக் குழப்பிக்கொண்டிருந்தன. ஒருநாள் மதியம் அம்மா சமைப்பதற்கு விறகு எடுத்துவரும்படி கூறியிருந்தார். நானும் காட்டோரமாகச் சென்று சுள்ளிகள் முறித்துக்கொண்டிருந்தேன். அப்போது போராளிகளின் முகாமிலிருந்து உழவு இயந்திரம் புறப்படும் சத்தம் கேட்டது. ஆவலோடு யார் வருகிறார்? என எதிர்பார்த்திருந்தேன். உழவு இயந்திரம் அதிவேகமாக வனத்தைக் கிழித்துக்கொண்டு வருவதைப்போல உறுமிக்கொண்டு வந்தது. அதில் குமார் அண்ணன் வரவில்லை. வேறு ஒரு அண்ணனே வந்துகொண்டிருந்தார்.

"அண்ணோய்! அண்ணோய்! நிப்பாட்டுங்கோ... நிப்பாட்டுங்கோ... ஒருக்கால் நிப்பாட்டுங்கோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கத்தும் சத்தம் உழவு இயந்திரத்தின் சத்தத்திற்கு மேலால் அவருக்கு விளங்கியிருக்காது. என் கை அசைவுகளைக் கண்ணுற்றே வேகத்தைக் குறைத்து, எனக்கருகில் வந்து நிறுத்தினார்.

"என்னடா தம்பீ! ஏன் மறிச்சனீ?"

"இல்லயண்ணை. குமாரண்ணைதானே முதல் ஒவர்நாளும் வாறவர். ஏன் இப்ப அவரைக் காணுறேல்லை. இப்ப எங்க போயிட்டார்? அதுதான் கேக்கோணும் எண்டு உங்களை நிப்பாட்டினான்."

"குமாரெண்டு... கானகனையோ கேக்கிறாய்? அவன் போன கிழமை வழங்கல் இழுத்துட்டு வரேக்க ஷெல் விழுந்து வீரச்சாவடைஞ்சிட்டான் தம்பீ.... இனி அவன் வரமாட்டான். தேசக்காற்றோட கலந்திட்டான். அவன்ரை பொடிகூட ஒழுங்காக் கிடைக்கேல. சிதறிப்போச்சு... சீல் பண்ணித்தான் பொடிய தாய், தேப்பனிட்ட குடுத்தவங்கள். இரணப்பாலைத் துயிலுமில்லத்திலதான் அவன்ர வித்துடலை விதைச்சிருக்கு...."

என்று கூறியபடி மெதுவாக உறுமிக்கொண்டிருந்த உழவு இயந்திரத்தை மேலும் உறுமவிட்டபடி, தன் கடமையைச் செய்யப் பயணிக்கிறான் அந்தப் போராளி. குமாரண்ணை வீரச்சாவடைந்த செய்தியைக் கேட்டதுமே எனக்கு மனது சோர்ந்துவிட்டது. நேற்றுத்தான் பார்த்ததுபோல இருந்தது. இனி அவரை எப்போது பார்ப்பேன்? என்ற வினா என் மனதில் எழுந்து மறைந்துகொண்டே இருந்தது. அவனுக்கு இயக்கப் பெயர் கானகன் என்பது இப்போதுதான் தெரியும். கானகன் இந்தக் காட்டுக்கே அரசனாக வலம்வந்தவன். இன்று காற்றோடு காற்றாகி விட்டான். அவனுடைய நினைவுகளில் மனதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோயவிட்டபடி, கண்கள் குளமாகக் கொட்டிலை நோக்கி நகர்ந்தேன்...

அம்மா சொல்லியனுப்பிய வேலையை மறந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04

தைமாதம் கடைசிக்கிழமையிருக்கும், இராணுவம் நன்கு முன்னேறி விட்டது. பலத்த எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன . மக்கள் ஒப்பாரி ஓலத்தில் மூழ்கிக் கொண்டிருந்தனர். எங்கு பார்த்தாலும் மரண ஓலமாகவே இருந்தது. பார்க்கும் இடமெல்லாம் தறப்பாழ் கொட்டில்களின் காட்சிகளே தெரிந்தன. எங்கும் சாமான்களுக்குத் தட்டுப்பாடு. மக்கள் கடைகளில் வரிசையில் தூங்கிக்கொண்டிருக்கும் சூழல். குழந்தைகளுக்குப் போசாக்கான உணவுகள் இல்லை. வயோதிபர்களுக்கும், நோயாளிகளுக்கும் தேவையான மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறை நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமே இருந்தது. இப்போது ஆங்காங்கு சிதறியிருந்த சொந்தங்களெல்லாம், நாங்கள் இருக்கும் இடமறிந்து எங்களுக்கருகில் வந்து கொட்டில்கள் போட்டுக்கொண்டனர். ஆளும் பேருமாக இருந்தால்தான் இந்தக்காலத்தில் பிழைத்துக்கொள்ளமுடியும். புதுக்குடியிருப்பில் எங்களுக்கருகில் இடம்பெயர்ந்து இருந்த பெரியப்பா, நாங்கள் வீட்டைவிட்டுப் புறப்படும் போது, கோம்பாவில் பகுதிக்குச் சென்றிருந்தார். இப்போது அங்கு இருக்க முடியாமல் இங்கு வந்து விட்டார். இதனால் போர் அவலத்திலும் எனக்கு மகிழ்ச்சிதான். ஏனென்றால் பெரியப்பாவின் மகன் லவன் மற்றும் மகள் கஜனி அக்கா முதலியோர் இருந்ததால் எனக்குப் பொழுதுபோக்குக் கிடைத்துவிட்டது. சொந்தங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கும்போது வரும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லையென்றுதான் சொல்ல முடியும்.

என்னதான் ஷெல்லடித்தாலும் நாங்கள் மூவரும் எங்கள் பாடுதான். காட்டுவீதியில் போய் நின்று வனமுகாமுக்குள் வந்துபோகும் போராளிகளிடம் ரேடியோவுக்காக வோக்கி பற்றி வாங்குவதும், ஆங்காங்கு நிற்கும் புளியமரங்களில் ஏறிப் புளியங்காய் பறித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுவதும், ஓடும் வாய்க்காலில் இறங்கிச் சின்னச் சின்ன மீன்கள் பிடித்து விளையாடுவதும், அயற்சூழலில் எறிகணைகள் விழுந்து வெடித்தவுடன் அவ்விடங்களுக்குச் சென்று புதினம் பார்ப்பதுமாகப் பொழுதுகள் கழிந்தன. சொந்தங்கள் ஒன்று சேர்ந்திருப்பதால் எல்லோரும் காப்பெடுப்பதற்கு வசதியாகப் பெரிய மூடுபங்கர் வெட்டியிருந்தோம். ஆனால் இரவில் தொடர் எறிகணைத்தாக்குதல்கள் நிகழ்த்தப்படும்போது அம்மூடுபங்கருக்குள் நித்திரை கொள்ள முடியாது. எல்லோரும் அதற்குள் குழுமியிருப்பதால் புழுக்கமாக இருக்கும். இதன்காரணத்தினால் நான், இலகுவாகப் படுப்பதற்காகக் கொட்டிலுக்கு முன்னால் ஒரு பதுங்குகுழி வெட்டியிருந்தேன். அதனைச் சுற்றி மரக்குற்றிகளால் அரணமைத்துப் புற்கற்றைகள் அடுக்கி அழகுபடுத்தியிருந்தேன். இரவில் அந்தப் பதுங்குகுழிக்குள்தான் நான் தூங்குவதுண்டு. இப்பதுங்குகுழி திறந்த நிலையில் இருந்தாலும், பதுங்குகுழிக்குமேலே எறிகணை விழுந்து வெடிக்கும் பட்சத்தில்தான் அதற்குள் இருப்பவர்களுக்குப் பாதிப்பு நிகழும். மாறாக அருகில் விழுந்து வெடித்தால்கூட உள்ளிருப்பவர்களுக்கு ஒன்றும் நிகழாது. அவ்வாறான தன்மையிலேயேதான் போர்க்கள அரண்போல் இப்பதுங்குகுழியரணை அமைத்திருந்தேன்.

நாங்கள் இருக்கும் இடத்திலிருந்து நான்கைந்து காணிகள் கழியச் சுமார் எழுநூற்றைம்பது மீற்றர் தொலைவுக்கு அப்பால், வனப்பகுதிக்குள் இருந்த போராளிகளின் முகாமில் இருந்து, பாரிய எறிகணைத்தாக்குதல்களைப் போராளிகள், இராணுவத்தளங்களை நோக்கி நிகழ்த்துவதுண்டு. இராணுவ முன்னேற்றத்தினால், முன்னரங்குகளில் இருந்து எறிகணைப் பீரங்கிகளை இரவோடு இரவாகக் கொண்டுவந்து இவ்வனப்பகுதில் போராளிகள் நிலைநிறுத்தியிருந்தார்கள். வேவு விமானத்தின் கண்களுக்குள் இருந்து எதையும் மறைத்துவிட முடியாதபடி, இரவுபகலாகத் தாழ்ந்து வண்டு சுற்றிக்கொண்டேயிருந்தது. முன்னர்போல் அல்லாமல் இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிகணைகள் அதிகமாகவே வந்து விழத்தொடங்கின. சில நேரங்களில் போராளிகள் ஆர்ட்டிலறி எனப்படும் எறிகணைகளை ஏவி முடிப்பதற்குள், அவ்விடத்தை நோக்கி இராணுவம் ஏவிய நூற்றுக்கணக்கான எறிகணைகள் வந்து வெடிப்பதுண்டு. போராளிகளின் ஒவ்வொரு அசைவுகளும் இராணுவத்தினரால் வேவு விமானத்தின்மூலம் கண்காணிக்கப்பட்டே வந்தன. அது மட்டுமன்றி, புலிகள், தளத்திலிருந்து எறிகணைகளை ஏவும்போது உண்டாகும் சத்தத்தையும், அதனால் உண்டாகும் பாரிய கந்தக ஒளியையும் வைத்துச் சரியான, துல்லியமான இடத்தினை ஜி.பி.எஸ்மூலம் கணித்துப் பதில் எறிகணைத் தாக்குதல்களையும் இராணுவத்தினர் நிகழ்த்துவதுண்டு. அவ்வாறு ஏவப்படும் எறிகணைகள் மக்கள் வசிக்கும் அயற்சூழலிலே விழுந்து வெடிப்பதுமுண்டு. இத்தகைய தாக்குதல்கள், சிலநாட்களிலிருந்து நாங்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கியும் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களின் உக்கிரம் தாங்க முடியாமல் வனப்பகுதி முகாமிற்கு அருகிலிருந்த சில குடும்பத்தினர் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டனர். இந்தக்காலத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு, ஓர் நிலையான இருப்பிடம் இருக்கவில்லை. மீண்டும், மீண்டும் இடம்பெயர்ந்துகொண்டே இருந்தனர்.

ஒருநாள் காலை ஒன்பது மணியிருக்கும். வெகு தூரத்தில் ஆங்காங்கு இடைவிடாத எறிகணைகள் விழுந்து வெடிக்கும் சத்தங்கள் கேட்டுக்கொண்டே இருந்தன. நானும், கஜனி அக்காவும், லவனும் வழமை போலவே பொழுதைக்கழிக்க வனப்பகுதி வீதிக்கு வந்துவிட்டோம். ஆட்களின் நடமாட்டமே இருக்கவில்லை. வண்டு தாழப்பறந்து கொண்டே இருந்தது.

“கஜினி அக்கா, அந்த இயக்க வேசுக்குப் பக்கத்தில இருக்கிற தொங்கல் வளவில புளியமரங்கள் நிக்குதெண்டு, அங்கயிருந்த ஒரு பொடியன் சொன்னவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கோவன் ஆஞ்சிட்டு வருவம். கொண்டந்தா வச்சு வச்சுத் தின்னலாமக்கா... வாங்கோவன் போவம்.."

"உனக்கு லூசா? உங்கதான் ஒரே அடிக்கிறாங்கள். இரவு பாத்தனிதானே என்ன அடியெண்டு... மல்ரிபெரல் எல்லாம் அடிக்கிறாங்கள்... அதுதான் ஆளத்தூக்கித்தூக்கிப் போட்டுச்சு.."

"ஷெல்லடியும் குறைவாத்தான கிடக்கு இங்கால... போயிற்று உடனயே புளியங்காய் ஆஞ்சிட்டு வெளிக்கிடுவம். வீட்ட சொல்லாம நைசாப் போட்டு வருவமக்கா... லவன் வருவான் நீங்கதான் மாட்டனெண்டுறீங்க..."

"சரி வாங்கோ... உடன வெளிக்கிடோனும்.. வீட்ட யாருக்கும் சொல்லாதேங்கோ.. சரியா?"

"ஓமக்கா.. ஓமக்கா..."

நாங்கள் மூவரும் காட்டுத் தொங்கலில் அமைந்துள்ள வளவை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். செல்லும் போது ஒவ்வொரு வளவுகளையும் பார்த்துக்கொண்டு சென்றோம். யாரையும் காணவில்லை. இரவு அடித்த ஷெல்லடியின் தாக்கத்தினால் இங்கிருந்த குடும்பங்களெல்லாம் வேறு இடம் சென்று விட்டார்களென்றே எண்ணத் தோன்றியது. தொலைவிலே எறிகணைகள் விழுந்து வெடித்துக்கொண்டிருக்கும் சத்தங்கள் கேட்டன. ஆனாலும் எங்களுக்குப் பயமில்லை. போர்வெடியின் ஓசைகளில் வளர்ந்தவர்களுக்கு எங்கிருந்து பயம் வரும்? ஒருவாறு கடைசியாக இருந்த வளவுக்குள் போனோம். யாருமற்ற தறப்பாழ்க் கொட்டில்கள் புகைகக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. இரவு விழுந்த எறிகணைகளின் தீச்சுவாலையின் தாக்கமாகக்கூட அவை இருக்கலாம். இங்கிருந்தவர்களுக்கு என்னவாகியிருக்கும்? இறந்திருப்பார்களா? காயப்பட்டிருப்பார்களா? பாதுகாப்பாக வெளியேறியிருப்பார்களா? என்று மனதிற்குள் சில கேள்விகள். அருகே சென்று பார்க்கக்கூட அக்கறையில்லாமல் புளியமரத்தடிக்குச் சென்றோம்.

உண்மையில் போர் உக்கிரமடைந்த அன்றைய நாட்களில், எறிகணைகள் குடில்களுக்கு மேலே விழுந்து வெடித்து, அங்கிருந்தவர்கள் இறந்தாலோ, காயப்பட்டாலோ உறவுகள் மட்டுமே அந்த நேரத்தில் ஆறுதலாய் இருப்பார்கள். தப்பிய குடும்ப உறுப்பினர்கள், இறந்தவர்களை அதிலேயே அடக்கம் செய்துவிட்டுக் காயப்பட்டவர்களோடு வேறு இடம்நோக்கிச் செல்லும் நிலையையே பின்பற்றினார்கள். எங்கு பார்த்தாலும் ஒப்பாரியே மிஞ்சியிருந்தது. இதனால் தானும், தன்னைச்சார்ந்த குடும்பமும் தப்பினாலே போதுமென்ற மனநிலையே உருவாகியிருந்தது. எல்லா வீடுகளிலும் துன்பம் இருந்ததால், யார் துன்பத்தை யார்தான் ஆற்றிவிடப்போகிறார்கள்? என்ற எண்ணமே எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்திருந்தது. இதனால் ஒருவிதமான புதினம் பார்க்கும் நிலையே காணப்பட்டது. உதவி செய்யும் மனநிலை காணப்படவில்லை. இந்தத் தன்மையால்தான் நாங்களும் எரிந்து கொண்டிருக்கும் குடில்களுக்கு அருகில் செல்லாமல் புளியமரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். ஓரளவு சிறிய புளியமரம். ஆனால் காய்களின் எண்ணிக்கையோ சொல்லிலடங்காது. கொத்துக்கொத்தாய்க் காய்த்துத் தொங்கியபடி இருந்தன.

“டேய் தம்பீ, பாத்தியோ எவ்வளா காயளெண்டு...
வேகமாப் புடுங்குடா”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றபடி அக்கா கீழே விழுந்திருந்த பழங்களை எடுத்துக்கொண்டிருந்தாள்.

“அக்கா நான் ஏறட்டோ?”

“உச்சிக்குப் போகாம கீழ்க்கொப்பில இருக்கிற காயளக் கொஞ்சம் புடுங்கீட்டு.. அப்பிடியே உலுப்பிவிடு... பழுத்த பழங்கள் இருந்தா விழட்டும்”

“ஓமக்கா ... நான் ஏறி உலுப்புவன்.. லவனும் நீங்களும் புறக்குங்கோ.. பேந்து பிரிச்செடுப்பம்”

பரந்த கிளைவிட்டு ஓரளவு வளர்ந்திருந்த புளியமரத்தின் கிளைகள் எங்கும் காய்களாகவே தெரிந்தன. நிலத்தோடு பதிந்து வளர்ந்திருந்த கிளையினூடாக மேற்கிளைக்குத் தாவினேன். கைகளுக்கு எட்டிய காய்களையும், பழங்களையும் ஆய்ந்தபடி, கிளைகளை உலுப்பிக்கொண்டிருந்தேன். லவனும், அக்காவும் விழுகின்ற காய்களையும், பழங்களையும் சேகரிப்பதிலேயே கவனத்தைச் செலுத்தினார்கள். திடீரென்று வெகுதொலைவிலே தொடர்ச்சியான வெடிச்சத்தங்கள் கேட்டன. அந்தச் சத்தங்கள் வித்தியாசமாகவே கேட்டன. இராணுவத்தினர் எறிகணைகளை ஏவி விடும்போது எழும் சத்தங்களாகவே அவை இருந்தன.

“டேய் ஷெல் குத்திக் கேக்குதுடா.... கனக்க முழக்கிறான்... உது மல்ரிபெரலாத்தான் இருக்கும்.. எங்க அடிக்கிறானோ தெரியா.. கவனமா ஆய்”

“ஓமடி அக்கா ஊருப்பட்ட சத்தமாத்தான் கேக்குது. மல்ரிபெரல்தான்..”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பேசிமுடிப்பதற்குள், தொடர்ச்சியான இரைச்சல்களுடன் நாங்கள் நிற்கும் காணிக்குள் ஷெல்கள் வந்து, விழுந்து வெடித்துக்கொண்டே இருந்தன. ஆம் இது பல்குழல் பீரங்கித்தாக்குதல்தான். அக்காவும், லவனும் மரத்திற்குக் கீழே வெட்டப்பட்டிருந்த பதுங்குகுழிக்குள் தவழ்ந்து சென்று படுத்துக்கொண்டார்கள். ஷெல்களும் தொடர்ச்சியாக விழுந்து வெடித்துக்கொண்டே இருந்தன.

"தம்பீ டேய் குதியடா பங்கருக்குள்ள.."

அக்காவின் குரல் ஒலித்தது. மரத்திலே திகைத்துப்போய் இருந்த என்னை அவளின் குரல்தான் எழுப்பிவிட்டது. சுயநினைவு வந்தவனாய் கிளையின் வழியே சறுக்கிக்கொண்டு பதுங்குகுழிக்குள் குதித்தேன். பதுங்குகுழிக்குள் லவனும், அக்காவும் இருந்ததால் அவர்களுக்குமேல் வந்து விழவேண்டியதாயிற்று. சுமார் முப்பது வினாடிகள் தொடர்ச்சியாகச் ஷெல்கள் வந்து விழுந்து வெடித்துக்கொண்டே இருந்தன. நிலம் அதிர்ந்தது. புளியமரத்தின் கிளைகள் முறிந்து விழுந்தன. மண்கட்டிகள் எங்களுக்குமேலே வந்து விழுந்துகொண்டே இருந்தன. நாங்கள் இன்று உயிரோடு இல்லை என்ற எண்ணமே மனதில் படர்ந்தது. இந்த நேரத்தில் அம்மாக்கள் பதுங்குகுழிகளுக்குள் காப்பெடுத்திருப்பார்கள். எங்களைக் காணாமல் தேடுவார்கள். எப்படி இப்போது வீட்டுக்குப் போவது? என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டிருந்தேன். எறிகணைகள் விழத்தொடங்கி ஐந்தாறு வெடிப்பதற்குள் கீழே இருந்த பதுங்குகுழிக்குள் காப்பெடுத்ததால் உயிர்தப்ப முடிந்தது. பதுங்குகுழி இல்லை என்றால் எல்லோரும் இறந்திருப்போம். நான் மரத்தில் இருந்தபோது, முதல் விழுந்து வெடித்த எறிகணையின் சன்னங்கள் என்னைத் தாக்கியிருந்தால், என் கதி என்னவாகியிருக்கும்? மனதில் பல சிந்தனைகள் தோன்றி மறைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிகணைகள் விழுந்து வெடித்து முடிந்துவிட்டன. எழுந்து பார்த்தோம். எங்கும் புகை மூட்டமே தெரிந்தது. எஞ்சியிருந்த கொட்டில்கள் எல்லாம் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தன. ஆங்காங்கு வனக்கரையோரங்களிலும் புகைகள் வெளிக்கிளம்பின. எங்கள் பதுங்குகுழியிலிருந்து பத்து மீற்றர் தொலைவுகளில் கூட ஐந்தாறு ஷெல்கள் விழுந்து வெடித்துள்ளன. அதனால்தான் மரங்களின் கிளைகள் முறிந்து விழுந்து, மரங்களே கருகிப்போய் இருந்தன. பல்குழல் பீரங்கியானது ஒரேநேரத்தில் பல குண்டுகளை ஏவக்கூடியது. தொடர்ச்சியாக நாற்பதுக்கும் மேற்பட்ட குண்டுகளைத் தள்ளும் செயற்றிறன் மிக்கது. இதனை நாங்கள் 'மல்ரிபெரல்' என்று கூறுவோம். மல்ரிபெரல் விழுந்து வெடித்த இடங்களில் பச்சைநிறத்திலான எந்தப் பயிர்கொடியையும் காணமுடியாது. எல்லாம் கந்தகத்தீயில் கருகிப்போய்விடும். பெரும் நாடுகளுக்கிடையேயான போர்களில் பயன்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட இவ்வெறிகணைகள், சாதாரணமாகவே குடியிருப்புப் பகுதிகள் நோக்கி ஏவப்படுவது இங்கு வியப்புக்குரியதல்ல.

"தம்பீ, லவன் டேய்.... வெளிக்கிடுங்கோடா... இனி இதுக்க நிண்டா.. சரிகதை.. வெளிக்கிடுங்கோடா... ஓடுங்கோடா"

"ஓமக்கா.. ஓடுங்கோ.. அடுத்த ஷெல் குத்துறதுக்கிடையில போயிடோணும்..."

பதுங்குகுழியில் இருந்து மேலே ஏறியதும், அந்தக் காணியை விட்டுச் செல்வதே எங்கள் நோக்கமாயிருந்தது. என்னதான் ஷெல்லடிச்சாலும் நாங்கள் சென்ற காரியத்திலும் தோற்றுவிடவில்லை. எங்கள் காற்சட்டைப் பைகள் நிறையப் புளியங்காய்களை அடைந்து கொண்டுதான் வெளியேறினோம். புகைமூண்ட போர்க்களத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவிலிருந்து வெளியேறி, எங்கள் கொட்டில்கள் அமைந்துள்ள இடம்வரை மூவரும் ஓட்டமும், நடையுமாகவே வந்து சேர்ந்தோம்.

"அக்கா... எங்க போனனீங்கள்? எண்டு யாரும் கேட்டால்.. உதில றோட்டில புதினம் பாத்திட்டு நிண்டனாங்கள் எண்டு மட்டும் சொல்லுங்கோ..."

"ஓமடா... நீங்களும் அப்பிடித்தான் சொல்லுங்கோடா.."

மூவரும் களைத்து வேர்த்தபடிக் குடிலைச் சென்றடைந்தோம்.

"எங்க லாத்தீற்று வாறியள்...? சனமெல்லாம் ஷெல்லடியில பதுங்கீற்றுக் கிடக்குதுகள் உங்களுக்கு இருக்கேலாதோ... மல்ரிபெரல் அடிக்கிறான் எங்க திரிஞ்சிட்டு வாறியள்?"

"இல்லை அன்ரி.. உதில சந்தீல புதினம் பாத்திட்டு நிண்டனாங்கள்.. ஷெல்லடிச்சுக் கேட்டோடனயும் றோட்டுக்கரையில இருந்த பங்கருக்குள்ள இறங்கீற்றம்... எல்லாம் முடியத்தான் ஓடி வந்தனாங்கள் அன்ரி.."

அக்காவின் சமாளிப்புக்கதையைக் கேட்கும்போது ஆச்சரியமாகத்தான் இருந்தது. பிள்ளைகளுக்கு இப்போது ஷெல்லடியிலிருந்து எப்படிக் காப்பெடுத்துக் கொள்வது? என்ற அனுபவம் வந்துவிட்டது எனும் சிந்தனையில் அன்று அம்மாவிடமிருந்து பேச்சு வாங்கவில்லை. ஷெல்லடிக்கும் போது எங்கு சென்றீர்கள்? என்ற கேள்விக்குப் பதிலளித்து அவர்களை அமைதிப்படுத்துவதில் மூவரும் பெரும் அவதிப்பட்டோம். எறிகணைகளும் தொடர்ந்து நெருக்கமாக விழத்தொடங்கியதால் எல்லோரும் பதுங்குகுழிக்குள் காப்பெடுக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றனர். நாங்கள் மூவரும், நான் பிரத்தியேகமாக வெட்டிய பதுங்குகுழியில் காப்பெடுத்துக் கொண்டோம். இப்போதுதான் நிம்மதியாக இருந்தது. மல்ரிபெரல் தாக்குதலின்போது, அங்கு நடந்தவற்றை மூவரும் மீட்டல் செய்து உரையாடுவதில் அந்த நேரம் கழிந்துகொண்டிருந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05

அன்று மாசி மாதம் முதலாம் திகதி. ஷெல்லடிகள் பரவலாகவே விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. இப்போது தேவிபுரக் கொலனி, சனநெருக்கத்தால் நிறைந்திருந்தது. விழுகின்ற ஷெல் யாருடைய குடில்மீதுதான் விழுந்து வெடிக்குமோ? என்றபடி மிக நெருக்கமாகக் குடில்கள் அமைக்கப்பட்டிருந்தன. வள்ளிபுனம், உடையார்கட்டு மக்கள் பெரும்பாலானோர் இந்தப்பக்கம் வந்துவிட்டனர். புதுக்குடியிருப்புச் சனங்களும் இந்தப் பகுதிகளில்தான் இடம்பெயர்ந்திருந்தனர். ஆனால் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மட்டும் இயங்கிக்கொண்டிருந்தது. அரச வைத்தியசாலை என்பதால் ஷெல்லடிக்க மாட்டான் என்ற நம்பிக்கையில் அது இயங்கிக்கொண்டிருந்தது. இதனால் காயப்பட்டவர்களும், நோய்வாய்ப்பட்டவர்களும் அங்கு தங்கிச் சிகிச்சைபெற்று வந்தனர். சிறிய காயங்கள் என்றால் வைத்தியசாலையே செல்வதில்லை. சென்றும் பயனில்லை. வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவிய சூழல். இடமும் இல்லை. காய்ச்சல் சார்ந்த வேறு வருத்தங்களுக்கும் சனங்கள் வைத்தியசாலை செல்வதையும் நிறுத்திக்கொண்டனர். எல்லோரும் கடைகளில் விற்கும் பனடோல் மாத்திரைகளை வாங்கிப் பயன்படுத்திக் கொண்டனர்.

இராணுவமும் போராளிகளின் காவலரண்களைத் தகர்த்தபடி வேகமான முன்னகர்வை மேற்கொண்டிருந்தது. இதனால் புலிகளின் கட்டுப்பாட்டில் புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், உடையார்கட்டு, தேவிபுரம், இரணைப்பாலை, மந்துவில், ஆனந்தபுரம், மாத்தளன், பொக்கணை, வெள்ளாம் முள்ளிவாய்க்கால், கரையாம் முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் முதலிய குறுகிய பிரதேசங்களே இருந்தன. அதற்குள்தான் வன்னிநிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் முடங்கிப்போய் இருந்தனர். இதனால் அப்பகுதி நோக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிலேச்சத்தனமான தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டவண்ணமே இருந்தனர். நான்கு திசைகளாலும் கடல், தரை, வான்வழித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டே இருந்தன. மக்கள் அப்பகுதிகளில் செறிந்து வாழ்ந்ததால் பாதிப்புக்கள் உச்சம் பெற்றன. உணவுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. மருத்துவ வசதிகள் இல்லை. இருப்பதை வைத்துக்கொண்டு சமாளித்து, உயிரைக் காக்கப் பதுங்குகுழிகளில் முடங்கிக் கிடந்தோம்.

மறுநாள் அதிகாலை, புதுக்குடியிருப்புப் பக்கமாகத் தொடர்ச்சியாகக் குண்டு வெடிக்கும் சத்தங்கள் கேட்டன. எல்லாத்திசைகளிலும் இச்சத்தங்கள் கேட்பது வழக்கமாகி விட்டமையால் இதை யாரும் கருத்திற் கொள்ளவில்லை. கொட்டிலின் வளையில் தொங்கவிடப்பட்டிருந்த வானொலியில், காலை நேரப் 'புலிகளின் குரல்' செய்தி ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தது. அதிகாலையில் இராணுவத்தினர், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையை இலக்கு வைத்து நடத்திய எறிகணைத்தாக்குதலில் பலர் உயிரிழந்ததாகவும், அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் செய்தியில் கூறப்பட்டது. இராணுவத்தினரின் இச்செயற்பாடு, எங்கும் சோகத்தையே ஏற்படுத்தியிருந்தது. வைத்தியசாலைகள், பாடசாலைகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படாதென்று நம்பியிருந்தவர்களுக்கு இச்செய்தி பேரதிர்ச்சியாகவிருந்தது. தமிழ்மக்களைக் கொன்றொழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் வைத்தியசாலையை இலக்குவைத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதென்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். அன்றைய நாட்களில் உயிர்களைக் காக்கும் சேவையைப் புரிந்த ஒரேயொரு பெரிய வைத்தியசாலையாகப் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையே விளங்கியது. அதுவும் இப்போது தாக்குதலுக்கு உட்பட்டுச் சிதறிக்கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிகணைகள் இப்போது வகைவகையாய் விழுந்து வெடிக்கத்தொடங்கின. ஆர்ட்டி, அஞ்சிஞ்சி, மல்ரிபெரல், கொத்துக்குண்டு எனப் பலவகையாக குண்டுகள் வெடிக்கத்தொடங்கின. ஆரம்பத்தில் 'ஆர்ட்டி' , 'மல்ரிபெரல்' முதலிய தொலைதூர எறிகணைகளே வந்து வெடித்தன. இப்போது இராணுவம் நெருங்கிவிட்டதால் 'அஞ்சிஞ்சி'த் தாக்குதல்கள் மோசமாக இடம்பெற்றன. இதனால் தொடர்ந்தும் தேவிபுரக் கொலனிப் பகுதியில் இருப்பது சாத்தியமாகாததால் இரணைப்பாலை செல்லுவதற்காகத் தயாரானோம். இராணுவத்தினர் சாலைப்பகுதியைக் கைப்பற்றிக்கொண்டு முன்னேறி வருவதால், போர்க்களத்தில் முன்னரங்குகளைத் தகர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் 'அஞ்சிஞ்சி', 'ஆர்ப்பீச்சி' முதலிய எறிகணைகள், இப்போது நாங்கள் இருந்த பகுதிகளுக்குள் வந்து வெடிக்கத்தொடங்கின.

இனி இதில் இருப்பதில் பயனில்லை என்ற எண்ணத்துடன், எடுக்கக்கூடிய சாமான்களை மட்டும் எடுத்துக்கொண்டு இரணைப்பாலை நோக்கிப் பயணமானோம். எப்படித்தான் ஷெல்லடித்தாலும் மக்கள் உயிரைக் கையில் பிடித்தபடி வீதிகளிலே பொதிசுமந்து சென்றுகொண்டிருந்தார்கள். ஆங்காங்கு மிக நெருக்கமாக எறிகணைகள் விழுந்து வெடித்தவண்ணமே இருந்தன. ஒவ்வொரு நிமிடமும் மக்கள் இறந்து கொண்டும், காயப்பட்டுக்கொண்டும் இருந்தனர். இறந்தவர்களை அதிலேயே புதைத்துவிட்டுக், காயப்பட்டவர்களோடு நகர்ந்துகொண்டிருந்தனர். நேரம் இரவு ஒன்பதைத் தாண்டி இருக்கும். இராணுவத்தினரின் பரா வெளிச்சத்தில் மெல்லமெல்லப் போய்க்கொண்டிருக்கிறோம். அஞ்சிஞ்சிச் ஷெல்கள் இப்போது அதிகமாக வரத்தொடங்கின. வண்டு தாழ்ந்து பறந்து வேவெடுத்த வண்ணம் இருந்தது. இரவு வேளைகளில் புலிகளின் படைநகர்வுகளைக் கண்காணிக்கும் பொருட்டு, வண்டு தாழ்வாகவே பறந்தபடியிருந்தது. தேவிப்புரக் கொலனியிலிருந்து சுமார் மூன்றரைக் கிலோமீற்றர் தொலைவு தூரத்தில் இரணைப்பாலை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைப்பாலைக்குப் போவதற்குத் தேவிபுரக் கொலனிப்பாடசாலைக்கு அருகில் ஒரு கிரவல்வீதி உள்ளது. அது அடர்ந்த வனப்பகுதியை ஊடறுத்துச்செல்லும் வீதி. இடையே பெரிய காட்டாறு ஒன்றும் வழி மறித்துப்பாய்கிறது. இந்தப்பாதையை, போராளிகள் இரவில் தம் படைநகர்வுகளுக்கும், இதர செயற்பாடுகளுக்கும் பயன்படுத்திக் கொள்கிறார்களென்ற எண்ணத்தில், இரவு நேரங்களில் இவ்வீதிக்கு விமானத்தாக்குதல்களும், எறிகணைத்தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுவதுண்டு. இதனால் இரவு வேளைகளில் அவ்வீதியில் பொதுமக்கள் பயணிப்பதைக் குறைத்துக்கொண்டனர்.

“இந்த நேரத்தில உப்பிடி அஞ்சிஞ்சி அடிக்கிறான்... ஆமி நல்லா நெருங்கிட்டான் போலை கிடக்கு... இன ஆசை”

“ஓம்போலதான் கிடக்குக் கந்தசாமி... இந்த நேரத்தில இந்தக் காட்டுப்பாதைக்கிளால போறது பயமடாப்பா.. இரவிரவா உந்தப் பாதைக்குத்தானாம் ஆர்ட்டியாலயும், கிபிராலயும் அடிக்கிறாங்கள். உந்த றோட்டில போன ஊருப்பட்ட சனங்கள் செத்துப்போச்சுதுகளாம். நாங்கள் இப்ப உதால போறது சரிப்படாது. பள்ளிக்கூடத்தடில இருக்கிற கோவில்ல இரவைக்கு நிண்டிற்று விடியச்சாமத்தில வெளிக்கிடுவம்.”

“ஓம் ஆசை... சின்னனுகளோட இரவில உதுக்கால போறது பயம்தான். ஷெல்லடியும் கூடவாக்கிடக்கு. கோயிலில நிண்டிற்றுப் போவம் ஆசை”

எல்லோரும் அந்தக்கோயிலை நோக்கி நடந்தோம். லவனாக்களும் பின்னால் வந்துகொண்டிருந்தார்கள். கோவிலடிக்குச்சென்றபோது, எங்களைப்போலப் பல நூற்றுக்கணக்கானோர் இராப்பயணத்திற்கஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு தங்கியிருந்தமை தெரியவந்தது. கோவிலடியில் இருந்த பதுங்குகுழிகளில் ஏற்கனவே வந்தவர்கள் காப்பெடுத்திருந்தனர். ஏனையோர் கோவில் மண்டபத்தில் பதுங்கியிருந்தார்கள். இறைவனைப் புகழ்ந்தபடி எல்லோரும் வேண்டுதல்களைச் செய்துகொண்டிருந்தனர். அஞ்சிஞ்சி எறிகணைகள் இப்போது மேலும் அதிகமாக விழத்தொடங்கிவிட்டன. பெரும்பாலும் இரவுநேர முன்னகர்வை இராணுவத்தினர் மேற்கொண்டு விட்டதாக அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். நாங்களும் கோவில் மண்டபத்தில் பதுங்கியிருந்தோம். இரவிரவாக எறிகணைகள் விழுந்து வெடித்துக்கொண்டே இருந்தன. ஆர்ட்டிச் ஷெல்லின் சத்தத்தைவிட அஞ்சிஞ்சியின் சத்தம் காதை அடைக்குமளவிற்குப் பெரியதாகவிருந்தது. கோயிலின் அருகாமையில் எல்லாம் ஷெல்கள் விழுந்து முழங்கின. எறிகணைச் சிதறல்கள் கோயில் மண்டபச் சுவர்களிலும், தூண்களிலும், கூரைகளிலும் பட்டுத் தெறித்தன.

எல்லோரும் இறைவனை வேண்டியபடியே இருந்தோம். இரவு ஒருவருக்கும் தூக்கமில்லை. அஞ்சிஞ்சிச் ஷெல்லின் தாக்குதலை முதற்தடவையாக இப்போதுதான் எதிர்கொள்கிறோம். அதன் வெடிப்பு ஒலியால் வானமே இடிந்து விழுந்துவிடும்போல இருந்தது. அஞ்சிஞ்சிச் ஷெல் திடீரென்று தலைக்குமேல் பாரிய இரைச்சலுடன் வந்து முழங்குவதால், காப்பெடுத்துக் கொள்வது கடினமாக இருக்கும். அது எங்கு வெடிக்கப்போகிறது? என்று ஊகிக்க முடியாத வண்ணம், இலக்கை நெருங்கியவுடன் பாரிய இரைச்சலோடு முழங்கும் தன்மையுடையது. இதனால் அதன் சத்தமே எல்லோரையும் கதிகலங்க வைத்துவிடும். அதன் தாக்கத்திலிருந்து தப்புவது கடினம். ஆனால் ஆர்ட்டிச் ஷெல் ஏவப்படும்போது எழும் வெடிச்சத்தம், எங்களுக்கு ஒரு எச்சரிக்கையைத் தந்துவிடுவதனால் பத்து வினாடிகளுக்குள் நாம் காப்பெடுத்துக்கொள்ள முடியும். அதுமட்டுமன்றி அந்தச் ஷெல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கைநோக்கிப் பயணிக்கும்போது எழும் கூவும் சத்தத்தை வைத்து, அது எங்கு முழங்கப்போகிறது என்பதை ஊகித்துக் கொள்ளமுடியும்.

ஆர்ட்டிச் ஷெல்லின் தாக்கம் பாரியது என்றாலும் அதன் கூவும் சத்தமும், முழக்கமும் அச்சத்தைத் தருவதில்லை. இதனால் ஆர்ட்டிச் ஷெல் தாக்குதல் இடம்பெறும்போதெல்லாம் அதன் சத்தத்தை வைத்துக் காப்பெடுத்தபடி நாம் எமது செயற்பாடுகளைச் செய்து கொண்டிருப்போம். இது தொலைதூர இலக்குக்களை நோக்கி ஏவப்படும் எறிகணையாகவே பயன்படுத்தப்பட்டது. அஞ்சிஞ்சிச் ஷெல் எவ்வித எச்சரிக்கையையும் தராமல் இலக்கை அண்மித்தவுடன் பாரிய இரைச்சலோடு சடுதியாக முழங்குவதால் இழப்புக்கள் அதிகமாகவே இருந்தன. சுமார் எண்னூறு மீற்றருக்கு அப்பாலுள்ள குறுந்தூர இலக்குகளைத் தாக்குவதற்காகவும், முன்னரங்குகளைத் தகர்ப்பதற்காகவும் இது இங்கு பயன்படுத்தப்பட்டதால், போர்க்கள அரண்களுக்கு அருகில் உள்ள குடியிருப்புக்கள் அதிகம் இழப்புக்களைச் சந்தித்தன. இதனாலேயே நாங்கள் தங்கியிருந்த பகுதியில் அஞ்சிஞ்சிச் ஷெல்களின் தாக்குதல்கள் அதிகமாயிருந்தன. இராணுவம் முன்னேறி விட்டது. அண்மையில் பாரிய வெடிச்சத்தங்கள் கேட்டுக்கொண்டேயிருந்தன. எறிகணைகளின் முழக்கங்களும் குறைந்தபாடில்லை.

"எல்லாரும் வெளிக்கிடுங்கோ.. இந்தச் ஷெல்லடிக்குள்ள
கிடந்து சாகிறத விட அங்கால போயிடலாம்"

அப்பாவின் வார்த்தைகள் அப்போது நியாயமானதாகவே எல்லோருக்கும் பட்டது. ஷெல் முழக்கத்துக்கு மத்தியிலும் பொதிசுமந்தபடி காட்டுப்பாதைவழியாக, இரணைப்பாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். இரவுநிலவுபோல இராணுவத்தின் 'பரா' மத்தாப்பு வெளிச்சம் ஒளியூட்டியபடி இருந்தது. ஒன்று அணைய மற்றொன்றாகத் தொடர்ந்து எரிந்துகொண்டேயிருந்தது. வீதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமருங்கும் அடர்ந்து வளர்ந்த காட்டுமரங்கள் கருகியபடியும், கிளைகள் முறிந்து விழுந்த நிலையிலும் கந்தகவெப்பத்தில் உருக்குலைந்து கிடந்தன. விமானத் தாக்குதல்களும், எறிகணைத்தாக்குதல்களும் இவ்வீதியோர வனத்தினைக் கருக்கியிருந்தன. இலைகள் உதிர்ந்து வரண்டுபோன மரங்கள் பட்டையுரிக்கப்படனவாகக் காணப்பட்டன. ஆங்காங்கு கால்நடைகள் இறந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. வீதியோரங்களில் கைவிடப்பட்ட நிலையில் வாகனங்களும், பொதிப்பைகளும் உருக்குலைந்து கிடந்தன. இவை உயிரைக்காப்பாற்ற எண்ணிய மக்களால், தாக்குதல்களின்போது கைவிடப்பட்டவையாகவே இருக்கலாம்.

வீதிநீளமும் சனத்திரளின் பயணம். ஆங்காங்கு மக்கள் இளைப்பாறியபடியும், ஆறாதபடியுமாகச் சென்றுகொண்டிருந்தார்கள். அந்த வனப்பகுதிகளில் போராளிகளின் முகாம் அமைந்திருக்கக்கூடும். இதனால்தான் அதியுயர் கண்காணிப்பில் வேவுவிமானங்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஏற்கனவே வான்தாக்குதல்களும், எறிகணைத்தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பெண்கள் குழந்தைகளோடும், பொதிப்பைகளோடும் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஆண்கள் உடைமைகளோடு நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். சிறுவர்களும், முதியவர்களும் இயலாமையுடன் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு கிலோமீற்றர் பயணத்தின் பிறகு ஒரு காட்டாற்றினைக் கடக்கவேண்டியிருந்தது. அந்தக்கிரவல் வீதியை ஊடறுத்து அந்த ஆறு பாய்ந்துகொண்டிருந்தது. இடுப்பளவுத் தண்ணீருக்குள்ளால் சுமார் பதினைந்து மீற்றர் நீளம்வரை நடந்துதான் ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் மெதுவாகப் பொதிச்சுமைகளுடன் கடினப்பட்டுக் கடந்து ஐந்நூறு மீற்றர்கூடச் சென்றிருக்க மாட்டோம். திடீரென ஐந்தாறு பராமத்தாப்பு வெளிச்சங்கள் வனப்பகுதிக்குமேலே எரியவிடப்பட்டன. வேவுவிமானங்கள் ஆழ்ந்த கண்ணோட்டத்தில் தாழப்பறந்து நோட்டமிட்டுக் கொண்டிருந்தன. விடியற்பொழுதில் இருளகன்று வனமே ஒளிபெற்றதுபோலக் காணப்பட்டது. எங்கிருந்தோ வந்த இரைச்சல் சத்தம் எங்களைச் சூழ்ந்து கொண்டது. கிபீர் விமானங்கள் வனத்தை வட்டமிட்டன. ஆழப்பறந்த விமானங்களின் சத்தங்களால் காதுகள் அடைத்தன. இதற்குள்தான் எங்கேயோ தாக்குதல்களை நடத்தப்போகிறான் என மனது சொல்லும்போது, ஒரு விமானம் பதிந்து வந்து தாக்குதலை மேற்கொண்டது. குண்டுகள் வனத்தினுள் வெடித்துச்சிதறிக் காட்டிற்குத் தீமூட்டின. தொடர்ந்து அடுத்தடுத்து வந்த விமானங்களின் தாக்குதல்கள் வனப்பகுதியையே நிலைகுலைய வைத்தன. குண்டுச் சிதறல்கள் மரங்களில் பட்டு, மரங்களை முறித்துத் தும்பாக்கின. காட்டுத்தீப்போல் வனப்பகுதியெங்கும் தீப்பரவியது. வீதிகளில் பதுங்கியிருந்த பலர் கொல்லப்பட்டதுடன் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

“தம்பீ டேய் படுடா படு படு... “

“டும் டும் டும் டும்.....”

அப்பா கத்தி முடிப்பதற்குள் மீண்டும் தாக்குதல்கள் தொடர்ந்தன. பதுங்குழிகள் இல்லாத நிலைமையில் சனங்கள் நிலத்திலே நீளப்பாட்டில் படுத்துக் கிடந்தனர். நான் வீதிக்கரையில் இருந்த பெரிய பாலை மரத்தின்கீழ் பதுங்கிவிட்டேன். என் வாழ்நாளில் இப்படியொரு விமானத்தாக்குதலில் அகப்பட்டதில்லை. குண்டுச்சிதறல்கள் பாலைமரக் கிளைகளை முறித்துத் துவம்சம் செய்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா.. அம்மா... எழும்பிடாதேங்கோ.. படுங்கோ படுங்கோ...."

என்று கத்தினேன். வீதியில் இறந்தவர்களினதும், காயப்பட்டவர்களினதும் குருதி பாய்ந்து கொண்டிருந்தது. மீண்டும் ஆழப்பதிந்து வந்த கிபீர்விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. வீதியில் காப்பெடுத்துக் கிடந்த பலர் அவலக்குரலில் கத்திக்கொண்டிருந்தனர். பலர் முறிந்து விழுந்த மரக்கிளைகளில் அகப்பட்டுப் பலியானார்கள். பலர் காயப்பட்டார்கள். தாக்குதல்களை வெற்றிகரமாய் நடத்திவிட்டு விமானங்கள் பயணித்தன. கிபீர்ச் சத்தங்கள் குறைந்தபோதுதான் சனங்களின் அழுகையும், ஒப்பாரியும் காதுகளில் தெளிவாய்க் கேட்டன. வீதிகளில் எங்கு பார்த்தாலும் அவலம்.

"கிபீர் போட்டான். எழும்பி ஓடுங்கோ... அடுத்த தாக்குதலுக்கு முன்னுக்கு இதைத் தாண்டவேணும்... ஓடுங்கோ.."

கந்தசாமியண்ணை தன்னுடைய பிள்ளைகள் இரண்டையும் தூக்கிக்கொண்டு ஓடினார். அவரின் மனைவி கையில் தூக்கக்கூடிய சமான்களை மட்டும் சுமந்துகொண்டு ஓடினாள். ஆசையும் (பெரியப்பா) விழுந்து கிடந்த, சாமான்கள் கட்டிய தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு உருட்டலானார்.

"தம்பீ... சைக்கிளை வேகமா நிமித்து... இனி....நிண்டுபார்க்கேலா .... உருட்டு உருட்டு.."

அப்பாவின் வார்த்தைகள் பயத்துடன் உற்சாகப்படுத்தின. எல்லோரும் கொண்டுவரக்கூடிய சாமான்களோடு ஓட்டமும் நடையுமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தெழும்பியபடிக் காட்டைக் கடக்கலானோம். சுமார் அரைமணிநேரத்தின்பின் காட்டைக் கடந்து விட்டோம். இல்லையென்றால் இப்போதும் காட்டுவீதியில்தான் வந்துகொண்டிருந்திருப்போம். எத்தனை உடல்கள் குண்டுச்சிதறல்களால் கிழிக்கப்பட்டிருந்தன? ஆங்காங்கு காயப்பட்டோர் எத்தனைபேர் கதறியபடியும், குருதி வெளியேறி மயக்கமுற்ற நிலையிலும் கிடந்தனர்? பலர் தம்மோடு வந்தவர்கள் இறந்த நிலையிலும், அதனைக்கூடப் பொருட்படுத்தாமல் ஓடிவந்து புலம்பிக்கொண்டிருந்தனர். காயப்பட்டவர்களை யார் தூக்குவது? எங்கு கொண்டு செல்வது? அருகில், எந்த வைத்தியசாலைகளும் இல்லையே! எல்லோரும் தாம் தப்பினால் போதும் என்ற நிலையில் காயப்பட்டவர்களையுமல்லவா கைவிட்டு வந்துள்ளனர். எத்தனை கொடூரத்தை இந்தப்பயணத்தில் காணவேண்டியிருந்தது.

காட்டைக் கடந்ததும் பெரிய வயல்வெட்டைப்பகுதிதான் கண்ணில் அகப்பட்டது. அவ்வயல்வெட்டைப் பகுதி தொடங்குமிடத்தில் ஒரு கடையுடன் கூடிய வளவு இருந்ததால் அங்கு சென்று எல்லோரும் தண்ணீர் குடித்துவிட்டு மீண்டும் பயணமானோம். ஆங்காங்கு எறிகணைகளின் வெடிப்புச்சத்தங்கள் கேட்டவண்ணமே இருந்தன. வயல்வெட்டைப் பகுதியைக் கடந்து விட்டோம். தென்னந்தோப்புக்கள் காட்சிகொடுத்தன. பரவலாக வெள்ளை, நீல நிறத் தறப்பாழ் கொட்டில்களும் காட்சிகொடுத்தன. நாங்கள் அங்குசென்று தங்குவதற்கு முடிவெடுத்தோம். ஆசை (பெரியப்பா), கோம்பாவில் திம்பிலிப் பகுதியில் தன்னுடைய மூத்த மகள் இருப்பதால் தன் குடும்ப உறுப்பினர்களோடு அங்கு செல்வதாகக் கூறிப் பயணத்தைத் தொடர்ந்தார். லவனாக்கள் பிரியவேண்டிய நேரம். பிரியவேண்டிய கட்டாயம். என்ன செய்வது? இந்தக்காலத்தில் பிரிவுகள் என்பது சாதாரணமாகிவிட்டன. நாங்களும், கந்தசாமியண்ணையின் குடும்பமும் தென்னந்தோப்புக் காணிக்குச் சென்று, கொண்டுவந்த தறப்பாழினால் பந்தல் போட்டுவிட்டுச் சமைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டோம். இரவிலிருந்து சாப்பாடில்லை. நன்றாகவே பசியெடுத்திருந்தது. சோறும், பருப்புக் கறியெண்டாலும் அந்த நேரத்தில் அமிர்தமாய் ருஷித்தது. சாப்பிட்டுவிட்டு எல்லோரும் சற்றுப் படுத்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தோம். எறிகணைகளின் வெடிப்பொலிகள் ஓய்ந்தபாடில்லை. அருகில் கொட்டில் போட்டிருந்த ஐயாவின் அரவம் எங்களை எழுப்பியது.

"மனே.. பெடியள்... எங்கயிருந்து வந்திருக்கிறியள்?

"ஓமய்யா.. நாங்கள் உங்க... தேவிபுரத்தில இருந்து வாறம்."

"இப்பயே வாறியள்... உந்தக்காட்டுக்குள்ளதானே இப்ப கிபிரால கொட்டினவங்கள்... உதில நீங்கள் மாட்டேலயே?"

"ஏனய்யா உதைக்கதைக்கிறியள்.. நாங்கள் பட்டபாடு தெரியுமோ? உயிரக்கையில பிடிச்சுக்கொண்டு ஓடிவந்திட்டம்.. றோட்டில கொண்டந்து அடிச்சுட்டான். எவ்வளவு சனம் செத்துப்போச்சுதுகள். காயப்பட்டாக்களக்கூடத் தூக்காம ஓடிவந்துட்டுதுகள். கடவுள் காத்தது, எங்களுக்கு ஒண்டும் ஆகேல..."

"அடக் கடவுளே... உந்த அறுவாங்கள் சனத்தக் கொல்லுறதுக்கெண்டே திரியுறாங்கள்... நேற்றும் இந்த வளவுக்க ஷெல்லடிச்சுவிட்டாங்கள்.. உந்தா தெரியுற கொட்டிலில இருந்த புள்ளத்தாச்சி பொம்பளையொண்டு செத்துப்போச்சு.. மனுசனுக்கும், ரெண்டு பிள்ளையளுக்கும் காயம். இரவுதான் உந்த வெட்டையில இருக்கிற சுடலையில கொண்டுபோய் தாட்டிட்டு வந்தனாங்கள்.. யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெத்த புள்ளயளோ...! காயப்பட்டாக்கள ஐசிஆர்சி வாகனத்தில, இரணப்பாலைப் பள்ளிக்கூடத்தில இயங்கிற ஆசுப்பத்திரிக்குக் கொண்டுபோட்டாங்கள்..."

அப்பாவும், அந்த ஐயாவும் உரையாடிக்கொண்டிருப்பதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். இந்தக்காலத்தில எப்போது சாவு வரும் என்று யாருக்கும் தெரியாது. எல்லா இடங்களிலும் தொடர் தாக்குதல்கள் நடந்துகொண்டே இருந்ததனால், ஒருநாளில் சுமார் நூற்றைம்பதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். புலிகளின் குரல் வானொலி, இந்த இக்கட்டான சூழ்நிலைகளிலும் இயங்கிக்கொண்டிருந்ததனால் இச்செய்திகளை இலகுவாக அறிந்துகொள்ள வாய்ப்பாகவிருந்தது. எறிகணைகளின் தாக்குதல்கள் அதிகரிக்கத்தொடங்கின. சர்வதேச நாடுகளால் தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகள், கொத்துக்குண்டுகள், மல்ரிபெரல் தாக்குதல்களென எல்லாம் குடியிருப்புக்களை நோக்கியே மேற்கொள்ளப்பட்டதனால், இறப்புவீதம் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமே இருந்தது. இடையிடையே நாங்கள் இருந்த தென்னந்தோப்புக் காணியிலும் எறிகணைகள் விழுந்து வெடித்தன. முன்னர் அங்கு தங்கிவிட்டுச் சென்றவர்கள் வெட்டியிருந்த பதுங்குகுழிகளில் காப்பெடுத்துக்கொண்டோம். அங்கு இருப்பது சரிவராது என்ற சிந்தனையே எல்லோருக்கும் தோன்றியது. ஷெல் விழுந்து வெடித்து, உயிர் காவுவாங்கிய இடத்தில் எப்படித் தங்கமுடியும்?

மாலை நான்கு மணியிருக்கும். தென்னந்தோப்புக் காணிக்கருகில் அமைந்திருந்த மணல் வீதி வழியே கோம்பாவில் திம்பிலிப் பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். தொடர் தென்னந்தோப்புக் காணிகள் அமைந்திருந்ததனால் சில காணிகளில் போராளிகளின் முகாங்களும் அமைந்திருந்தன. அவர்களும் மக்களும் வேறானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லர். மக்களே அவர்கள். அவர்களே மக்கள் என்ற சிந்தனையே சமூகத்தில் உயர்வாகப் பேணப்பட்டதால், மக்களின் குடியிருப்புக்களில் அவர்களின் முகாம்களும் அமைந்திருப்பது இயல்பாகிப்போனது. ஒருகிலோ மீற்றர் பயணத்தின் பின் திம்பிலியில் அமைந்துள்ள நாகதம்பிரான் கோவிலடியை அடைந்தோம். கோவிலின் பொங்கல் மண்டபத்தில் தங்குவதற்கு ஏற்பாடுசெய்த நிலையில், அதில் இருக்கமுடியாத சூழல் நிலவியது. கோவிலிற்குப் பின்னால் இருந்த பற்றைப் பகுதியில், ஷெல்லடியில் அகப்பட்டு இறந்துபோன மாடுகளிலிருந்து துர்நாற்றம் வீசத்தொடங்கியது. அதனால் அதில் இருக்க முடிவில்லை.

கோவிலுக்கு அருகில் இருந்த குளக்கரையில் பெரிய புளியமரமொன்று இருந்ததால். அம்மரத்தின் கீழ் வந்து தங்கினோம். எங்களைப்போலப் பல குடும்பங்கள் இப்போது திம்பிலிக்கு வந்துகொண்டிருந்தார்கள். எல்லா இடங்களிலும் எறிகணைகள் வந்து விழுந்தவண்ணமே இருந்தன. கோவிலடியிலும் அதற்குப் பின்னால் உள்ள பற்றைக்காடுகளிலும் எறிகணைகள் விழுந்து நிலத்தை நடுங்கச் செய்தன. நாங்கள் இருக்கும் புளியமரத்தடியில் பதுங்குகுழிகள் இல்லாமையால், புதிய பதுங்குகுழி அமைக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தோம். கந்தசாமியண்ணை தறப்பாழால் பந்தல் போட்டுக்கொண்டிருந்தார். போகிற இடங்களில் எல்லாம் போடப்படும் கொட்டிலுக்கு இந்தத் தறப்பாழே பயன்படுத்தப்பட்டதால் ஆங்காங்கு கிழிசல்களும் இருந்தன. இந்தத் தறப்பாழ் யுனிசேப் நிறுவனத்தினால் தேவிபுரத்தில் இடம்பெயர்ந்து இருந்தபோது வழங்கப்பட்டது. இந்தக்காலங்களில் யுனிசேப், யுஎன்எச்சிஆர், தமிழர்புனர்வாழ்வுக் கழகம் முதலிய நிறுவனங்கள் மக்களுக்குப் பெரும் உதவிகளைச் செய்துகொண்டிருந்தன. மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள், உலருணவுப் பொருட்கள், அத்தியாவசியத் தேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிக்கொண்டிருந்ததில் இவ் நிறுவனங்களுக்குக் கணிசமான பங்கிருந்தன.

இக்காலகட்டத்தில் உணவு உற்பத்தி இன்மையால் உணவுப்பற்றாக்குறை நிலவியது. உணவுப்பொருட்களுக்கும், மருத்துவப் பொருட்களுக்கும் இக்காலகட்டத்தில் நல்ல மவுசு இருந்தது. இதனால் ஏனைய பொருட்கள் மலிவுவிலைகளிலே விற்பனை செய்யப்பட்டன. சவர்க்காரம், சம்போ, தீப்பெட்டி, பற்பசை, தூரிகை, வீட்டுத்தளபாடங்கள், வாசனைத்திரவியங்கள், வாகனங்கள் என உணவுசாராத பல பொருட்கள் வாங்குவாரற்றுக் கிடந்தன. மக்கள், கிடைப்பதை உண்டுவிட்டு உயிரோடு இருந்தால் போதும் என்ற நிலையிலேயே இருந்தனர். பொன் மிகவும் குறைந்த விலைகளிலே மக்கள் மத்தியில் விற்பனை செய்யப்பட்டது. ஆனாலும் வாங்கும் நிலையில் மக்கள் இருக்கவில்லை. இருப்பதை விற்று உணவுப்பொருட்கள் வாங்குவதிலேயே சனங்கள் குறியாய் இருந்தனர். ஒரு இடத்தில் இருப்பதும், அவ்விடத்தில் எறிகணைகள் வந்து விழுந்து வெடித்துவிட்டால், வேறிடம் நோக்கி நகர்வதும், அங்கும் விழுந்து வெடிக்க இன்னோரிடம் செல்வதுமாக மக்களின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. நாங்களும் இப்போது பல இடங்களில் இருந்து, பல இடங்களைக்கடந்து, கோம்பாவில் திம்பிலிப் பகுதியில் அமைந்துள்ள நாதகம்பிரான் ஆலயத்திற்கு அருகில் இருக்கிறோம். போகும் இடமெல்லாம் எத்தனை பதுங்குகுழிகளை எமது கைகள் வெட்டியிருக்கும்? எத்தனை கொட்டில்களைப் போட்டிருக்கும்?

அடுத்த பதுங்குகுழி அப்பாவால் புளியமரத்தடியில் வெட்டப்பட்டுக் கொண்டிருந்தது. இதில் எத்தனை நாட்கள் தங்கப்போகிறோம்? பதிலே தெரியாத வினாவாகிப்போனது எங்கள் வாழ்க்கை. ஆங்காங்கு எறிகணைகள் விழுந்தாலும், எங்குதான் செல்வது என்ற சிக்கலில் இந்தத் திம்பிலிப் பகுதியில் இரண்டு கிழமை இருந்திருப்போம். போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்ந்தபாடில்லை. இராணுவமும் முன்னகர்வை நிறுத்தவேயில்லை. தேவிபுரம், வள்ளிபுனப்பகுதி மக்கள் முற்றுமுழுதாக வெளியேறிவிட்டனர். அவர்கள் இரணைப்பாலை, பச்சைப்புல்மோட்டை, மாத்தளன், பொக்கணை முதலிய இடங்களில் வசிக்கலாயினர். அங்கும் விமானத்தாக்குதல்களுக்கும், எறிகணைத் தாக்குதல்களுக்கும் பஞ்சமேயில்லை. இந்தச்சூழ்நிலையில் நாட்கள் சில நகர்ந்தன. இராணுவத்தின் முன்னகர்வு வேகமாக இருப்பதை, அஞ்சிஞ்சிச் ஷெல் தாக்குதல்கள் உறுதிப்படுத்தின. இப்போது நாங்களும் திம்பிலியை விட்டுச் செல்லவேண்டிய நேரம். சென்றுதானே ஆகவேண்டும். சனங்கள் மீண்டும் இரணைப்பாலை வழியாக மாத்தளன் கடற்கரைப்பக்கம் செல்லத் தொடங்கினார்கள். பங்குனி மாதத்தின் ஆரம்பப்பகுதியாகத்தான் இருக்கவேண்டும். நாங்களும் முக்கிய ஆவணங்களுடனும், கையில் இருந்த உணவுப்பொருட்களுடனும், குடிலுக்கு அவசிமான பொருட்களுடனும் திம்பிலிப்பகுதியைவிட்டுப் புறப்படலானோம். மக்களோடு மக்களாய் இரணைப்பாலை வழியாகச் ஷெல்லடிகளுக்கு மத்தியில் மாத்தளனை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு முன்னால் பலர் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் நாங்கள். எங்களுக்குப் பின்னால் கந்தசாமியண்ணை குடும்பம். அவர்களுக்குப் பின்னால் வேறு பலர். இப்படி முகவரி இழந்த மக்களாய்ப் பசிப்பிணியோடு உயிரைக்காக்கக் கடற்கரையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம். காணும் இடங்களில் எல்லாம் எறிகணை வெடிப்புக்களின் வடுக்கள் எஞ்சியிருந்தன. முகாரி ராகம் ஒலித்துக்கொண்டே இருந்தது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

இரணைப்பாலை எங்கும் அகதிகளாய் மக்கள் அலைந்து திரிந்தனர். குடியிருப்பு நெருக்கத்தால் எறிகணைகள் பலரை இலகுவாய்ப் பலியெடுத்திருந்தன. இருப்பதற்கே இடமில்லை. எங்கும் கூடாரங்கள். புலிகளின் வசம் இருந்த நிலப்பரப்புக் குறைந்து ஒடுங்கியபடி சென்றது. இதனால் தாக்குதலின் பாதிப்புக்கள் தீவிரம் பெற்றன. மாத்தளன்பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த நாம் இரணைப்பாலையில் ஒரு வளவில் சென்று தண்ணீர் அருந்தினோம். பின் அவ்வளவில் இருந்த மாமரத்தின்கீழ் மதியச் சாப்பாட்டைச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, அருகில் இருந்த பதுங்குகுழியின் கரையில் ஓய்வெடுத்தோம். பக்கத்துக் காணியில் மாவீர்களின் சோகக்கீதம் ஒலித்துக்கொண்டிருந்தது. போராளிகளின் வாகனங்கள் போவதும் வருவதுமாய் இருந்தன.

“ஆசை.. உந்த வளவில யாரோ வீரச்சாவுபோல கிடக்கு. எங்கட பெடியள் ஓடுப்பட்டுக்கொண்டு திரியுறாங்கள். சோகக் கீதம் வேற இசைக்குது...”

கந்தசாமியண்ணை வேலிக்கு அருகில் சென்று எட்டிப்பார்த்தார்.

“ஐயோ கடவுளே.. ஆசை வெளிக்கிடுங்கோ... எல்லாரும் எழும்புங்கோ..”

“ஏனடா..ஏன்.. அங்க என்ன?”

“ஆசை உது துயிலுமில்லம் ஆசை. கனக்க வொடிகளை அடக்கம் செய்யுறதுக்குக் கொண்டுவந்து வைச்சிருக்காங்கள். இப்ப எல்லாத் துயிலுமில்லங்களும் இராணுவத்தின்ர கட்டுப்பாட்டுக்குள்ள போயிற்றுத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் இப்ப புதுசா உதில துயிலமில்லத்தைத் திறந்திருக்காங்கள் போலை கிடக்கு"

"அப்ப இதில இருக்கிறது சரிவராது கிளம்புவம்... வண்டு வேற சுத்திக்கொண்டிருக்கிறான்.. மல்ரியால பொழிஞ்சான் எண்டா, எங்கட கதை இதோடை சரி."

அப்பா பேசி முடிப்பதற்குள் எல்லோரும் புறப்படத் தயாரானோம். அருகில் துயிலுமில்லம் அமைந்திருப்பதால், நாம் இருக்கும் இடம் பாதுகாப்பானதாக இல்லை. வாகனங்களின் நடமாட்டங்களைக் கண்ணுற்றால் விளைவுகள் மோசமானவையாகவே இருக்கும். ஏனெனில் மேலே வேவுவிமானங்கள் தாழ்வாகச்சுற்றிப் படமெடுத்தவண்ணமிருந்தன. ஈழத்தமிழராய்ப் பிறந்தது பாவம்தான். மீண்டும் பொதிசுமந்து செல்லத் தொடங்கினோம். இப்போது அப்பாவும், கந்தசாமியண்ணையுமே சைக்கிளில் சாமான்களைக் கட்டிக்கொண்டு வந்தனர். என்னுடைய சைக்கிளைத் திம்பிலியில் போட்டுவிட்டு வந்தேன். கோவிலடியில் விழுந்து முழங்கிய ஷெல்லின் சிதறல்களிலொன்று சைக்கிளின் சில்லைக் கிழித்துச் சென்றதனால், அதை அங்கேயே போட்டுவிட்டேன். அதனால் இப்போது கைகளில் பைகளைச் சுமந்தபடி செல்கிறேன். மாலை நேரம் இருள் கௌவத் தொடங்கியது. இரவுக்குள் மாத்தளனை அடைந்துவிட வேண்டும் என்ற சிந்தனையில் வேகமாக நடந்துகொண்டிருந்தோம்.

இருட்டி விட்டதால் மக்களின் நடமாட்டங்கள் வீதிகளில் பெரிதாக இருக்கவில்லை. இரவு வேளைகளில் போராளிகளின் நடமாட்டம் அதிகமாக இருக்குமென்ற ஊகத்தில், வீதிகளை இலக்குவைத்தே இராணுவத்தினர் ஷெல்லடிப்பதுண்டு. இதனால் இரவு வேளைகளில் பிரதான வீதிகளினூடாகப் பயணிப்பதைப் பெரிதும் மக்கள் விரும்பவில்லை. தாமிருக்கும் இடத்திலேயே பதுங்குகுழிகளின் காப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தங்கிவிடுவதுண்டு. நாம் தங்குவதற்கு வாய்ப்பானபகுதி இரணைப்பாலைப் பகுதியில் இல்லாமையால், மாத்தளன் கடற்கரைப்பகுதிக்கே சென்றாக வேண்டிய கட்டாயத்தில் பயணித்தோம். இரவு ஏழுமணியிருக்கும், பச்சைப்புல்மோட்டைப் பகுதியை அடைந்துவிட்டோம். அது பெரும் உப்பள வெளியாகவிருந்தது. அவ்வெட்டையில் பாதுகாப்பு இன்மையால் மக்கள் அவ்விடங்களில் பெரிதும் தங்கவில்லை. மரங்களே இல்லாத பகுதியாக இருந்தமையாலும், வெய்யில் வெப்பம் அதிகமாக இருப்பதாலும், பதுங்குகுழிகளை வெட்டுவது கடினமாக இருந்தமையாலும் நேரடியாக மாத்தளன், பொக்கணைக் கடற்கரைப் பகுதிகளுக்கே மக்கள் சென்றிருந்தனர். ஆனாலும் ஒரு சிலர் அவ்வெட்டைக் கரைகளில் நின்ற ஒரு சில மரங்களின் கீழ் பதுங்குகுழிகளை வெட்டிக் குடில் அமைத்துத் தங்கியும் இருந்தனர்.

இரவானதால் போராளிகளின் நடமாட்டம் அதிகமாகவே இருந்தன. அவர்கள் களப்பணி நிமித்தம் தம் உரையாடல்களை வோக்கிரோக்கியினூடாகவே நிகழ்த்துவதுண்டு. போராளிகள் எங்கு நின்று வோக்கிரோக்கியைப் பயன்படுத்தினார்களோ, சிறிது நிமிடங்களில் அந்த இடங்களில் இராணுவத்தினரின் எறிகணைகள் வந்து வெடிப்பதுண்டு. வோக்கிரோக்கியின் சிக்னலை வைத்து, அவர்களின் இருப்பிடத்தைத் துல்லியமாகக் கணித்து, எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்ளும் திறனை இராணுவத்தினர் பெற்றிருந்தனர். அதன் காரணத்தினால் ஊர்மனைகளில் நின்று போராளிகள் வோக்கிரோக்கியைப் பயன்படுத்துவதை ஊர்மக்கள் இக்காலத்தில் எதிர்த்துவந்தனர். இதே நிகழ்வு பச்சைப்புல்மோட்டைப் பகுதியில் எங்களின் முன்னால் அரங்கேறியது. உப்பள வெட்டையின் கரைகளில் மரங்கள் இருந்ததால் அதன் கீழே சனங்கள் கொட்டில்களைப்போட்டுத் தங்கியிருந்தனர். அதன் வழியாகத் தம்கடமை நிமித்தம் பயணித்த போராளிகள் சிலர் அவ்விடத்தில் சற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று, வோக்கிரோக்கியினூடாக ஏதோ உரையாடியவண்ணமிருந்தனர். அப்போது எங்களுக்கு முன்னால் பயணித்துக்கொண்டிருந்த கிழவியொருத்தி அதனைக் கண்ணுற்று, போராளிகளை வசைபாடிக்கொண்டு போனாள்.

> "துலைவார் பேச இடமில்லாமல்.. உதில நிண்டு கதைக்கிறாங்கள்... உவங்களாலதான் நாங்கள் சாகிறம். எவ்வளவோ இடமிருக்கு, சனத்துக்கதான் வந்து பூரோணுமோ? உவையள் பேசிட்டுப் போவின. நாங்கள் தான் உத்தரிக்கோணும்... ஓடுங்கோடா துலைவுக்கு.. நேற்றும் உப்பிடித்தான். உவையள் கதைச்சிட்டு போட்டின. அவங்கள் அடிச்ச ஷெல்லில குழந்தைகுஞ்செண்டு செத்துப் போச்சுதுகள்... இப்ப இதில இருக்கிற சனத்தைக் காவுகொள்ளத்தான் அடுக்கெடுக்கின..."

அந்தக் கிழவியின் பேச்சைக் கேட்டதும் அதில் நின்ற போராளிகள் அமைதியாக நகரத்தொடங்கினர். அவள் பேசியதில் ஓர் அர்த்தம் இருந்ததை அதில் நின்ற போராளிகள் உணர்ந்து விட்டனர் போலும். நேற்றைய பொழுதில் நடந்ததை வைத்தே கிழவி இன்று இப்படிச் செயற்பட்டாளோ என்னவோ? அவள் சொன்னதில் பொய்யேதும் இல்லை. சிறிது தூரம் பயணித்திருப்போம். தொலைவில் எறிகணைகள் ஏவிவிடப்பட்டதை உறுதிப்படுத்துவதாய்ச் சில வெடிச்சத்தங்கள் கேட்டன. அச்சத்தங்கள் கேட்டுப் பத்து வினாடிகள் இருக்கும், எமது தலைக்கு மேலால் இரைந்து கொண்டுபோன எறிகணைகள், போராளிகள் நின்று பேசிய இடத்தில் துல்லியமாக வெடித்தன. நாங்கள் எல்லோரும் உப்பள வெளியில் படுத்து விட்டோம். அவ்விடத்தில் வந்துகொண்டிருந்தவர்களதும், மரங்களின் கீழ் வசித்தவர்களதும் நிலைதான் பாவம். எத்தனை உயிர்கள் பறிபோனதோ? எத்தனை பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி வெள்ளத்தில் துடித்தார்களோ? மனம் பல வினாக்களை எழுப்பியபடி இருந்தது. நின்று பார்க்க நேரமில்லை. எங்கள் பயணம் மீண்டும் தொடர்ந்தது. அந்தச் ஷெல்விழுந்த இடத்தைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன். கந்தகநெருப்பின் சுவாலை இருளை விழுங்கிக்கொண்டிருந்தது.

எறிகணைகளின் வெடிப்புக்கு மத்தியிலும் சோராத பயணத்தால் மாத்தளன் கடற்கரைப்பகுதியை அடைய இரவு எட்டுமணியாகிவிட்டது. கடற்கரையின் கண்ணுக்கெட்டிய தூரம் முழுவதும் ஆங்காங்கு மரங்களை மையப்படுத்திய தறப்பாழ் கொட்டில்களே காட்சியளித்தன. பரா மத்தாப்புக்கள் தொடர்ச்சியாக இராணுவத்தினரால் எரியவிடப்பட்டுக்கொண்டிருந்ததால் எல்லாவற்றையும் தெளிவாகவே பார்க்க முடிந்தது. கடலலையின் இரைச்சலும், உப்புக்காற்றும் எமை அணைத்து ஆறுதலளிப்பதுபோல் இருந்தது. தொடர்நடையால் உடம்பெல்லாம் வலியெடுத்திருந்தது. எங்கோ ஓர் இடத்தில் ஓய்வெடுத்தே ஆகவேண்டும். மரங்கள் இருக்கும் இடங்களின் கீழ் கொட்டிலை அமைக்க ஆசைகொண்டாலும், அம்மரங்களைச் சூழ ஏற்கனவே குடில்கள் அமைக்கப்பட்டிருந்தன. என்ன செய்வது? இக்கடற்கரை வெய்யிலில் தறப்பாழ்குடிலில் வசிப்பது இலகுவான காரியமல்ல. கருவாடு மாதிரிக் காயவேண்டியிருக்கும். இதனால்தான் மரங்களுக்குக்கீழ் மக்கள் குடில்களை அமைத்திருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் மாத்தளன் கடற்கரைப்பகுதிகளில் மரங்களை அடிப்படையாகக் கொண்ட கொத்தணிக் கிராமத்தையே எம்மால் காணமுடிந்தது. மரங்களின் கீழ் கொட்டில்களை அமைக்க இடம்போதாத நிலைமையில், மரங்களை அண்டிய சூழலில் குடில்களை அமைத்திருந்தனர். இதன்காரணத்தினால் பகல் வேளைகளில் மரத்தடி நிழலில் இருக்கவும், இரவுப் பொழுதில் குடில்களில் இருக்கவும் வாய்ப்பாகவிருந்தது. பின்னைய நாட்களில் சனங்களின் அதிகரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகையால், இருக்க நிலமில்லாமல் கடற்கரையே குடில்களால் நிரப்பப்பட்டது.

"இஞ்சேருங்கோ.. அப்பா.. எல்லா மரத்தடியிலயும் முதலே சனங்கள் வந்து இடம்பிடிச்சுப்போட்டுதுகள். நாங்கள் இருக்கிறதெண்டா உந்த வெளியிலதான் இருக்கோணும். உந்தத் தறப்பாழில எப்படியப்பா இருக்கிறது. உப்பிடி உந்த கடற்கரையால கொஞ்சத்தூரம் பாத்துக்கொண்டு போவம். எங்கயும் மரங்கள் அகப்பட்டால் அதடில இருக்கலாம்."

அம்மா கூறிமுடிப்பதற்குள், அம்மாவின் கருத்துக்களுக்குப் பலம் சேர்ப்பதுபோல் கந்தசாமியண்ணையும் தொடர்ந்தார்.

"ஓமாசை... அன்ரி சொல்வதும் சரிதான். இந்தக் கடற்கரைவெய்யிலுக்கு மரத்தடிதான் சரி. அங்கங்க இருக்கிற ஆலமரத்தடியில எல்லாம் சனங்கள் இருக்குதுகள். உப்பிடியே உங்காலப் பக்கம் கொஞ்சத்தூரம் போய் பாப்பம். ஏதும் மரங்கள் அகப்பட்டா அதுக்குப்பக்கத்திலயாவது கொட்டிலப் போடுவம். பகலிலயாவது மரத்துக்குக் கீழ போய் இருக்கலாம் ஆசை"

"ம்ம்ம்... அதுவும் சரிதான்.. அப்ப வெளிக்கிடுங்கோ போய்ப் பாப்பம்.."

பரா மத்தாப்பு வெளிச்சம் அகதி நிலத்தையே பகலாக்கியிருந்ததால், கடற்கரைச் சூழலில் அமைந்திருந்த மரங்கள் இலகுவாகவே எம் கண்களுக்குப் பட்டன. ஆனாலும் அவை வெறுமையாக இருக்கவில்லை. இப்படியே ஒருகிலோமீற்றர் தூரம்வரை கடற்கரையோரத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்துவிட்டோம். ஆங்காங்கு அகப்பட்ட மரங்கள் அத்தனையும் பல குடும்பங்களை அரவணைத்தபடியே இருந்தன. எந்த மரங்களும் வெறுமையாய் இருக்காது என்பதை உணர்ந்து, இப்போது நாம் நிற்கும்,கடற்கரை வெளியிலேயே குடிலமைக்க முடிவுசெய்தோம். நாம் இப்போது வலைஞர்மடத்திற்கு அருகான கடற்கரைப்பகுதியில்தான் நிற்கிறோம். நாங்கள் புதுக்குடியிருப்பில் இருக்கிற காலத்தில், வீட்டிற்குத் தெரியாமல் சைக்கிளில் வந்து நண்பர்களோடு, இந்தக்கடலில்தான் நான் குளித்து விளையாடுவதுண்டு. அதனால் இந்தக்கடற்கரைப் பகுதிகள் எனக்கு நல்ல ஞாபகத்தில் இருந்தன.

இரவு, நேரம் பத்துமணியைக் கடந்துவிட்டது. நாம் கொண்டுவந்த தறப்பாழினை விரித்து அதன்மேல் எல்லோரும் ஓய்வெடுத்துக் கொண்டோம். எல்லோருக்கும் நல்ல பசி. இப்போது சமைத்துச் சாப்பிடுவதற்கான சூழல் இல்லை. அங்கு கிடந்த பனைமட்டை விறகுகளை மூட்டித் தேநீர் வைத்து, கந்தசாமியண்ணையாக்கள் கொண்டுவந்த வறுத்த முட்டைமாவைச் சாப்பிட்டோம். இப்போது கொஞ்சம் களைப்பும், பசியும் நீங்கிவிட்டன.

"அப்பா.. அப்பா.. எப்பிடி அப்பா.. இந்த மணலில கொட்டில் போடப்போறியள்?... கொட்டில் போட, இஞ்ச தடியளையே காணேல்லையப்பா? வங்கரும் கிண்டேலாப்பா. கிண்டக்கிண்ட மணல் தூந்தெல்லோ போவும்.."

"ம்ம்ம்... விடியட்டும்... உங்காலை ஏதும் தடிதண்டுகள் எடுக்கலாமோண்டு பாப்பம்... இல்லாட்டி பச்சைப்புல்மோட்டைப் பக்கம்தான் போய்க் கொண்டுவரோணும்.. வங்கர் இஞ்ச வெட்டேலா.. கொம்மான்ர சாறியளை வெட்டி உரவேக்மாதிரித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தச்சிட்டு.. அதுக்குள்ள மண்ணைப்போட்டு நிமித்தி அடுக்கவேண்டிதுதான்."

கடற்கரைப்பகுதிகளில் பதுங்குகுழிகளை அமைப்பதில் மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்திருந்தனர். அதுமட்டுமன்றிக் கிணறு வெட்டுவதிலும் பாரிய சவால் இருந்தது. மணல்பரப்பில் குழிதோண்டத்தோண்ட மணல் உதிர்ந்து மீளவும் குழி மூடப்படுவது இயல்பானதாகும். இதன்காரணத்தினால், மணலை அகழ்ந்தெடுத்தபின் நான்கு புறமும் தகரத்தினை வைத்து, தகரங்கள் உள்ளே சாயாத வண்ணம் மரத்தடிகளை இறுக்கி, தகரங்களின் வெளிப்புறமாக, அகழ்ந்தெடுத்த மணலினைத் தகரத்தோடு அணைத்துப் பதுங்குகுழிகளை மக்கள் அமைந்திருந்தனர். இக்காலத்தில் உரப்பைகளின் தட்டுப்பாடு காரணமாகப் பழைய சாறிகளை வெட்டி, நீளமான பைகளாகத் தைத்து அதனுள் மணலிட்டு நிரப்பி, அவற்றினை அடுக்கிக் காப்பரணாக அமைக்கப்பழகிக் கொண்டனர். கடற்கரை மணலைத்தோண்டி அதனுள் பனங்கொட்டுகளை இறக்கியும், வளைத்துக் கட்டிய நீளமான தகரங்களைப் புதைத்தும் கிணறுகளை அமைத்திருந்தனர். இக்கிணறுகள் ஒரு வீட்டுக்காரர்களால் அமைக்கப்பட்டிருந்தாலும், இக்காலத்தில் அவை பொதுக்கிணறுகளாகவே பயன்படுத்தப்பட்டன.

எறிகணை வெடிப்புக்களுக்கும், மத்தாப்பு வெளிச்சங்களுக்கும் மத்தியில் நாம் இருந்தாலும், கடற்கரைக்காற்றின் தாலாட்டில் இரவு கடந்துவிட்டது. காலையானதும் கந்தசாமியண்ணையும், அப்பாவும் நாமிருக்கும் பகுதியில் தடிகள் இல்லாமையால், பச்சைப்புல்மோட்டைப் பகுதிக்குச் சென்று கொட்டில் போடுவதற்குத் தேவையான மரந்தடிகளை எடுத்துவந்தார்கள். இரண்டு தடிகளை உயரமாக நட்டு, அவற்றுக்கிடையில் கயிற்றினைக்கட்டி, நான்கு தடிகளை நான்கு மூலைகளிலும் புதைத்துத் தறப்பாழைக் கட்டிக் கொட்டில் போட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டெரிக்கும் வெப்பத்தில் இக்கொட்டிலில் இருந்தாலும், கடற்கரைக்காற்றுக் கொஞ்சம் வெப்பத்தைத் தணித்திருந்தது. ஆரம்பத்தில் மூன்று வேளைகள், இரண்டு வேளைகள் எனச் சாப்பிட்ட எமக்கு இப்போது ஒரு வேளை சாப்பிடுவதே பெரும் போராட்டமாகத்தான் இருந்தது. கொண்டுவந்த அரிசியில் இப்போது கொஞ்சம்தான் மிஞ்சியிருந்தது. அதைப் பலநாட்களுக்கு வைத்திருக்க வேண்டும். போர் உக்கிரமடைந்திருந்த இந்நிலைமையில், எல்லோரும் உயிரைக் காக்கப் பதுங்குகுழிகளில் வாழ்ந்துகொண்டிருந்தனர். விவசாயப் பூமிகள் கைவிடப்பட்டுவிட்டன. உற்பத்திகளே இல்லை. அவ்வப்போது யுனிசேப், யுஎன்எச்சிஆர், செஞ்சிலுவைச் சங்கம் முதலிய நிறுவனங்கள் உலர் உணவுப்பொருட்களை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்று, கப்பல்கள்மூலம் மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம் முதலிய கடற்கரைப்பகுதிகளுக்குக் கொண்டுவந்து, அங்கு இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்குக் கொடுத்தன. அதுபோலவே மருத்துவப் பொருட்களையும் கொண்டுவந்து தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருந்த வைத்தியசாலைகளுக்கும் கொடுத்தன. இச்செயற்பாடு அப்போதைய சூழலில் பெரும் விடயமாகவே பார்க்கப்பட்டது. ஏனெனில் உணவும், மருந்துமின்றித் தினம் தினம் செத்துக்கொண்டிருந்த மக்களுக்கு இந்நிறுவனங்களின் செயற்பாடு பெரும் உதவியாகவே இருந்தது.

நாங்கள் இப்போது ஒருநேரம் மட்டுமே சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நிலைக்கு வந்துவிட்டோம். நிறுவனங்கள் தரும் உணவுப்பொருட்களே இப்போது எம்முயிரைக் காத்துக்கொண்டிருக்கின்றன. பெரும்பாலும் மதியம் மட்டும் கஞ்சிகாய்ச்சிக் குடிக்கும் நிலைக்கு வந்துவிட்டோம். இரவிலும், காலையிலும் தண்ணீரைக் குடித்துவிட்டு இருக்கும் நிலைதான் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பீ.. டேய்... தம்பீ..."

"ஓமணேயம்மா... என்னணே?"

"உங்க.. பொக்கணைப் பிள்ளையார் கோவிலடில, இப்ப ஒவர்நாளும், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சனங்களுக்குக் கஞ்சி காச்சிக் குடுக்குதாம்.. நேற்றுத்தான் சுந்தரியக்காவக் கண்டு கதைக்கேக்க சொன்னவா.. அவையளும் அவடத்திலதான் இருக்கினமாம்.. நீ ஒருக்காப் பாத்திட்டு வாறியே?.. பெரிய யொக்கொண்டையும் எடுத்திட்டுப்போ.. கஞ்சி குடுத்தா வாங்கிட்டுவா..."

"உந்தக் கடற்கரையில கொஞ்சத்துரம் போக வாற கோவில் தானேமா?.. சரி போட்டு வாறன். கஞ்சி குடுக்காட்டி வந்து இருக்கு உங்களுக்கு.."

"சீ இல்ல.. குடுக்கிறாங்கள். நீ போ.. கவனமாப் போகோணும்.. கடக்கரையால நடந்துபோ.. றோட்டால போகாத ஷெல்லடிக்கிறான்.. கஞ்சி குடுத்தா, வீட்ட கனக்கப் பேர் இருக்கமெண்டு சொல்லி வாங்கு தம்பீ.. அப்பத்தான் கொஞ்சம் கூடத் தருவினம்."

"ஐயோ முதல் குடுக்கிறாங்களோ தெரியா.. பேசாம இரணே.. குடுத்தா வாங்கிட்டு வாறன்"

பொக்கணைப் பிள்ளையார் கோவிலடியை எனக்குத் தெரியும். ஆனால் அம்மாவுக்கு நான் அதைக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. வலைஞர்மடக் கடற்கரையிலிருந்து சுமார் எண்ணூறு மீற்றர் நடந்தால் கோவிலை அடைந்து விடலாம். நான் புதுக்குடியிருப்பில் இருக்கும் காலங்களில் நண்பர்களோடு இக்கடற்கரைப் பகுதிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கிறேன். கடலில் குளித்திருக்கிறேன். எல்லாம் நன்றாகவே எனக்கு நினைவிருக்கின்றன. பழைய நினைவுகளைச் சுமந்தபடி கடற்கரையைக் கழுவிவிட்டுச் செல்லும் அலைகளில் கால்கழுவியபடி மெல்ல நடக்கிறேன். எறிகணைகள் கடலுக்குள் விழுந்து வெடிக்கின்றன. ஆங்காங்கு கடற்கரைகளிலும் வெடிக்கின்றன. இப்போதெல்லாம் போர்க்கால வாழ்க்கை எங்களுக்கு நன்கு பழகிப்போய்விட்டது. எந்தெந்த எறிகணைகள் வெடிக்கின்றன? எங்கே வெடிக்கின்றன? எப்போது காப்பெடுக்கவேண்டும்? என்பதெல்லாம் இப்போது அனுபவங்களினூடாக இயல்பாகவே பழகிவிட்டன. போர்க்கால வாழ்க்கைபற்றியோ, போர்க்கள வாழ்வு பற்றியோ, அங்கு உயிரை எவ்வாறு காத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றியோ யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை. இப்போது எல்லாம் பழகிவிட்டன.

கடற்கரைப் பகுதியெல்லாம் தறப்பாழ் கொட்டில்கள்தான். கொட்டில்கள் இல்லாத வெறும் நிலத்துண்டைக்கூடக் காணமுடியவில்லை.. விழும் எறிகணைகள் எல்லாம் ஏதாவதொரு கொட்டிலின்மீதுதான் விழுந்தே தீரும். அவ்வாறு சனநெருக்கம் மிகுந்த பகுதியாகவே மாத்தளன், பொக்கணைக் கடற்கரைப் பகுதிகள் மாறிவிட்டன. என் கண்கள் ஆங்காங்கு தென்படும் காட்சிகளைக் கண்ணுற்றுக் கொண்டிருக்க, கால்கள் கோவிலடியை நோக்கி நகர்கின்றன. என்வயசை ஒத்த சிறுசுகள், பெண்கள், குழந்தைகள், பெரியவர்கள், முதியோர்கள் என்று பலர், கரையை அண்டியதாகக் கடல்நீரில் குளித்துக்கொண்டிருக்கின்றனர். தொழிலின் நிமித்தம் மீன்பிடிப்படகுகள் சில அலைகளில் ஆடியபடி நகர்ந்துகொண்டிருக்கின்றன. எறிகணைகள் ஆங்காங்கு குடியிருப்புக்கள் மீது விழுந்து வெடித்து, உயிர்ப்பலி கொள்கின்றன. இராணுவத்தினரின் முன்னகர்வு எம்மை நெருங்கிவிட்டதை அறிவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம், துப்பாக்கிச் சன்னங்கள் தலைக்கு மேலால் காற்றைக் கிழித்தபடி செல்கின்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07

பொக்கணைப் பிள்ளையார் கோவிலடியில் சனக்கூட்டம் மிகுந்திருந்தது. மக்கள் வரிசையில் சிறிய வாளிகள் மற்றும் பாத்திரங்களோடு நின்றுகொண்டிருந்தார்கள். அம்மா கூறியது உண்மைதான். அவர்கள் கஞ்சிக்காகத்தான் வரிசையில் நிற்கிறார்கள். கோயில் மரத்தடியில் கஞ்சி காய்ச்சப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கிடைக்கும் என்ற மனத்திருப்தியில் நானும் வரிசையில் போய் நின்றேன். வரிசையோ இருநூறு மீற்றர் தூரம்வரை நீள்கிறது. எறிகணைகளின் வெடிப்புக்கள் அருகருகே நிகழ்ந்தாலும் அவை எம்மால் கண்டுகொள்ளப்படவில்லை. துப்பாக்கிச் சன்னங்களின் ஓசைகளும் இடையிடையே கடந்து சென்றன. வேவு விமானம் தாழ்வாகவே சுற்றியவண்ணம் இருந்தது. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் சனங்களோடு சனங்களாய் நானும் வரிசையில் காத்துக்கொண்டிருந்தேன். ஒருமாதிரி ஒருமணித்தியாலயக் காத்திருப்பின் பின் கஞ்சியை வாங்கிக்கொண்டு இருப்பிடம் நோக்கிப் பயணித்தேன். அம்மா சொல்லிவிட்ட வார்த்தைகள் நினைவில் வந்து போயின. வீட்டில் இருக்கும் எல்லோருக்கும், வாங்கிய கஞ்சி போதுமானதாக இல்லை. ஆனாலும் இதுவே கிடைத்தது பெரும் ஆச்சரியம்தான். வீட்டில் இருப்பவர்களுக்கும் சேர்த்துத்தான் அம்மா கஞ்சி வாங்கிவரச்சொன்னார். நான் எப்படி அங்கு வாய்விட்டுக் கேட்பது? வரிசையில் நிற்கும் எல்லோருக்கும் ஒரு அளவான கஞ்சிதான் வார்த்துக்கொண்டிருந்தார்கள். எல்லாச் சனங்களும் இந்தக்கஞ்சியை நம்பித்தான் வரிசையில் நிற்கிறார்கள். நான் கஞ்சி வாங்கிய மகிழ்ச்சியில் கொட்டிலுக்குச் சற்று வேகமாகவே வந்துவிட்டேன். என்னைக் கண்டதும் எல்லோருக்கும் சந்தோசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா தம்பீ... இவ்வளவு நேரமா என்ன செய்தனீ? உன்னைத்தான் பாத்திட்டு இருந்தம். ஒருமாதிக் கஞ்சியோட வந்து சேந்திட்டாய் என"

"பாத்திட்டுத்தான் இருப்பியள்.. அங்க சரியான சனம்... லைன்ல நிண்டுதான் வாங்கோனும்... சனமெல்லாம் உங்கதான் நிக்குதுகள். பின்னேரம்போல நானும் கந்தசாமியண்ணையும் போனமெண்டால் கொஞ்சம் கூடவாங்கிட்டு வரலாம்.."

"ம்ம் இனி எங்களுக்கு இந்தக்கஞ்சிதான் கெதி.. கொப்பரையும் கூட்டிற்று போனியள் எண்டா கொஞ்சம் உண்டன வாங்குவியள்."

"ஓமணேயம்மா... பின்னேரம் போறம்.. இப்ப இதப்பிரிச்சுத் தாங்கோ"

நான் வாங்கி வந்த கஞ்சி, இரண்டு குடுப்பத்திற்கும் போதியளவாக இருக்கவில்லை. அதனால் அம்மா, பனையோலை மற்றும் பன்னாடைகளை வைத்து அடுப்பு மூட்டி, அக்கஞ்சிக்குள் தண்ணீர் விட்டு, அளவாக உப்புப்போட்டு மீண்டும் அதனைச் சூடாக்கி எல்லோருக்கும் பகிர்ந்தார். அதனை எல்லோரும் குடித்த பின்தான் உயிர்வந்ததுபோல் இருந்தது. பசிதீர்ந்த சுகத்தில் எல்லோரும் குட்டித்தூக்கம் போட்டுக்கொண்டிருந்தோம். திடீரெனப் பக்கத்துக் கொட்டிலின்மேல் விழுந்து முழங்கிய எறிகணையொன்று எல்லோரையும் கதிகலங்கச் செய்துவிட்டது. எங்கள் கொட்டிலில் இருந்து சுமார் முப்பது மீற்றர் தொலைவில் ஆலமரத்திற்குக் கீழே இருந்த கொட்டிலின் மேல்தான் அந்த எறிகணை விழுந்து வெடித்திருந்தது. நான் புதினம் பார்க்க ஓடிச்சென்றேன். தறப்பாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டில்கள் பல எரிந்து கொண்டிருந்தன. ஆலமரத்தின் கிளைகள் முறிந்து தொங்கிக் கொண்டிருந்தன. மரங்களிலே மனிதச் சதைத் துண்டுகள் ஒட்டிக்கொண்டிருந்தன. ஒரு கொட்டிலை எட்டிப் பார்த்தேன். குழந்தைக்குப் பால்கொடுத்தபடியிருந்த தாய் முண்டமாகிக் கிடந்தாள். அவளை இறுகப்பற்றியபடி காயங்களோடு கைக்குழந்தையொன்று கதறியபடி இருந்தது. தறப்பாழ்களிலெல்லாம் தசைத்துண்டுகள் சிதறுண்டு ஒட்டிக்கிடக்கின்றன. எங்கிருந்தோ வந்த நாயொன்று, அடுப்படியில் குடல்கிழிந்து இறந்துபோன கிழவி ஒருத்தியின் இரத்தத்தை நக்கி ருஷித்தவண்ணம் இருந்தது. காகங்கள் பறந்து மரங்களிலே சிதறிப்போய் இருக்கும் மனிதத் தசைகளைத் தின்றுகொண்டிருந்தன. காயப்பட்டு எழமுடியாமல் குருதிவெளியேறியபடி மயங்கிப்போயிருந்த பலர், தூக்குவார் யாருமின்றிக் கிடந்தனர். காயப்பட்டதையே உணராமல், இறந்துபோன தம் உறவுகளைத்தழுவிப் பலர் அழுதுகொண்டிருந்தனர். அருகருகே பல குடும்பங்கள் குடில்களில் இருந்தாலும், உதவுவார் யாருமன்றிப் பல உயிர்கள் குருதியில் தவித்தன. காயமின்றி எஞ்சிய உறவினர்கள், இறந்தவர்களை அதே இடத்தில் மண்ணைத்தோண்டிப் புதைத்துவிட்டு வேறிடத்திற்குக் கண்ணீரோடு பயணமானார்கள். இந்தக்காலத்தில், குடும்பத்தில் யாரேனும் ஒருவர் தப்பினால் மட்டுமே இறந்துபோன ஏனையவர்களை அடக்கம்செய்ய முடியும். இல்லையேல் இறந்த உடல்கள் அழுகிப்புழுத்தாலும் அடக்கம் செய்ய யாரும் அக்கறைப்படமாட்டார்கள். தன்குடும்பமும், தன்னுயிரும் என்ற சிந்தனையே எல்லோரின் மனதிலும் ஆழ வேரூன்றியிருந்தது.

தொடர்ந்தும் அவ்விடத்தில் நிற்க விரும்பாமல் கொட்டிலுக்கு வந்தேன். மனது குழம்பிப் போயிருந்தது. யாருடனும் பேசாமல் மௌனத்தில் இருந்தேன். எங்களின் கொட்டிலுக்கு மேல் ஷெல் விழுந்தாலும் இதே நிலைமைதான் வரும் என்ற எண்ணம் என் உள்ளத்தை உறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பீ... என்ன கடுமையா யோசிக்கிறாய்? வெளிக்கிடு போவம்.. இப்பவே போய் லைன்ல நிண்டாத்தான்.. பொழுதுபடுறத்துக்கிடேல கஞ்சி வாங்கிட்டு வரலாம்."

"ஒண்டுமில்லை கந்தசாமியண்ணா... வாறன்"

"பிறகென்ன கிடக்கிறாய் வா.. வெளிக்கிடு.. கடக்கரையால போட்டு வருவம்."

"அப்பா வரேலயா? நாங்க மட்டுமா போற?"

"அப்பா நித்திரையாக் கிடக்கார்போல... எழுப்பிக் கேட்டுப்பார்.. வேளைக்குப் போட்டு வருவம்."

கந்தசாமியண்ணையும் நானும் பேசிக்கொண்டிருந்தபோதே, எங்கள் அரவம் கேட்டு அப்பா எழுந்து விட்டார். நாங்கள் மூவரும் கடற்கரைவழியாகப் பொக்கணைக் கோயிலடிக்குச் சென்று, வரிசையில் காத்திருந்து கஞ்சி வாங்கிவிட்டுத் திரும்பிய போது, மாலை ஐந்தரை மணியாகிவிட்டது.

திடீரென இரணைப்பாலைக்கு மேலால் வான்பரப்பில் பறந்த இரண்டு போர் உலங்குவானூர்திகளிலிருந்து கண்மூடித்தனமான எறிகணைத்தாக்குதல்களும், கொத்துக்குண்டுத்தாக்குதல்களும், கோவிலடியை நோக்கி மேற்கொள்ளப்பட்டன. கஞ்சிக்காகக் காத்திருந்தவர்கள் பலர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்தனர். சர்வதேச நாடுகளால் தடைசெய்யப்பட்ட கொத்துக்குண்டுத்தாக்குதல் இப்போது மக்களின் குடியிருப்புப் பகுதிநோக்கி மேற்கொள்ளப்படுவது சர்வசாதாரணமாகி விட்டது. உலங்குவானூர்திகளில் இருந்து வந்த கொத்துக்குண்டுகள், கோயிலடியில் வெடித்துச்சிதறின. பிரதான குண்டு நிலத்தில் விழுந்து வெடிப்பதனால், அக்குண்டினுள் இருக்கும்பல சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுகள் அப்பகுதி முழுவதும் சிதறுண்டு போய்ச் சில நொடிகளில் வெடிக்கும் தன்மையுடையவை. இதனால் பாரிய உயிர்ச்சேதங்களும், உடற்சேதங்களும் ஏற்படலாயின. சில சமயங்களில் வெடிக்காத சிறிய கொத்துக்குண்டை, வெடிகுண்டு என்று தெரியாமல் மேசன் பயன்படுத்தும் தூக்குக்குண்டென நினைத்து வீட்டிற்கு எடுத்துவந்து வைத்திருந்தநிலையில் வெடித்துச் சிதறி, உயிர்கள் பறிபோன நிகழ்வுகளும் பதிவுசெய்யப்பட்டன. இத்தாக்குதலிலிருந்து நாங்கள் தப்பியது கடவுளின் சித்தமென்றே கூறவேண்டும். கடற்கரை வழியாகக் காப்பெடுத்தபடி குடிலுக்கு வந்துசேர்ந்தோம். உலங்குவானூர்தித் தாக்குதலைத் தொடர்ந்து பலத்த எறிகணைத்தாக்குதல்கள் கடற்கரைப்பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்படலாயின. இத்தாக்குதல்களால் தினம் தினம் அறுநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்படலாயினர். இதனால் நாங்கள் இத்தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காகப் புடைவைகளை வெட்டி, அவற்றினை உரப்பைகள்போல் தைத்து, அவற்றுக்குள் மண்போட்டு, மண்மூடைகளாக்கி அரண்அமைத்திருந்தோம்.

நாங்கள் மட்டுமன்றி கடற்கரைகளில் இடம்பெயர்ந்திருந்த அனைவரது பாதுகாப்பரண்களும் இவ்வாறே அமைக்கப்பட்டிருந்தன. இப்போது கடற்கரைப் பகுதிகளில் இருக்கும் மக்கள் கொத்துக்குண்டுத்தாக்குதல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தினமும் பல நூற்றுக்கணக்கான அநாதைப்பிணங்கள் வீதிகளிலும், கொட்டில்களிலும் புதைப்பாரின்றிப் புழுத்து நாறின. தமிழர் புனர்வாழ்வுக்கழகமே இவ்வாறான பிணங்களை அடக்கம் செய்யும் பணியைச், சூழ்நிலைகருதி மேற்கொண்டு வந்தது. மக்கள், தேசியம் மற்றும் நாடு என்ற பற்றிலிருந்து விடுபட்டு விரக்தி நிலையில் இருந்தார்கள். ஷெல்லடிகளின் உக்கிரத்தால் இராணுவத்தினரிடம் சரணடையவே இச்சூழலில் அவர்கள் விரும்பினார்கள். ஆனாலும் இயக்கம் மக்களை இராணுவத்தினரிடம் செல்ல அனுமதிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் தினம் சாவும், இரத்த வாடையுமே மிஞ்சியது. பிணநாற்றம் இப்போதெல்லாம் எமக்குப் பழகி விட்டது. நாய்கள் வீதியில் இறந்து கிடக்கும் போது, சாதாரணமாகவே புதினம் பார்த்தபடிக் கடந்து செல்வதுபோலப் பிணங்கள் கணக்கெடுப்பாரின்றிக் கிடந்தன. பிணவாசங்களோடே கிடைக்கும் ஒருநேரக் கஞ்சியைக் குடித்தபடி வாழ்வு போய்க்கொண்டிருந்தது.

பங்குனி கழிந்து சித்திரையும் பிறந்தது. இப்போது இராணுவம் மிகநெருங்கி விட்டது. துப்பாக்கிச் சன்னங்களின் வருகையும் அதிகரித்தது. அஞ்சிஞ்சிச் ஷெல்கள் விழத்தொடங்கின. கொத்துக்குண்டுகள் வெடித்துச் சிதறின. பல்குழல்ப் பீரங்கித்தாக்குதல்கள் உச்சம் பெற்றன. ஆர்ட்டிச் ஷெல்கள் அதிகமாகவே விழுந்து முழங்கின. அதுமட்டுமன்றிக் கடல்பகுதிகளில் இருந்தும் பீரங்கித்தாக்குதல்களை இரவு நேரங்களில் இராணுவத்தினர் நிகழ்த்தலாயினர். ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் விழுகின்ற ஒவ்வொரு குண்டுகளும் மக்களின் தலைகளிலே விழுந்து வெடித்தன. மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம் பகுதிகள் குருதி வெள்ளத்திலும், பிணநாற்றத்திலும், ஒப்பாரி ஓலத்திலுமே மூழ்கிக்கிடந்தன. நாட்கள் ஓடின. இறப்புக்கள் மலிந்தன. காயப்படுவோர்களின் எண்ணிக்கை உச்சம் பெற்றது. இந்நாட்களில் யுஎன்எச்சிஆர், யுனிசேப் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக, இலங்கை அரசின் கப்பல்கள் மாத்தளன் பகுதிக் கடலில் வந்து, கர்ப்பிணிப்பெண்கள், படுகாயமடைந்தோர், கைக்குழந்தைகள், முதியோர்களை ஏற்றிச்சென்றது. இச்சூழ்நிலையில் இயக்கம் இச்செயலைத் தடுக்கவில்லை. அவர்களே நோயாளர்களையும், கர்ப்பிணிப்பெண்களையும், கைக்குழந்தைகளையும், முதியோர்களையும் கப்பல்மூலம் அரசபகுதிகளுக்குச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். மருத்துவ வசதிகளோ, உணவுகளோ இல்லாத சந்தர்ப்பத்தில் அவர்கள் இங்கிருந்தால் இறக்கவேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் என்ற சிந்தனையிலேயே, அவர்களை அரசபகுதிகளுக்குக் கப்பலின்மூலம் இயக்கம் அனுப்பியிருந்தது.

பல இரவுகள் ஓடி மறைந்தன. பல மனிதர்களும் மறைந்து போயினர். இச்சூழ்நிலையிலும் போராளிகள் போராட்டத்தைக் கைவிடவில்லை. போராட வலுவுள்ள சிறுவர்களையும் தம் போராட்டத்தில் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்டனர். வீதிகளில் நடமாடும் பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களையும், அதற்குக் குறைவான வயதுடையவர்களானாலும் தோற்றமுடையவர்களாக இருந்தால், அவர்களையும் போராளிகள் விட்டுவைக்கவில்லை. வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்று, ஓரிருநாள் பயிற்சிகளைக் கொடுத்துவிட்டுக் களமுனைகளில் அவர்கள் விடப்பட்டார்கள். அதனால் போர்க்கள முன்னனுபவம் இல்லாமையால் இராணுவத்தினரின் தாக்குதலில் அவர்கள் கொல்லப்படலாயினர். வீதிகளில் மட்டுமன்றிப் போராட வலுவுடைய சிறுவர், சிறுமிகள் இருக்கும் வீடுகளுக்குள் புகுந்த போராளிகள், பெற்றோரின் எதிர்ப்பினை மீறி, அவர்களின் பிள்ளைகளைத் தூக்கிவந்து, வலுக்கட்டாயமாகப் பயிற்சிகொடுத்து, இயக்கத்தில் இணைத்துக்கொண்டனர். இதனால் ஒவ்வொரு தாய்மார்களினது சாபங்களையும் இயக்கத்தினர் பெற்றுக்கொண்டனர். ஒருகாலத்தில் தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டாடப்பட்ட இயக்கம், தங்களின் இவ்வாறான செயல்கள்மூலம் மக்களின் ஆதரவைப் பெறத் தவறிவிட்டது. இப்போதெல்லாம் மக்கள் இராணுவத்தின் பகுதிக்குச் சென்றாலே போதுமென்ற மனநிலையிலேயே இருந்தனர்.

எங்களின் கொட்டிலுக்கு முன்னால் உள்ள கொட்டிலில் புகுந்த ஏழெட்டுப் போராளிகள், அங்கு இருந்த பதின்மூன்று வயது மதிக்கதக்க சிறுவனைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அவனின் தாய், தந்தையர் புலம்பும் சத்தம் கேட்கிறது. தாய், மண்ணை அள்ளி வீசிச் சபிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாழ்பட்டுப் போவான்களே.. எவ்வளவு சனத்தைக் கொண்டிற்றியள்.. இப்ப இந்தப் பாலகனைக் கொண்டு போறியளே.. அழிவாரே... நீங்கள் அழியுறியள் இல்லையடா.. என்ரை குஞ்சைச் சாகடிக்கக் கொண்டு போறியளே.. நீங்கள் நல்லாயிருப்பியளா.. நாசமாப்போவியள்..."

அந்தத் தாய் அழுது புலம்பி மண்ணை அள்ளிப் போராளிகளின் மேல் வீசிச் சாபமிடுவதை, மண்மூட்டைகளின் இடுக்கின் வழியாக நான் பாத்துக்கொண்டிருந்தேன். இப்போது நான் மண்மூட்டை அரணினுள் ஒழிந்திருக்கிறேன். எனக்கு இப்போது பதினான்கு வயது. வயதைச் சொல்ல எடுப்பாக இருந்தாலும் பார்க்கப் பத்துவயதுச் சிறுவனைப்போலவே இருந்தேன். அதனால் என்னைப் போராளிகள் பார்த்தாலும் கணக்கெடுப்பதில்லை. வயதைக்கேட்டாலும் குறைத்தே சொல்லிவிடுவதுண்டு. ஆனால் இப்போது என்னைப் பார்த்தால் கட்டாயம் கொண்டு போவார்கள். ஏனெனில் நான் இப்போது மொட்டை அடித்திருக்கிறேன். புதுக்குடியிருப்பிலிருந்து இடம்பெயர்ந்ததிலிருந்து சுமார் நான்கு மாதங்களாக முடி வெட்டாமையால், தலை காடுபோலிருந்தது. அதனால் ஒரு கிழமைக்கு முன்னர் கந்தசாமியண்ணை, தனது தாடி எடுக்கும் சவரக்கத்தியால் எனது தலைமுடியைச் சவரம் செய்திருந்தார். ஆனாலும் இப்போது இந்தக்கதையை யார் நம்புவார்கள்? இதனாலேயே அந்தச் சிறுவனைப் பிடிக்க வந்த போராளிகளின் கண்களில் படாமல் அம்மாவும் அப்பாவும், என்னை ஒழித்து வைத்திருக்கிறார்கள்.

புதிதாகப் பிடித்துச் செல்லப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணும் விதத்தில், போராளிகள், அச்சிறுவர்களுக்கு மொட்டையடிப்பது வழக்கம். அதனால் களமுனைகளில் போராளிச்சிறுவர்களை அடையாளம் காண்பது சுலபம். அதுமட்டுமன்றிப் பிடித்துச் செல்லப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் போராளிகளின் முகாங்களிலிருந்தோ, களமுனைகளிலிருந்தோ வீட்டிற்கு ஓடிவந்தால் அவர்களை அடையாளங்கண்டு பிடிப்பதற்கு இலகுவாக இருக்கும் என்பதனால், வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்ட சிறுவர்கள் மொட்டை அடிக்கப்பட்டிருந்தனர். நானும் மொட்டையடித்திருப்பதால் என்னையும் போராளிச் சிறுவனென்றும், முகாமிலிருந்து ஓடிவந்துள்ளேன் என்றும் எல்லோரும் நினைப்பதுண்டு. நான் இந்தச்சிக்கலினால் தலைக்குமேல் துவாயைப்போட்டு, மொட்டையடிக்கப்பட்டதை மறைத்துக்கொண்டுதான் நடமாடுவதுண்டு. ஒருநாள் வலைஞர்மடச் சந்தியில் உள்ள சங்கக் கடையில் சீனிவாங்க வரிசையில் நின்றபோது, அவ்வீதியால் போராளிகளின் ஜீப் ஒன்று சென்றது. நான் அதைக் கவனிக்கவில்லை. ஆனால் ஜீப்பில் சென்ற போராளிகள் என்னைக் கண்டுவிட்டு வாகனத்தை நிறுத்தும் படி கூச்சலிட்டனர். வாகனமோ அதிவேகமாகச் சென்றதால் கொஞ்சம் தொலைவில் சென்றே நின்றது. பாரிய கூச்சல் சத்தம் கேட்டதால் சங்கக் கடையில் நின்ற எல்லோரும் குழம்பிப்போய் விட்டனர். சாமான் வாங்க நின்ற பெரியவர்களின் உரையாடல் என் காதுகளில் விழுந்தது.

"ஏன் உந்த ஜீப்பில போன பெடிபெட்டையள் இங்க கையக்காட்டி கத்தீற்றுப் போறாங்கள்?.. கடைமுதலாளி ஏதும் அவங்களோட பிரச்சினையே?"

"சீ சீ இல்லையப்பு.. உவங்கள் இதில நிக்கிற பெடியனக் கண்டிற்றுத்தான் ஜீப்ப நிப்பாட்டச் சொல்லி கத்தியிருக்காங்கள்... இப்ப சின்னனுகளையெல்லாமெல்லோ பிடிக்கிறாங்கள்... இப்ப இந்தப் பெடியனைக் கண்டுட்டாங்கள் விட்டிருவாங்களோ?... பிடிக்கத்தான் வாறாங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீப் வருவதை ஆரம்பத்தில் கவனிக்கா விட்டாலும், போராளிகளின் கூச்சல் சத்தம் அவர்களைக் காட்டிக்கொடுத்து விட்டது. அவர்கள் என்னை நோக்கித்தான் வருகிறார்கள் என்பதைக் கடையடியில் நின்ற பெரிசுகளின் கதையின்மூலம் உணர்ந்துவிட்டேன். நின்றால் என்னைப் பிடித்து விடுவார்கள் என்று மனம் எச்சரிக்கை தந்தது. அவர்கள் முப்பது மீற்றர் தூரமளவில் ஜீப்பைத் திருப்பிக்கொண்டு வருகிறார்கள். ஏதோ ஒரு பயத்துடன் கூடிய உற்சாகம் பிறந்ததுபோல், அகதிமுகாம் குடில்களூக்கால் ஓடினேன். வீதியால் ஓடியிருந்தால் என்னைப் பிடித்திருப்பார்கள். பிடிபட்டிருந்தால் எனக்கு என்னவாகியிருக்கும்? என் பெற்றோர்கள் என்னை எங்கெல்லாம் தேடியிருப்பார்கள்? நான் ஷெல்லடிக்குள் எங்கேனும் அகப்பட்டு இறந்து போயிருப்பேன் என்று கைவிட்டிருப்பார்களா? அந்தச் சூழலில் ஒரு செய்தியும் தெரிந்திருக்காது. இப்போது அப்படி நடக்கவில்லை. ஜீப் உள்ளே நுழையாதபடியே மிக நெருக்கமாக வீதிக்கரையிலிருந்து கடற்கரைவரை தறப்பாழ் கொட்டில்கள் அமைக்கப்பட்டிருந்தன. போராளிகளின் ஜீப் எனக்கருகில் வருவதற்கு முன்னரே நான் தறப்பாழ் குடில்களூக்கால் மறைந்தோடி, கடற்கரை வழியாக நாம் வசிக்கும் கொட்டிலை அடைந்துவிட்டேன். ஓடிவந்த களைப்பில் தண்ணீரைக் குடித்து விட்டு, அம்மா பேச்சுக்கொடுப்பதற்கு முன்னாலே நான் பேச்சைத் தொடங்கிவிட்டேன்.

"அம்மா.. சங்கக்கடைக்குப் பக்கத்தில ஷெல்லடிச்சுட்டான்.. கனபேருக்குக் காயமணே. லைன்ல நிண்டாக்களெல்லாம் சாமான் வாங்காம ஓடிப்போட்டாங்கள்... நானும் பயத்தில ஓடிவந்திட்டன்."

"ஷெல்லடிச்சா யாற்றையும் வங்கருக்க இருந்திட்டு ஓய்ஞ்சோடனதான் வரோணும்.. ஷெல்லடிக்கேக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடித்திரியக்கூடா சரியா?.. அம்மா உப்புப்போட்டுக் கஞ்சி காச்சியிருக்கன் அப்பாக்கும் வச்சிட்டு எடுத்துக்குடி…"

நான் சங்கக் கடையில் நடந்ததைக் கூறவில்லை. சொல்லியிருந்தால் என்னைக் கடற்கரைப்பக்கமோ, கடைகளுக்கோ, கஞ்சி வாங்கவோ விடமாட்டார்கள். இதன் காரணத்தினாலேயே உண்மையை மறைத்து விட்டேன். இயக்கத்திற்குப் புதுப்போராளிகளை இணைக்கும் பணியையும், வலுக்கட்டாயமாகச் சிறுவர்களைப் போராட்டத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் பணியையும் அரசியல் துறையினரே செய்துவந்தனர். பச்சைநிறமுடைய ஜீப்பில் சுமார் ஏழெட்டு அரசியல்துறைப் போராளிகள் வந்திறங்கிப் போராட வலுவுடையோர் இருக்கும் வீடுகளுக்குள் புகுந்து, அவர்களின் எதிர்ப்புக்களைமீறி வலுக்கட்டாயமாகப் பிடித்துச் செல்வார்கள். பிடிபட்டுப்போனவர்கள் ஓரிரு மாதங்களில் வித்துடலாக மீண்டும் வீட்டிற்கு வந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

2006 ஆம் ஆண்டு போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வன்னிப்பகுதியில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் கட்டாயமாக ஒருவர் போராட்டத்தில் இணைய வேண்டும் என்ற சிந்தனையை அரசியல்துறையினர் நடைமுறைப்படுத்தினர். ஆனாலும் இராணுவ முன்னகர்வு வேகமாக இருந்ததால், இராணுவத்தினரின் ஷெல்லடிகளினால் களமுனைகளில் அதிக போராளிகள் வீரச்சாவடைந்ததுடன், விழுப்புண்ணடையும் சந்தர்ப்பங்களும் அதிகரித்தே வந்தன. நாளுக்கு நாள் ஒவ்வொரு வீடுகளிலும் முகாரி ராகம் ஒலித்துக்கொண்டே இருந்தது. களமுனைகளில் போராளிகளின் படைப்பலத்தை அதிகரிக்க வேண்டிய தேவை எழுந்ததனால் ஒவ்வொரு வீடுகளிலும் இருந்து ஒருவர் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு புலிகள் அறிவித்தனர். அதுமட்டுமன்றி 2007 ஆம் ஆண்டைத் தொடர்ந்து பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் கட்டாயமாகப் போராட்டத்தில் இணைக்கும் செயற்பாட்டை மேற்கொண்டனர்.

2008 ஆம் ஆண்டிற்குப் பிறகு போராட வலுவுள்ள சிறுவர்களையும் வலுக்கட்டாயமாகப் பிடித்துப் பயிற்சி கொடுத்துப் போராட்டத்தில் இணைத்தனர். போராட்டத்தில் இணைந்து செயற்பட முடியாத சிறுபிள்ளைகளையுடைய குடும்பங்கள், வயோதிபக் குடும்பங்கள், பிள்ளைகள் இல்லாதவர்கள், போர்க்கள முன்னரங்குப் பகுதிகளில் பாதுகாப்பு மண்சுவர்களையும், அரண்களையும் அமைப்பதற்கான பணஉதவிகளைச் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அச்செயற்பாடுகள் போராளிகளால் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டன. இவர்கள் வழங்கும் பணத்தினைக்கொண்டே போருதவிப்படை வீரர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாகவும் செய்திகள் வெளிவந்தன. இவ் நான்காம் கட்ட ஈழப்போராட்டக் காலத்தில், இயக்கத்திற்கு ஏதோ ஒரு வகையில் எல்லாக் குடும்பங்களும் பங்களிப்பினைச் செய்திருந்தனர் என்பதே உண்மை.

இராணுவத்தின் நகர்வு தீவிரம் பெற்ற சூழலிலும் 'புலிகளின் குரல்' வானொலி இயங்கிய வண்ணமே இருந்தது. வலைஞர் மடப்பகுதியில் இருந்து, நடமாடும் குண்டு துளைக்காத வாகனத்தினுள் வானொலி ஒலிபரப்பு செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனாலும் ஒலிபரப்பப்படும் இடத்தினைச் சரியாகக் கணித்த இராணுவத்தினர், எறிகணைத்தாக்குதல்களை மேற்கொண்டாலும் அவை மக்களின் குடில்களுக்கு மேலேயே விழுந்து வெடிக்கலாயின. அன்றைய நாட்களில் மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டும் விதத்திலான செய்திகளையும், பிரச்சாரக் கருத்துக்களையுமே வானொலிமூலம் போராளிகள் ஒலிபரப்புச்செய்து கொண்டிருந்தனர். தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் கஞ்சிக் கொட்டில்களுக்கும் எறிகணைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாயின. இதனால் கஞ்சிக்காகக் காத்திருந்த பலநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்படலாயினர். எங்கும் அவலம். எங்கும் குருதி மணம். எங்கும் ஒப்பாரி. எங்கும் பசி. ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் எங்கும் கண்ணீர் சிந்தப்பட்டுக்கொண்டிருந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08

எவ்வளவு வேதனைகளை மக்கள் சுமந்த போதும், கடல் தாய் மட்டுமே ஆறுதலைத் தந்தாள். சுட்டெரிக்கும் கோடை வெய்யிலும் கடற்காற்றில் இதமாய்த்தான் இருந்தது. எமக்குக் குளிப்பும், முழுக்கும் கடலில்தான். மதிய நேரங்களில் ஷெல்லடிகளுக்கு மத்தியிலும் கடலில்தான் நீச்சலடிப்போம். கடலில் விழுந்து வெடிக்கும் எறிகணைகளினால் இறந்து, கரையை அடையும் மீன்களைச் சேகரிப்பதில் இருக்கும் சுகமே தனி. இந்நாட்களில் பணக்காரனோ, பிச்சைக்காரனோ என்று யாருமேயில்லை. எல்லோரும் இங்கு ஒரேநிலைதான். எல்லோரும் இப்பொழுது கஞ்சியைத்தான் குடிக்கிறார்கள். பணத்திற்கே பெறுமதியற்றுப் போய்விட்டது. தேங்காய் ஒன்றினைக் கொடுத்து ஓட்டோ வாங்கி, அதனைத் தற்காலிகக் கொட்டிலாகப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களும் அதிகம் உண்டு. உணவுதான் உயர்வாகப் பார்க்கப்பட்டது. பொன் மதிப்பிழந்து போயிற்று. பொன்னாபரணங்களோடு கிடக்கும் பிணங்களை அப்படியே புதைக்கும் நிலையும் இருந்தது.

மாலையானதும் இராணுவத்தினரின் பரா மத்தாப்பு வெளிச்சங்கள் கடற்கரைத் தேசத்தையே அழகாக்கும். இராணுவத்தினால் ஏவிவிடப்படும் பரா மத்தாப்பானது, வானத்தில் வெடித்து சுமார் ஐந்து, பத்து நிமிடங்கள் வரை வானத்தில் நின்று எரியும் தன்மை கொண்டவை. எரியும் வெளிச்சமானது, பிரகாசம் மிக்கதால் குறிப்பிட்ட பகுதி முழுவதும் பகல்போலவே காட்சிதரும். இதனால் வேவுவிமானத்தின்மூலம் இராணுவத்தினர் தம் வேவு நடவடிக்கைகளையும் இலகுவாக மேற்கொண்டனர். கடற்கரைப்பகுதிகளில் இடம்பெயர்ந்திருந்த மக்கள் அனைவரும் மலங்கழிப்பதற்குரிய இடமாகக் கடற்கரையையே பயன்படுத்தினர். இரவானால் கடற்கரை நீளமும் சனங்களால் நிறைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலோ, பகலிலோ கடற்கரையில் மலங்கழிக்க முடியாத சூழல் நிலவுவதால், இரவானதும் மக்கள் மலம் கழிப்பதற்குக் கடற்கரைக்கு வந்துவிடுவர். பரா வெளிச்சங்கள் இவர்களுக்கு இடையூறாய் இருந்த நிலையிலும், பராவெளிச்சம் அணைந்துபோகும் நேரத்தில் கடற்கரையில் குந்தி மலங்கழிக்கத் தொடங்குவார்கள். அலை வருகின்றபோது எழும்புவதும், பிறகு குந்துவதுமாக மலங்கழிப்பர். சிலர் அப்படியே குந்தியிருப்பர். கடற்கரை நீளமும், வரிசையாக இடைவெளியில்லாமல் மக்கள் குந்தியிருப்பர். ஒருவருக்கும் மற்றவருக்குமிடையிலான இடைவெளி ஒருமீற்றர் கூட இருக்காது. தெரியாத முகங்கள் என்பதால் வெட்கம் என்பது சனங்களுக்குத் தோன்றுவதே இல்லை. வருகின்ற அலைகள் குந்தியிருப்பவர்களின் மலங்களை அடித்துக்கொண்டுபோய்க் கரைகளில் ஒதுக்கிவிடும். எழுந்து நின்றவர்கள் அடுத்த அலை வருவதற்குள், தாம் அடக்கி வைத்திருந்த மிஞ்சிய மலத்தைக் கழிப்பர். வரிசையில் கடற்கரை நீளத்திற்கும் சனங்கள் மலம் கழிப்பதால் அருகருகே இருப்பவர்களின் மலங்கள் அலைகளினால் அடிக்கப்பட்டு, அருகருகே இருப்பவர்களின் காலிடைகளுக்குள்ளால் மிதந்து திரியும். மலங்கழித்து முடிந்த பின் அந்தக் கடல் தண்ணீரிலேயே மலங்கழுவிவிட்டு வெளியேறும் நிலைதான் இருந்தது.

மலங்கழிப்பதென்பதே இங்கு போராட்டம்தான். பரா வெளிச்சம் அணைந்து மற்றைய பரா எரிவதற்குள்ளும், ஒரு அலை வந்து மற்றைய அலை வருவதற்குள்ளும் மலங்கழித்துவிட வேண்டிய நிலையே சனங்களுக்கு இருந்தது. பெரும்பாலும், தம்முகத்தைப் பக்கத்தில் இருப்பவர் இனங்காணாத வகையில் தலையில் ஒரு துண்டைப் போட்டுக்கொண்டுதான் எல்லோரும் கடற்கரைக்கு மலங்கழிக்க வருவதுண்டு. நானும் அப்படித்தான். இப்படியான எத்தனை எத்தனை அவலங்களைச் சந்திக்கவேண்டியதாயிற்று. நாட்கள் நகர்ந்தன. இராணுவத்தின் முன்னகர்வு தீவிரமாக இருந்தது. மாத்தளன் இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரங்குப் பகுதியிலிருந்து இராணுவத்தினர், தம்பகுதிக்குள் மக்களை வரும்படிக் கொச்சைத்தமிழில் ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கும் சத்தம், கடற்கரைப் பகுதிவரை தெளிவாகவே கேட்டது. மாத்தளன், பச்சைப்புல்மோட்டைப் பகுதியினூடாக மக்களைச் சரணடையும் வண்ணம் அறிவுறுத்தல்களை இராணுவத்தினர் ஒலிபெருக்கிமூலம் அறிவித்துக் கொண்டிருந்தனர். ஆனால் போராளிகள், மக்கள் வெறியேறுவதைத் தடுக்கும் முகமாக எல்லைப்பகுதிகளில் நின்று மக்களைத் திருப்பியனுப்பிக்கொண்டிருந்தனர்.

சித்திரைப் புதுவருடம் நாளை என்பதால், தற்காலிகப் போர்நிறுத்தம் செய்வதாக இராணுவத்தினர் அறிவித்திருப்பதாக எல்லோரும் பேசிக்கொண்டார்கள். வழமைபோல் நிகழும் எறிகணைத்தாக்குதல்கள் சற்று ஓய்திருந்தன. அவ்வப்போது ஆங்காங்கு சில எறிகணை வெடிப்புச் சம்பவங்களே நிகழ்ந்தன. போர்ச்சத்தம் ஓய்ந்த நிலையிலும், இராணுவத்தினர் ஒலிபெருக்கியில் அறிவிக்கும் சத்தம் ஓய்ந்தபாடில்லை. புதுவருடம் கஞ்சியோடு முடிந்தது. புதுவருடத்திற்கு அடுத்த நாள் அதிகாலை இரண்டு மணியளவில் பச்சைப்புல்மோட்டைப்பகுதி, ஆனந்தபுரம், இரணைப்பாலைப் பகுதிகளிலிருந்து பாரிய வெடிச்சத்தங்கள் கேட்கத்தொடங்கின. துப்பாக்கி வெடிச்சத்தங்கள் இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்தன. சிவந்த கந்தக வெளிச்சத்தின் பிம்பம் வானத்தில் பட்டுத் தெறித்தது. நான் கண்விழித்து விட்டேன். மண்மூட்டைகளால் அமைக்கப்பட்ட காப்பகழியில் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தனர். நான் காப்பகழிக்கு வெளியில் மண்மூட்டைகளைக் காப்பாகக் கொண்டு, கடற்கரைப்பக்கமாகவே வானத்தைப் பார்த்தபடி தூங்குவதுண்டு. இரவில் நெருப்புத்தழலாகக் காற்றைக்கிழித்தபடி, கடற்பக்கம் செல்லும் துப்பாக்கிச் சன்னங்கள், இப்போது அதிகரித்துவிட்டன. தறப்பாழ் கொட்டிலுக்காக நடப்பட்ட மரத்தில், சிவப்பு நிறத்தில் எரிந்து கொண்டு போகும் சன்னங்கள் பட்டு எனக்கு மேல் விழுந்துவிடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் எத்தனை இரவுகள் தூங்காமல் வானத்தைப் பார்த்தபடி படுத்திருப்பேன். ஆனால் இப்பொழுது அது நடந்து விட்டது. கொட்டில் மரத்தில் பட்ட சன்னங்கள் தறப்பாழ் மீது விழுந்து தறப்பாழை உருக்கி விட்டன.

பலத்த சண்டைச் சத்தங்கள் தொடர்ச்சியாகவே கேட்டவண்ணமிருந்தன. எறிகணைகளின் வருகை அதிகரித்து விட்டது. அஞ்சிஞ்சி, ஆர்ட்டி, மல்ரிபெரல், கொத்துக்குண்டெனப் பல்வேறு வகையான எறிகணைத்தாக்குதல்கள் மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்படலாயின. தூங்கிக்கொண்டிருந்த மக்கள் எல்லோரும், என்னசெய்வதென்று தெரியாமல் மண்மூடை அடுக்கிய அகழிகளில் பதுங்கிக் கிடந்தனர். குடியிருப்புக்கள்மீது பரவலாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாயின. வெளியில் படுத்துக்கிடந்த நான், மண்மூட்டையால் அமைக்கப்பட்ட அகழிக்குள், அம்மாக்களுடன் போய்க் காப்பெடுத்துக் கொண்டேன். நாங்கள் இருக்கும் குடிலுக்கு அருகே பத்து மீற்றர் தூரத்திலெல்லாம் எறிகணைகள் விழுந்து வெடித்துச் சிதறின. எழுந்து வெளியில் சென்று பார்க்கவே முடியாதபடி பீரங்கித் தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. என்றுமில்லாத வண்ணம் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் பலமாகவே கேட்டன. அருகருகே கூப்பிடு தூரத்திலிருந்த சில கொட்டில்களுக்கு மேலே எறிகணைகள் விழுந்து வெடித்திருக்கவேண்டும். ஏனெனில் பல இடங்களிலிருந்தும் அவலக்குரல்கள் கேட்டவண்ணமேயிருந்தன. விடியும்வரை இப்படித்தான் இருக்கவேண்டும். வெளியில் எங்குதான் செல்வது. கடல் பகுதியில் இருந்தும் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணமிருந்தனர். கடலிலிருந்து வரும் எறிகணைகளெல்லாம், கடற்கரைப்பகுதிகளில் இருந்த கொட்டில்களுக்கு மேல் விழுந்து வெடித்துச் சிதறின. மேலே வானில் பரா வெளிச்சங்கள் பல ஒளிரவிடப்பட்டதுடன், வேவு விமானமும் தாழப்பறந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடேய் கந்தசாமி.. இண்டைக்கென்ன புதுசா இப்பிடி அடிக்கிறான்... ரெண்டு மூண்டு நாளாய் ஒரு சிலமனுமில்லாமல் இருந்தவங்கள். விடியக்காலத்தால இப்பிடி முழக்கிறாங்கள்... சரியான சனங்கள் செத்திருக்குங்கள்... கடலாலகூடச் சாத்துறான். எல்லா வளத்தாலயும் சுத்தி அடிக்கிறான்... இண்டையோட எல்லாரையும் முடிக்கிற பிளான் போலத்தான் கிடக்கு.."

"ஆசை, துவக்குச் சத்தங்கள் சரியாக் கேக்குது.. எங்கட பெடியள்தான் தொடங்கீட்டாங்கள் போலை கிடக்கு... இவ்வளவு நாளும் விற்றோபண்ணிப் பண்ணி வந்தவங்கள்.. இண்டையோட உவையளுக்கு ஒரு நல்ல பாடம் படிப்பிக்கோணும் எண்டு தொடங்கிட்டாங்கள் போலை கிடக்கு... எங்கட பெடியளின்ர அடி தாங்க ஏலாமத்தான் அவையள் எல்லாவளத்தாலயும் அடிக்கிறாங்கள் போலை..."

"விடிஞ்சாத்தான் கந்தசாமி என்னண்டு தெரியும்... துவக்குச்சூடு கொஞ்சம் கூடவாத்தான் கிடக்கு... சிலவேளை நீ சொல்லுறமாதியும் நடக்கலாம்... பெடியள் இப்பிடியே அவங்களை அடிச்சுத் துரத்தினாங்களெண்டால் கொஞ்ச நாளில வீட்டுக்குப் போயிடலாம்."

"ம்ம்ம்.. போயிடலாம்தான் ஆசை.. அதுக்கிடேல இவன்ர ஷெல்லடியில செத்திருவம் போலை கிடக்கு... ஷெல்லடியைப் பாக்க இண்டைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரக்கணக்காத்தான் சனம் செத்திருக்கும்போலை கிடக்கு"

விடியும் வரை எல்லோரும் மண்மூட்டை அடுக்கிய அகழிக்குள்ளேயே கிடந்தோம். ஆனாலும் ஷெல்லடி குறைந்தபாடில்லை. நேரம் ஆறுமணியைக் கடந்து கொண்டிருந்தது. துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்துகொண்டிருந்தன. அப்பா வெளியில் வந்து என்ன நடக்கிறது? என்று புதினம் பார்த்தார்.

"ஐயோ... கடவுளே... சனமெல்லாம் எங்கயோ போகுதுகள்... கந்தசாமி டேய்.. வெளிக்கிடுங்கோடா.. வெளிக்கிடுங்கோ... சனமெல்லாம் கடக்கரையால மாத்தளன் பக்கம் போகுதுகள்... வெளிக்கிடுங்கோ.."

அப்பாவின் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தோம்... கடற்கரை எங்கும் புகைமண்டலமாய்க் காட்சியளித்தது. சனங்களின் அழுகுரல்களும், ஒப்பாரிகளும் கேட்டுக்கொண்டேயிருந்தன. ஷெல்கள் ஆங்காங்கு பரவலாக வெடித்துக் கொண்டேயிருந்தன. சனங்கள் எல்லாம் கடற்கரைவழியாக மாத்தளன் பகுதிநோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். எல்லாச் சனங்களும் எங்கு போகிறார்கள்? என்று கடற்கரையடிக்குச் சென்று விசாரித்து ஓடிவந்த அப்பா, வேகமாக முக்கிய ஆவணங்களை மட்டும் எடுத்துக்கொள்ளும்படி சொன்னார்.

"ஆசை என்னாசை? சனங்களெல்லாம் எங்க போகுதுகள்?"

"கந்தசாமி இனி நிண்டு கதைக்க நேரமில்லை. பிள்ளையளத் தூக்கிக் கொண்டு வெளிக்கிடு... சனமெல்லாம் ஆமீற்றப் போகுதுகள்.. ஷெல்லடிக்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்து சாகிறத விட அங்கால போயிடலாமெண்டு போகுதுகள்.. வெளிக்கிடு.. வெளிக்கிடு.."

கந்தசாமியண்ணையின் மனைவி ஒன்பது மாதக் கர்ப்பிணி. அதுமட்டுமில்லாமல் இரண்டு வயது மகனும், ஐந்து வயது மகளும் உண்டு. ஒன்பதுமாதக் கர்ப்பிணி வயிற்றோடும் அந்த இரண்டு வயது மகனை, இடம்பெயர்ந்து போகிற இடமெல்லாம் சுமந்து கொண்டுதான் வந்தவள். இப்போது சாப்பாடு இல்லாமையால் அவளுக்குத் தென்பு குறைந்துவிட்டது. போசாக்கான உணவே கிடைக்காதபோது எங்கிருந்து தென்பு வந்துவிடும்? இப்போது கந்தசாமியண்ணை தன்னுடைய மகனைச் சுமந்தபடி வெளிக்கிடத் தயாராகி விட்டார். சனம் போகிற போக்கில் நாங்களும் கடற்கரை வழியாக மாத்தளன் நோக்கிப் புறப்பட்டு விட்டோம். கடற்கரைப் பகுதியெல்லாம் சனக்கூட்டத்தின் நெரிசலாகவே இருந்தது.

எல்லோரும் ஒருவரையொருவர் பிடித்தபடி சன நெரிசலுக்குள்ளால் முன்னேறிக் கொண்டிருந்தோம். சுமார் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இராணுவப் பகுதிக்குள் செல்வதற்குப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் நாங்களும் அடக்கம். ஷெல்லடிகள் அதிகமாக இருந்தாலும், சாகுவோர் சாக எஞ்சியோர் போய்க்கொண்டிருந்தோம். மாத்தளனை நெருங்கி விட்டோம். அதிகமான சனங்கள் கூச்சலிட்டவாறு ஓடத்தொடங்கினர். எதற்குச் சனம் கூச்சலிட்டுக் கொண்டு ஓடுகின்றது என்றே தெரியாமல் ஏனையோரும் அவர்களுக்குப் பின்னால் ஓடினார்கள்.

"எங்கட பெடியள் இடையில மறிச்சிட்டாங்களாம். ஆமீன்ர பக்கம் போற ஆக்கள அடிச்சு விரட்டுறாங்களாம். அதுதான் சனங்கள் அவங்களையும் தள்ளி விழுத்திக்கொண்டு ஓடுதுகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஐயா ஒருவர் சொல்லிக்கொண்டு திரும்பி ஓடி வந்தார். நாங்கள் எப்படியாவது உள்ளே போய்விட வேண்டும் என்ற முடிவோடு வேகமாக நடந்துகொண்டிருந்தோம். எறிகணைகள் சனங்களின் மேல் விழுந்து வெடித்துச் சிதறின. செத்தவர்களையும், காயப்பட்டவர்களையும் பார்க்காது, எஞ்சியோர் போராளிகளின் மறியலையும் தள்ளி விட்டுப் பயணித்துக் கொண்டிருந்தனர். நாங்களும் போராளிகளின் மறியல் அரணை நெருங்கி விட்டோம். போராளிகளால் சனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. திடீரெனத் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்கத்தொடங்கின. எங்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த சனங்கள் விழுந்தடித்துத் திரும்பி ஓடிவந்தார்கள்.

"ஐயோ பாழ்படுவார்... சுடுறாங்களே... ஓடுங்கோ.. ஓடுங்கோ... நாடுதாறம் நாடுதாறம் எண்டு இப்ப எங்களையே கொல்லுறாங்கள்.."

யாரோ ஒரு ஐயா புலம்பிக்கொண்டு ஓடுகிறார். போன சனங்களில் அரைவாசிப்பேர் இராணுவப் பகுதிக்குள் போய்விட்டார்கள். மீதிச்சனங்கள் திரும்பியோடி வருகின்றனர். நாங்களும் வந்தவழி நோக்கி ஓடத்தொடங்கினோம். பலபேருக்குக் காலுக்கீழ் சுட்டதால் காயம் என்று பலர் பேசிக் கொண்டார்கள். இராணுவமோ தீவிரமான எறிகணைத்தாக்குதலை நடத்திக் கொண்டேயிருந்தது. எறிகணைகளில் இருந்து தப்பவேண்டுமானால், தற்போது காப்பெடுத்தே ஆகவேண்டிய சூழ்நிலை. கடற்கரை வழியாகத் திரும்பி ஓடிவரும்போது, கடற்புலிகளின் சிறிய மண்மூட்டைக் காவலரண் ஒன்று கண்ணில் பட்டது. அதற்குள் போராளிகளைக் காணவில்லை. இரண்டோ, மூன்றோ குடும்பங்கள் காப்பெடுத்துக் கொண்டதைப் பார்த்துவிட்டு நாங்களும் அதற்குள் ஓடிச்சென்று பதுங்கினோம். இராணுவத்தினரின் எறிகணைகளும், துப்பாக்கிச் சன்னங்களும் எங்களை இப்போது என்ன செய்துவிடும்? தேக்கங்குற்றிகள் நடப்பட்டு, மண்மூட்டைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கப்பட்ட மூடிய காப்பரணாக இருந்ததால், எங்களுக்குப் பாதுகாப்பு இப்போது உறுதியானதாக இருந்தது. காலையிலே எழுந்து ஓடி அலைந்ததில் தாகமும், பசியும் அதிகரித்துவிட்டன. காப்பரணின் மூலையில் பானை ஒன்று இருந்ததை அவதானித்த அப்பா, அதனை எடுத்துத் திறந்து பார்த்தார். என்ன ஓர் ஆச்சரியம். யாரோ வெள்ளைச்சோறு காய்ச்சி வைத்திருக்கிறார்கள். அதிகாலையிலே சாப்பிடுவதற்குச் சமைத்தவர்கள், இராணுவப்பகுதிக்குள் போவற்கு ஓடிவந்தவேளை, ஷெல்லடிக்கு இந்த அரணில் பதுங்கியிருக்கலாம். பின்னர் அவர்கள் கொண்டுவந்த சோற்றுப்பானையை விட்டுவிட்டுப் போயிருக்கலாம் என்றே ஊகிக்க முடிந்தது. இந்தப் போர்ச்சூழலிலும் சோறுகாய்ச்சிச் சாப்பிடும் வசதியுடன் யாரோ இருந்திருக்கிறார்கள் என்பது வியப்புத்தான். பெரும்பாலும் கடைவைத்திருந்த யாரோ ஒரு குடும்பம்தான் சோறுசமைத்திருக்க வேண்டும். எல்லாச் சனங்களும் ஒரு நேரக் கஞ்சியோடு உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்ந்துகொண்டிருந்த காலமிது.

நாங்கள் சோறு சாப்பிட்டு ஒருமாதத்திற்கும் மேலிருக்கும். இப்போது இந்த வெள்ளைச் சோற்றைப் பார்த்தவுடன், யாருக்கும் கொடுக்காமல் அதை அப்படியே பறித்து உண்ணவேண்டும்போல் இருந்தது. இச்சோற்றைத் தின்றுவிட்டு இறந்துபோனால்கூடப் பறவாயில்லை என்ற எண்ணமே தோன்றியது. எனக்கு மட்டுமல்ல இவ்வரணுக்குள் இருந்த அத்தனைபேருடைய அவா அதுவாகக் கூட இலுக்கலாம். அப்பா எல்லோரையும் ஒருக்கால் சுற்றிப் பார்த்தார். எல்லோருடைய முகத்திலும் ஏக்கம் தென்பட்டது. பானையில் இருந்த சோற்றில் ஒவ்வொரு பிடிகிள்ளி எல்லோருக்கும் கொடுத்தார். எனக்கும் ஒருபிடி கிடைத்தது. வாங்கி உண்டேன். ஆகா என்ன ஒரு சுவையாக இருந்தது. வெறும் சோறே இந்த நேரத்தில் அமிர்தம்போல் சுவைத்தது. திருப்பிக் கிடைக்காது என்று தெரிந்தும் அடுத்தபிடிக்காகக் காத்திருப்பதில் பயனில்லை. ஏனெனில் சிறிய பானைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணளவாக இரண்டரைச்சுண்டு அரிசிபோட்டுக் காய்ச்சிய சோறளவே இருந்தது. அதனை எல்லோருக்கும் பகிரும்போது கொஞ்சமும் மிஞ்சிவிடாது. நான் என்னுடைய கைகளில் ஒட்டிக்கிடந்த சோற்றுப் பருக்கைகளைக்கூட விட்டுவைக்கவில்லை. நாக்கினால் ஒவ்வொன்றாக எடுத்து உண்டுவிட்டு, எல்லோரையும் நோட்டமிட்டேன். போன உயிர் மீளவும் வந்ததுபோல் அவர்களின் முகத்தில் ஒரு உற்சாகம் தென்பட்டது. அவர்களுக்கு மட்டுமில்லை. எங்களுக்கும்தான்.

“ஆசை இப்பிடி இருந்து ஒருபயனுமில்லை. உவங்கள் ஆமீற்றையும் போக விடமாட்டாங்கள்.. இனி நாங்கள் ஷெல்லடியிலதான் சாகப்போறம். அதுவரைக்கும் தண்ணியக் குடிச்சிட்டாவது இருக்க வேண்டியதுதான்... இங்கயே இருங்கோ நான் ஒருக்கா கொட்டிலடிக்குப் போட்டு வாறன்.. விட்டிற்று வந்த அரிசிக் குறுனல எடுத்திட்டு வாறன்.. அத எடுத்திட்டு வந்தாத்தான் கஞ்சியாவது காய்ச்சிக் குடிக்கலாம்”

என்று சொல்லியவாறு கந்தசாமியண்ணை கொட்டிலடிக்குப் போவதற்காக எழுந்தார். அப்பாவும் எதுவும் பேசாமல் கந்தசாமியண்ணையின் கருத்துக்களுக்குச் சம்மதம் தெரிவிப்பதுபோல் தலையசைத்துக் காட்டினார்.

“கந்தசாமியண்ண நானும் வாறன் நில்லுங்கோ... தனியப்போறது நல்லதில்லை... இந்தச் ஷெல்லடிக்குள்ளை உங்களுக்கு ஏதும் நடந்தால், யாருக்கு என்ன தெரியப்போவுது?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமடா கந்தசாமி, தம்பியையும் கூட்டிட்டுப் போ.... கவனமா போட்டு வாங்கோ... றவுன்சும் வருகுது குனிஞ்சு கொண்டு போங்கோ..."

அம்மாவும் எங்கள் பயணத்திற்குச் சம்மதம் தெரிவித்து விட்டார். எறிகணைகள் செறிவாகவே வந்து ஆங்காங்கு விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன... அவ்வப்போது உலங்கு வானூர்திகளிலிருந்தும் கொத்துக்குண்டுத் தாக்குதல்களை இராணுவத்தினர் நடத்திக்கொண்டு இருந்தனர். தொடர்ச்சியாக இராணுவத்தினரின் துப்பாக்கிச் சன்னங்களின் வருகையும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இதற்குள்ளால் நானும், கந்தசாமியண்ணையும் கொட்டிலை நோக்கிப் புறப்பட்டு விட்டோம். கண்ணுக்குப் புலப்படும் குடில்தேசம் எங்கும் கந்தக நெருப்புப் பற்றிக் கொண்டிருந்தது. மாத்தளன், பொக்கணைப் பகுதிகளில் வசித்த பல்லாயிரக்கணக்கான மக்கள், கடற்ரை வழியாக முள்ளிவாய்க்காலை நோக்கிப் இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்கள். தாம் கொண்டு வந்த அத்தனை உடைமைகளையும் போட்டுவிட்டு முக்கிய ஆவணக் கைப்பைகளுடன் போய்க்கொண்டிருந்தார்கள். குடில்கள் அமைந்த பகுதிகளில் சனங்களையே காணமுடியவில்லை. அதிகமானோர் காலையிலே இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போயிருக்க வேண்டும். அல்லது பாதுகாப்புத்தேடி எங்கேனும் புறப்பட்டிருக்க வேண்டும்.

எறிகணைகள் அருகே விழ விழ, அருகேயிருக்கும் மண்மூட்டை அகழிகளுள் பாய்ந்து காப்பெடுத்தபடி, நாங்கள் இருந்த குடிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். தறப்பாழ் குடில்களெல்லாம் எரிந்துகொண்டேயிருந்தன. பிணங்களெல்லாம் ஆங்காங்கு உருக்குலைந்து சிதறிக் கிடந்தன. குருதிக் கறைபடிந்து இரத்தவாடை வீசியபடி உடற்தசைத் துண்டுகள் தறப்பாழ்களில் ஒட்டியபடி இருந்தன. நாம் காப்பெடுக்கப் பதுங்கும் பதுங்குகுழிகளில் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணங்களே கைவிடப்பட்டுக் கிடந்தன. உயிரைப் பாதுகாக்க, இறந்த உறவுகளையே நின்று புதைக்க நேரமில்லாமல், பிணங்களைப் பதுங்குகுழிகளுக்குள் போட்டுவிட்டுப் பெரும்பாலான சனங்களெல்லாம் பாதுகாப்புத்தேடிப் போய்விட்டார்கள். இறந்தவர்கள் இறக்க, காயப்பட்டவர்களோடு உயிரைக் காப்பாற்றவே அவர்கள் எங்கோ அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களின் குடும்பத்தில் மாத்திரமல்ல, எங்களின் குடும்பத்தில்கூட இந்தச்சூழ்நிலையில் யார் இறந்தாலும், அடக்கம் செய்யாமலேயே புறப்பட்டிருப்போம். அந்தளவிற்கு இராணுவத்தாக்குதல்கள் உச்சம்பெற்றுவிட்டன.

இப்போதும் எத்தனையோ பதுங்குகுழிகளில் விழுந்து காப்பெடுத்த வண்ணமே நகர்ந்துகொண்டிருந்தோம். அருகருகே பத்து மீற்றர் தொலைவுகளில் எல்லாம் எறிகணைகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன. நிமிர்ந்து நடந்தால் வருகின்ற துப்பாக்கிச் சன்னங்கள், எங்கள் தலையைத் துளைத்துச் சென்றுவிடும். இதனால் குனிந்தபடியே சென்றுகொண்டிருந்தோம். மிகஅருகில் எறிகணைகள் விழுந்து வெடித்ததால், அருகிலே இருந்த குடிலுக்குள் பாய்ந்து, பதுங்குகுழியில் காப்பெடுத்துக் கொண்டோம். அந்தக் குடிலுக்குள் ஏற்கனவே எறிகணை விழுந்து வெடித்துள்ளது. ஏனெனில் பதுங்குகுழிக்குள் வயதுபோன கிழவனும், கிழவியும் பிணமாகக் குருதி கசிந்து கிடக்கிறார்கள். அவர்களுக்கு மேலே நாங்கள். என்ன செய்வது? இறந்தும் அவர்களுக்கு நிம்மதியில்லை. அவர்களின் பிள்ளைகள், இவர்களை அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். பிணங்களுக்குமேல் கிடக்கிறோம் என்ற பயமே இல்லை. அந்தளவிற்குப் போரின் தாக்கம் எங்கள் உணர்வுகளைக் கொன்றுவிட்டது. நாம் பதுங்கும் ஒவ்வொரு குடில்களுக்குள்ளும் ஏதேனும் உணவுப்பொருட்கள் இருக்கின்றனவா? என்பதில்தான் நாங்கள் குறியாய் இருந்தோம். ஒவ்வொரு பதுங்குகுழிக்குள்ளும் பதுங்குவதும், எழுவதுமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்துக்கொண்டிருந்தோம். இப்படிப் பலநூறு குடில்களில் இருந்த பதுங்குகுழிகளில் காப்பெடுத்தபடி நகர்ந்து கொண்டிருந்தோம்.

இடுப்பை வளைத்துக் குனிந்தபடி கரும்புகைகளூக்கால் நகர்ந்து கொண்டிருந்தோம். அருகிலே பாரிய முழக்கம். நாங்களிருவரும் அருகிலிருந்த கொட்டிலுக்குள் பாய்ந்து மண்மூட்டைகளுக்குள் பதுங்கி விட்டோம். அது ஏற்கனவே எறிகணை விழுந்து வெடித்த கொட்டில் என்பதால், எல்லாம் நிலைகுலைந்து போய் இருந்தது. தறப்பாழ் எரிந்து கருகிப்போய் இருந்தது. காலுக்குக்கீழே கிடந்த சிதைந்து போயிருந்த குழந்தையின் உடலைப் பார்த்துவிட்டுப் பாவப்பட்டுப்போனேன். சுமார் நான்கு வயது இருக்கும் பெண் குழந்தை. தலை சிதைந்து, கைகள் அற்று, ஈக்கள் மொய்த்தபடி இருந்தது அவளின் உடலம். அருகிலே ஒரு பாட்டி அடுப்படியில் வானத்தைப் பார்த்தபடி வாயைத்திறந்து கிடந்தாள். அவளின் கையொன்றில் தட்டு அகப்பை ஒன்று அகப்பட்டிருந்தது. அவள் இறக்கும் நேரத்திலும் எதற்காகத் தட்டகப்பையுடன் செத்துப்போனாள்? இல்லை.. அவள் றொட்டிசுட்டபடி இருந்திருக்கிறாள். திடீரென முழங்கிய ஷெல், அவளின் குடில் முகட்டில்தான் விழுந்திருக்கிறது. அடுப்பிலே அவள் பிரட்டி விட்ட றொட்டி இன்னும் வேகவில்லை. அடுப்புக்குள் பச்சையான பனைமட்டைகள் புகைகக்கிக் கொண்டிருந்தன. பாட்டியின் குடல் கிழிந்து மறுபக்கத்தால் இரத்தம் மணலை நனைத்திருந்தது. அவளின் இரத்தச் சிதறல்கள் றொட்டிக்குக் குழைத்த பச்சைமாவெல்லாம் தெறித்திருந்தன. ஆனாலும் அதுவொன்றும் எமக்குப் பெரிதாய்த் தெரியவில்லை. என் கண்கள் அடுப்பில் கிடக்கும் றொட்டித்துண்டின் மேலேயேதான் குறியாய் இருந்தன. கந்தசாமியண்ணை அதையெடுத்துச் சாப்பிடுவதற்கு முன் நான்பாய்ந்து எடுத்துக்கொண்டேன். எடுத்ததுதான் தாமதம் அதைப்பிய்த்து அப்படியே வாய்க்குள் அடைந்து கொண்டேன். எத்தனை நாளிற்குப் பிறகு கோதுமைமா றொட்டியின் சுவையை நா கண்டிருக்கிறது. ஆனாலும் இரத்தந் தோய்ந்த றொட்டியென்று கூடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவில்லை. பசி தீர்ந்தால் மட்டும் போதும் என்பதே இலட்சியமாய் இருந்தது.

நான் றொட்டித்துண்டைத் தின்று முடிப்பதற்குள், கந்தசாமியண்ணை றொட்டிக்குக் குழைத்திருந்த பச்சை மாக்கிண்ணியைத்தூக்கிக் கொண்டு அடுத்த கொட்டிலுக்குள் ஓடிவிட்டார்.

"கந்தசாமியண்ணா எனக்கும் கொஞ்சம் தாங்கோவன்... அவளோத்தயும் திண்டிராதேங்கோ..."

"நான் தரமாட்டன்.. றொட்டித்துண்டு தந்தனியோ? எனக்கு.. ஆஆஆ.."

"எனக்கு உங்கட ஞாபகம் வரேல.. நீங்கள் வங்கருக்குள்ள கிடந்தியள் அதுதான் திண்டிற்றன்..."

நான் பதில் சொல்லி முடிப்பதற்குள் அரைவாசி றொட்டிமாவைத் தின்றுவிட்டார். ஷெல் அருகில் விழுந்தாலும் அந்த முழக்கம்கூட எனக்குப் பெரிதாய்த் தெரியவில்லை. ஓடிச்சென்று அவரின் கிண்ணிக்குள் இருந்த றொட்டிமாவை எடுத்துத் தின்னத் தொடங்கினேன். பச்சைமா.. கொஞ்சம் உப்புச் சேர்த்துத் தண்ணீர் விட்டுக் குழைத்த மா... தேங்காய்ப்பூக்கூடப் போடவில்லை. பாட்டியின் இரத்தச் சிதறல்கள் தெறித்துக் கிடந்த மா.. என்ன ஒரு சுவையாக இருந்தது. வேகாத பச்சைமா அந்த நேரத்தில் எமக்கு உலகமாய்த் தெரிந்தது. அடிபட்டுப் பச்சைமாவைத் தின்றுவிட்டு எங்கள் கொட்டிலைநோக்கி ஓடினோம். துப்பாக்கிச் சன்னங்களையும், விழும் எறிகணைகளையும் பார்க்காமல், எங்கள் தறப்பாழ் கொட்டிலுக்குள் வந்து பாய்ந்து, மண்மூட்டை அகழிக்குள் இளைப்பாறினோம். அகழிக்குள் குருதி அதிகம் வெளியேறியிருப்பதைப் பார்த்துவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் தம்பி இஞ்சபார்... எவ்வளவு ரெத்தம் போயிருக்கெண்டு... யாரோ காயப்பட்டுப்போனாக்கள், இதுக்குள்ள வந்து கிடந்திட்டுப் போயிருக்காங்கள்."

"ஐயோ எவ்வளவு ரெத்தம் போயிருக்கு... எங்க இப்ப செத்தக்கிடக்கோ தெரியா, இன கந்தசாமியண்ண.."

"ஓமடாப்பா ரெத்தம் போனா பிறகு எங்க தப்புற... சரி கதைய விட்டிற்று வந்த வேலையப்பார்.."

கந்தசாமியண்ணையின் கதையைக் கேட்டபடியே குடிலுக்குள் கிடந்த உரைப்பையை அவிழ்த்துத் திறந்து பார்த்தேன். கட்டிவைத்தபடியே அரிசிக்குறுனல்கள் கிடந்தன. இந்தப்பை யாருடைய கண்ணுக்கும் அகப்படவில்லை. இல்லையென்றால் அது இங்கே இருந்திருக்காது. கொண்டு போனவன் ஒரு கிழமைக்குக் கஞ்சிகாய்ச்சிக் குடித்திருப்பான். அந்த உரைப்பைப் பொதியைச் சுமந்தபடி மீண்டும் வந்த வழியால் ஓடினோம். ஷெல்கள் விழவிழ நாங்களும் விழுந்து விழுந்து ஓடினோம். உலங்குவானூர்தித் தாக்குதல்களும், துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களும் இன்னும் அதிகரித்தபடியே இருந்தன. எங்கும் கரும்புகையும், கந்தக வாசமுமே பரவியபடியிருந்தன. ஒருமாதிரியாக அப்பாக்கள் இருந்த அரணை அடைந்துவிட்டோம்.

"கந்தசாமி.. உங்களைத்தான் பாத்திட்டு இருக்கம்... எல்லாச் சனமும் முள்ளிவாய்க்கால் பக்கம் போகுதுகள்... வெளிக்கிடுவம். ஆமியும் மாத்தளன் றோட்டுக்கு முன்னேறிட்டானாம்... இனி இருந்து வேலை இல்லை.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை ஆசை... இனியும் எவ்வளவு தூரம்தான் போறது.. நான் புள்ள வயித்தோடை இருக்கிற அவளையும், ரெண்டு சின்னனுகளையும் எங்கதான் கொண்டுபோற? ... நான் இதிலயே இருந்து மாத்தளன் பக்கம் போற ஆக்களோட போகப்போறன்.. நீங்க வாறதெண்டால் வாங்கோ ஆசை.. இல்லாட்டி போறதெண்டா வெளிக்கிடுங்கோ..."

"கந்தசாமி உனக்கென்ன லூசாபுடிச்சிருக்கு... இயக்கப் பெடியள் சுட்டுக் கலைக்கிறாங்கள். உனக்கென்ன விளையாட்டாப் போச்சா... எத்தின பேர் காயப்பட்டுப் போச்சுதுகள்... உதுக்குள்ள புள்ளவயித்தோட இருக்கிற உவளை எப்பிடிக் கொண்டு ஓடப்போறாய்... ஆமீற்ற சரணடைஞ்சாலும் உன்னக் கொண்டுபோடுவாங்கள்.. உவளை என்ன செய்வாங்களோ தெரியா... வெளிக்கிடுங்கோ முள்ளிவாய்க்கால் பக்கம் போவம்... ஏதும் நடந்தா ஒண்டாச் சாவம்.."

அப்பாவின் பேச்சுக்கு மறுபேச்சு வரவில்லை. எல்லோரும் கடற்கரை வழியாக, முள்ளிவாய்க்காலை நோக்கிச் சனத்தோடு சனமாகப் பதுங்கிப் பதுங்கி நகர்ந்து கொண்டிருந்தோம். கொஞ்சச் சனங்கள், இருண்டதன் பின் மாத்தளன் பக்கம் போவதற்காய், கடற்கரைகளில் இருந்த பனந்தோப்புக்குள் நின்றுகொண்டிருந்தனர். ஆமியிடம் சரணடைந்தால் போதும் என்ற எண்ணமே அவர்களுக்கு உயர்வாய் இருந்திருக்க வேண்டும். விழுகின்ற எறிகணைகளும், வருகின்ற சன்னங்களும் அவர்களுக்கு எடுபடவில்லை. நாங்கள் வலைஞர்மடத்தடிக்கு வந்துவிட்டோம். ஷெல்லடிகள் அதிகரித்து விட்டதால் வலைஞர்மடத் தேவாலயத்தில் தங்கிவிட்டுப் போக முடிவெடுத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாதர்மாரும், சிஸ்ரர்மாரும் இருக்கிறதால சேச்சுக்குச் ஷெல்லடிக்க மாட்டாங்கள்.... சேர்ச்சில போய்த் தங்கீற்றுச் ஷெல்லடி குறையப் போவம்"

அப்பா கூறியபடி, தேவாலயத்தை நோக்கி நடந்தார். நாங்களும் அவரின் பின்னால் நகர்ந்து தேவாலயத்தை அண்மித்துவிட்டோம். தேவாலயம் மக்களின் நெரிசலால் அமைதியிழந்திருந்தது. தேவாலயத்தினுள்ளே போயிருக்க இடமில்லை. அதனால் தேவாலயத்தின் வெளித்தாழ்வாரத்தில், கொண்டு வந்த தறப்பாளை விரித்துவிட்டு இளைப்பாறினோம். தேவாலய வளாகம் முழுமையாகச் சனநெரிசலாகவே இருந்தது. 'பாதர்மாரும், சிஸ்ரர்மாரும் ஆமியிடம் சரணடையப் போகிறார்களாம்' என்ற செய்தியும் பரவியது.

"கந்தசாமி, சனம் கதைக்கிறதக் கேட்டியோ... பாதராக்கள் இரவைக்கு ஆமீற்ற சரணடையப்போறினபோல கிடக்கு.. சனங்களும் அவையளோடை போப்போது... பாதராக்களோட போனாப் பயமில்லை. அப்ப இரவைக்கு நாங்களும் பாதராக்களோட போவம் ..."

கந்தசாமியண்ணை ஒன்றும் பேசவில்லை. தலையசைத்துச் சம்மதித்தார். கந்தசாமியண்ணை மாத்தளன் பகுதிக்குள்ளால் போக விரும்பியவர். அப்பா அதனைத் தடுத்தமையால் ஏற்பட்ட கோபத்தின் வெளிவருகையே, கந்தசாமியண்ணையின் அமைதியான தலையசைப்புக்குக் காரணம். பொழுதும் நகர்ந்து கொண்டிருந்தது. தேவாலய வளாகத்தினுள் 'தமிழர் புனர்வாழ்வுக் கழகம்' மக்களுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்துக்கொண்டிருந்ததால், அங்கு வாங்கிய கஞ்சி அன்றைய பொழுதின் பசியை ஓரளவு தணித்திருந்தது. மாலைச்சூரியனும் மறையத்தொடங்கினாலும் எறிகணைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிப்புக்களுக்குக் குறைவே இல்லை. பரா வெளிச்சங்களின் உதவியுடன் வானத்திலே உலங்கு வானூர்திகளும் தாக்குதலை நடத்தின. எவ்வளவுதான் ஷெல்லடி நடந்தாலும் தலைக்குமேலே விழுந்தால் பறவாயில்லை, அருகில் விழுந்து வெடித்துக் காயப்பட்டுவிடக் கூடாது என்ற மனநிலையில் இரவுத் தூக்கத்திற்குச் சென்றோம். போரின் உக்கிரத்தால் நிம்மதியாகத் தலைசாய்ந்து ஐந்துமாதங்களாகிவிட்டது. இப்போது எங்கே தூங்கிவிடப்போகிறோம். தறப்பாழைத் தேவாலயத்தின் பின்புறத் தாழ்வாரத்தோடு விரித்துவிட்டு அதிலே நாங்கள் எல்லோரும் படுத்திருந்தோம். எறிகணைகள் ஆங்காங்கு வெடித்துக்கொண்டேயிருந்தன. துப்பாக்கிச் சன்னங்கள் சிவப்பு நிறத்திலே கடற்கரைப்பக்கமாகக் காற்றைக் கிழித்தபடி சென்றுகொண்டிருந்தன. போர் வெடியின் ஓசையின் தாலாட்டில் எல்லோரும் கண்ணயர்ந்து விட்டோம். அருகருகே நூறுமீற்றர் தொலைவுகளிலெல்லாம் எறிகணைகள் விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09

இரவு மறைந்து காலை புலரும் நேரம். பெரும்பாலும் அதிகாலை ஐந்து மணியிருக்கும். எனக்கு நித்திரை கலைந்துவிட்டது. இரவு செறிவாக விழுந்து வெடித்துக்கொண்டிருந்த ஆர்ட்டி எறிகணைகள் இப்போது ஓரளவிற்கு ஓய்ந்தாற்போலிருந்தன. ஆனால் அஞ்சிஞ்சிச் ஷெல்களின் வெடிப்புக்களே ஆங்காங்கு தொலைவுகளில் நிகழ்ந்தவண்ணமிருந்தன. ஆமி நெருங்கி விட்டதன் அறிகுறியையே அது எமக்கு உணர்த்தியது. கண்களைக் கசக்கியபடி படுக்கையிலிருந்து எழும்பிப் படுத்த இடத்திலேயே குந்திக்கொண்டிருந்தேன். அருகிலெல்லாம் இடம்பெயர்ந்து வந்திருந்த சனங்கள் படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். என்னருகே யாரோ என்வயசை ஒத்த சிறுவர்கள் படுத்திருந்தார்கள். இன்னும் விடியவில்லை என்பதால் எல்லோருக்கும் காலைத்தூக்கம் கொஞ்சம் நன்றாகவே போய்க்கொண்டிருந்தது. எறிகணைகளின் வெடிப்புக்களின் சாதுவான ஓய்வு, நித்திரைக்குச் சாதகமாயும் விளங்கியது. அம்மா, தங்கச்சி, கந்தசாமியண்ணையின் மனைவி, பிள்ளைகளென்று எல்லோரும் நன்றாகத் தூங்கியபடியிருந்தனர். கந்தசாமியண்ணையும், அப்பாவும் அருகிலே காலைத்தேநீருக்காக அடுப்புமூட்டிக் கொண்டிருந்தனர். அமைதியான நேரத்தில் தொலைவில் அஞ்சிஞ்சி வெடிப்புக்கள் மட்டுமே நிகழ்ந்து கொண்டிருந்தன. திடீரெனப் பாரிய இரைச்சல் சத்தம்...

"ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்....ஸ்ஸ்ஸ்...ஸ்ஸ்ஸ்.. டும்ம்ம்ம்ம்ம்"

எங்கிருந்தோ வந்த அஞ்சிஞ்சிச் ஷெல்லொன்று நாங்கள் படுத்திருந்த தேவாலயத் தாழ்வாரக்கூரையில் விழுந்து முழங்கியது. காது செவிடுபடும் சத்தம். காதில் 'ங்ங்ங்ங்ங்ங்ங்ங்.......' என்ற ஓசையே சிறிது நேரம் கேட்டுக்கொண்டிருந்தது. சனங்கள் குழறும் சத்தங்கள் கேட்கவேயில்லை. எங்கும் புகைமூட்டம். யாருக்கு என்ன நடந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே தெரியவில்லை. உடம்பில் மேலாடை அணியாமல் இருந்ததால், கந்தக மருந்து உடம்பை எரிய வைத்தது.

"என்ரை ஐயோ..... என்ரையம்மா....."

ஒப்பாரிகள் இப்போதுதான் காதுகளுக்குக் கேட்கத்தொடங்கின.

"ஓடுங்கோ.. சேர்ச்சுக்குள்ள ஓடுங்கோ..."

அப்பாவின் சத்தம் கேட்டவுடனேயே சுய நினைவுக்கு வந்தவர்களாய்த் தேவாலயத்திற்குள் ஓடினோம். நித்திரையில் இருந்த அனைவரும் பதறியடித்துக்கொண்டு தேவாலயத்திற்குள் வந்துவிட்டார்கள். நான் என் இரண்டு கைகளாலும் என் உடம்பைத் தடவிப்பார்த்துக்கொண்டிருந்தேன். உடம்பெல்லாம் சடுதியான எரிச்சலாக இருந்ததால், காயப்பட்டுவிட்டேனோ? என்று கைகளால் தடவிப்பார்த்துக்கொண்டேன். கைகளில் இரத்தம் காணப்படவில்லை. ஒரு நிம்மதி. ஏனென்றால் எரிதழலாகவரும் குண்டுச் சிதறல்கள், உடலை அறுத்துவிடுவது எங்களுக்கு உடனே தெரியாது. காயப்பட்ட இடத்தில் ஏற்படும் எரிச்சலை வைத்தோ, அல்லது வெளியேறும் இரத்தத்தைக் கண்டோதான் காயப்பட்டதைத் தெரிந்துகொள்வார்கள். இதனால் உள்ளே ஓடிவந்தவர்கள் எல்லோரும் தங்கள் உடம்புகளைத் தடவிப்பார்த்தபடியிருந்தனர். ஒரு நிமிடம் சென்றது. அதன்பின்தான் மற்றவர்களின் நினைவுக்குத் திரும்பினோம். சுற்றும் முற்றும் பார்த்தோம். எல்லோரும் உள்ளே வந்து விட்டார்களா? என்று சரிபார்த்துக்கொண்டோம். ஆம் எல்லோரும் வந்து விட்டோம். போன ஜென்மப் புண்ணியமோ என்னவோ? தலைக்குமேலே முழங்கிய ஷெல்லில் எந்தவொரு பாதிப்பும் இல்லை.

"கந்தசாமி... உன்ரை மனிசி எங்க?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் வார்த்தைகள் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நின்ற இடத்தில் கந்தசாமியண்ணையின் மனைவியும், அவரின் இரண்டு வயதுப்பெடியனையும் காணவில்லை. ஷெல்லடித்த இரண்டு நிமிடங்களாகிய நிலையில் இப்போதுதான் அவர்களின் நினைவுகள் வந்தன. கந்தசாமியண்ணைகூடத் தன் மூத்த மகளையே தூக்கிக்கொண்டு ஓடிவந்தார். ஆனால் தூக்கத்தில் இருந்த மனைவியையும், மனைவியிடம் பால்குடித்தபடி தூங்கிக்கொண்டிருந்த கடைசி மகனையும் அவர் மறந்துவிட்டாரோ என்னவோ தெரியவில்லை. மறுபடியும் வெளியில் ஓடிச்சென்று பார்த்தோம். கந்தைசாமியண்ணையின் மனைவி எழுந்திருக்கவேயில்லை. நித்திரையிலேயே உயிர்போய்விட்டது. நெற்றியில் பாரியகாயம் ஏற்பட்டு, இரத்தம் வெளிவந்து தறப்பாழில் தயிர்போல உறைந்து கிடந்தது. எவ்வித அசைவோ இல்லை. ஷெல் வெடித்ததும், அந்தச் ஷெல்லின் சிதறல், தன்னைக் காயப்படுத்தியதையும்கூட அவர் அறிந்திருக்கமாட்டார். தூக்கத்திலேயே அவரது தலைப்பகுதி அறுக்கப்பட்டிருந்தது. பால்குடித்தபடி தூங்கிக்கொண்டிருந்த குழந்தைக்கு ஒன்றுமாகவில்லை. தாயைக் கைகளால் அணைத்தபடி, தாய் இறந்ததே தெரியாமல் பால்குடித்துக்கொண்டிருந்தது.

> "என்ரை செல்லம்... என்னை விட்டிற்றுப் போட்டியே.... ஐயோ இனி என்ன செய்வன்... நீயில்லாம என்னசெய்வன்.... ரெண்டு குழந்தையளையும் விட்டிற்றுப் போட்டியேம்மா... தலைக்குமேல விழுந்த ஷெல் எல்லோரையும் ஒரேதா கொண்டிருக்கலாமே... ஐயோ... "

கந்தசாமியண்ணையின் கதறல் எல்லோரையும் கலங்க வைத்தது. இறந்த தாயின் முலைப்பால் குடித்துக்கொண்டிருந்த குழந்தையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா தூக்கினார். அது இரண்டு வயதுக் குழந்தையல்லாவா. அதற்கு என்ன நடந்ததென்றே தெரியவில்லை.

நான் எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டிருந்தேன். எனக்கருகில் தூங்கிக்கொண்டிருந்த சிறுவனும் எழுந்திருக்கவில்லை. அவனது காதுகளிலிருந்து இரத்தம் வெளியில் வந்திருந்தது. மூக்கிலிருந்தும் இரத்தம் வெளிவந்திருந்தது. அதனருகில் பலர் இறந்து கிடந்தனர். காயப்பட்டவர்களைவிட இறந்துபோய்க்கிடப்பவர்களே அதிகம். எங்கெங்கோவெல்லாம் இருந்து பாதுகாப்புக்கருதி இங்கே வந்திருந்தவர்கள், தேவாலய வளாகத்தினுள் மடிந்து கிடந்தனர். ஒப்பாரியோலம் அதிகரித்தது. இறந்தவர்களைக்கூடப் புதைக்கமுடியாமல் பலர் அங்கிருந்து வெளியேறி, முள்ளிவாய்க்கால் பகுதிநோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

"கந்தசாமி... அழாத.. அழாத.. இவளின்ர விதி இதுதான்.... நடந்து முடிஞ்சத்துக்காக இனி அழுது வேலையில்லை.. எல்லோரும் கிளம்புறாங்கள். இனியும் இவடத்தில நிக்கிறது சரிப்பட்டுவராது.... நாங்கள் பொடியை நல்லபடி இதில அடக்கம் செய்திட்டு வெளிக்கிடுவம்..."

அப்பா கூறிய பேச்சைக்கேட்டுக் கந்தசாமியண்ணை ஆவேசத்துடன் அழத்தொடங்கினார். இராணுவத்திடம் மாத்தளன் பகுதியால் செல்லத்தயாரானபோது, அவர்களை அப்பாவே போகவிடாமல் தடுத்தார். இராணுவத்தின் கெடுபிடிகளை அறிந்தே அவர்களைப் போகவிடாமல் தடுத்திருந்தார்.

"நான் மாத்தளனால போகத்தானே நிண்டனான்... எங்களைப் போக விட்டிருக்கலாம்... நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருப்பம்.. இப்ப இவளைப் பறிகுடுத்திட்டு நிக்கிறனே... ஒன்பது மாதப்புள்ள வயித்தோட அவளை இங்ககூட்டிவந்து பலிகொடுத்திட்டனே.... என்ரையம்மா... என்னை ஏனம்மா தனிய விட்டிற்றுப்போனனீ.... நீயில்லாம எப்படியம்மா குழந்தைகளப் பாக்கப்போறனோ... கடவுளே..என்ரை தலையிலைகூட ஷெல் விழுதில்லையே...."

கந்தசாமியண்ணையின் அழுகை நின்றபாடில்லை. அதனால் அருகில் இருந்த யாரிடமோ மண்வெட்டி வாங்கிவந்து, அப்பா குழிவெட்டத் தொடங்கினார். உடலை அடக்கம் செய்வதற்கு ஏதுவாகக் குழிதோண்டியபின், உடலைச் சாறத்தினால் போர்த்துக் குழிக்குள் இறக்கி அடக்கம் செய்தார். அடக்கம் செய்தபின் எல்லோரும் அவ்விடத்தை விட்டுப் பயணிக்கத் தயாரானபோது, அத்தேவாலயத்தின் அருட்தந்தை வரலானார்.

"ஐயா, எனக்கு இந்தநேரத்தில... என்ன சொல்றதெண்டே தெரியேல்ல... இது கோயில் வாளாகம். பாதுகாப்புத்தேடிச் சனங்கள் இஞ்ச வந்துகொண்டிக்கினம். நீங்கள் இந்த இடத்தில பொடியை புதைச்சிட்டீங்கள்.. இண்டைக்கோ, நாளைக்கோ இவடத்தில சனங்கள் வந்து இருப்பினம்.. அதனால தாட்ட பொடியை வெளியில எடுத்து, எங்கட கோயில் சவக்காலைல தாழுங்கோ.. நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்துதாறன். பொடியைப் பக்கத்தில இருக்கிற சவக்காலைல அடக்கம் செய்யுங்கோ.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவால் என்னசொல்லுவதென்றே தெரியவில்லை. அருட்தந்தை கூறியதிலும் உண்மை இருந்தது. அவர் மக்களின் நலனை யோசிக்கிறார். நாங்கள் எங்கட சுகத்திற்காக அதிலே அடக்கம் செய்துவிட்டுப்போனால், தேவாலயத்துக்குத் தஞ்சம்தேடி வருபவர்களுக்குப் பெரும் இடர்பாடாக இருக்கும். அப்பா, மீண்டும் தாட்ட உடலைத் தோண்டி எடுத்தார். அருட்தந்தை கொடுத்த உடல்சுமக்கும் பையில் உடலைவைத்துக் கந்தசாமியண்ணையோடு சவக்காலையில் அடக்கம் செய்துவிட்டு வந்தார். என்ன செய்வது? எல்லோருடைய வாழ்விலும் துக்கமும், வேதனையும் உச்சம்பெற்று இருந்ததால், உதவிக்கு யாரும் வரவும் இல்லை. உதவிக்கு யாரையும் எதிர்பார்க்கவும் இல்லை. புதைத்த உடலைத் தோண்டியெடுத்து வேறொரு இடத்தில் அடக்கம் செய்த அனுபவத்தை, வன்னிப்போர்க்காலத்தில் நாங்கள் மட்டுமே அனுபவித்திருப்போம். ஏனெனில் இறந்த உடல்களைப் புதைக்காமலேயே விட்டுச்சென்ற சூழலில், கோயில் வளாகத்தில் அடக்கம் செய்வது சரியில்லை என்ற எண்ணம் மிகுந்ததே இதற்குக் காரணமாகும்.

எத்தனையாயிரம் உடல்கள் புழுக்கள் துடித்தபடி கிடக்கின்றன. தாப்பதற்குக்கூட உறவுகளுக்கு நேரமில்லாத இடப்பெயர்வு அவலம். தேவாலயச் சூழலில் இறந்துகிடந்த அநாதைப்பிணங்கள் அருட்தந்தையின் பொதுப்பணிக்குழுவால் அடக்கம்செய்யப்பட்டன. ஆனால் தேவாலய வளாகத்திற்கு வெளியில் கிடக்கும் பிணங்கள் ஈக்களுக்கும், புழுக்களுக்கும் உணவாகிக்கொண்டிருந்ததை ஏன் யாரும் கவனிக்கவில்லை? ஒன்றா, இரண்டா உடலங்கள் அவற்றை அடக்கம் செய்துவிட? தோண்டி எடுத்த உடலை அடக்கம் செய்துவிட்டு வந்தவுடனேயே, அவ்விடத்தைவிட்டு அகன்று முள்ளிவாய்க்கால் பகுதி நோக்கிப் பயணப்படத் தொடங்கினோம். சனங்களெல்லாம் முள்ளிவாய்க்கால் பகுதி நோக்கியே இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். பலர் இராணுவத்தினரிடம் சரணடையும் எண்ணத்தில், வலைஞர்மடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளிலேயே ஷெல்மழைக்குள்ளும் உயிரைக் கையில்பிடித்தபடி காத்திருந்தனர். வலைஞர்மடக் கடற்கரை வழியால் முள்ளிவாய்க்கால் நோக்கி நகர்கிறோம்... இராணுவத்தினரின் எறிகணைகளின் வெடிப்புக்கள் இப்போது பழையபடி அதிகரித்தே விட்டன. கடல், வான், தரைத் தாக்குதல்களின் மத்தியில், மக்கள் பெரும் அவலவாழ்க்கையையே வாழ்ந்தனர். சாப்பிட உணவு இல்லை. போகின்ற இடங்களில் 'தமிழர் புனர்வாழ்வுக் கழகம்' காய்ச்சித் தரும் கஞ்சியைக் குடித்துவிட்டு எஞ்சிய உயிர் ஊசலாடித் திரிந்தது.

> "அண்ணையாக்கள்.. இந்த நேரத்தில போகாதேங்கோ... கடக்கரையால போன கனபேரை ஆமிக்காரங்கள் சினேப்பண்ணிப் போட்டாங்கள்... இதனால பகல் நேரங்களில உதால போறது பாதுகாப்பில்ல. குழந்தைகுட்டியளோட போறனீங்கள் உதுவழில எங்கையும் இருந்திட்டு.. இரவானாப்பிறவு போங்கோ.."

அவ்வழியால் வந்த ஒரு போராளியின் குரல் எங்களுக்கு எச்சரிக்கை தந்தாலும், அதை நாங்கள் பொருட்படுத்தவில்லை. பிள்ளைவயிற்றுடன் இருந்த உயிரைப் பறிகொடுத்த துக்கத்தில், என்ன நடந்தாலும் பறவாயில்லை, முள்ளிவாய்க்கால் பக்கம் போனால் சரி என்றபடி நகர்ந்துகொண்டிருந்தோம். போகும்போது கண்ட காட்சிகள் அந்தப்போராளியின் கருத்துக்களை உறுதிப்படுத்துவனவாய் இருந்தன. கடற்கரைகளில் தலைகளிலே துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் ஆங்காங்கு உடல்கள் கிடந்தன. இறந்து இரண்டு, மூன்று நாட்களாலான உடல்களும் ஆங்காங்கு கிடந்தன. அவ்வுடல்களைப் பார்த்ததால் நெஞ்சுக்குள் பயம் தோன்றியது. அதனால் குனிந்தபடியே நகர்ந்துகொண்டிருந்தோம். கந்தசாமியண்ணை, தன் பிள்ளைகளைத் தூக்கியபடி புலம்பிக்கொண்டு வந்தார். பல மணிநேரப் பயணத்தின்பின் முள்ளிவாய்க்கால் பகுதியை அடைந்து விட்டோம். முள்ளிவாய்க்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளியம்மா கோவிலடியில் 'தமிழர் புனர்வாழ்வுக் கழகம்' கஞ்சி காய்ச்சிக் கொடுத்துக்கொண்டிருப்பதால், அதனருகே ஒரு இடத்தில் பதுங்குகுழிவெட்டித் தறப்பாழ் கொட்டில் போட்டுத் தங்கினோம். மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடப் பகுதிகளிலிருந்து மக்கள் முள்ளிவாய்க்கால் நோக்கியே வந்துகொண்டிருந்ததனால், ஓரிரு நாட்களில் சனநெரிசல் அதிகரித்துவிட்டது. அதனால் கஞ்சிக்கு நிற்கும் வரிசைகூட இப்போது நீண்டுவிட்டது. கஞ்சிக்கு நின்று பலர் இறந்துபோன சந்தர்ப்பங்களும் மலிந்துவிட்டன. 'தமிழர் புனர்வாழ்வுக் கழகம்' கொடுக்கும் கஞ்சியை நம்பியே பல்லாயிரக்கணக்கானோர் வாழ்ந்து வந்தனர்.

இப்போது இரவுத்தாக்குதல்கள் மோசமானவையாகவே இருந்தன. ஷெல் மழைகளுக்கு மத்தியிலும், துப்பாக்கிச் சன்னங்களின் வருகைகளுக்கு மத்தியிலும், முன்பு இரவில் நிம்மதியாகத் தூங்கிய பொழுதுகளும் இருந்தன. ஆனால் இப்போது அவ்வாறில்லை. இரவானதும் கடற்படையின் டோறாப்படகுகள், முள்ளிவாய்க்கால் கடலைச் சூழ்ந்து கொள்ளும். பாராவெளிச்சம் மற்றும் ஆர்ட்டி, ஆஞ்சிஞ்சிச் சூட்டாதரவோடு, கடற்படையினர் எறிகணைத்தாக்குதல்களை இரவிரவாகக் கடற்கரைப்பகுதிகளை நோக்கி நிகழ்த்துவர். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நாளொன்றுக்கு இறக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. கடற்படையினரின் கனோன் மற்றும் பீரங்கித்தாக்குதல்களுக்குப் பயந்து இரவுவாழ்க்கை மூடிய பங்கர்களுக்குள்ளேயேதான் கழிந்தது. கடற்படையினர் அடிக்கும் எறிகணைகளின் சத்தம் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி, அரண்களைத் தகர்த்து எறியக்கூடியவை. கடற்கரைப்பகுதிகளில் இருந்த சாதாரண மண்மூட்டை அகழிகளில் இருந்தவர்களின் நிலையை நினைத்தே பார்க்க முடியாது. எங்குதான் இனி நகர்வது? இதுதான் கடைசிப்பகுதி. எல்லோரும் இனி எங்கும் செல்லமுடியாது. இராணுவத்தினர் நெருங்கி விட்டனர். தாக்குதல்களின் அவலம் அதிகரித்து விட்டது. சித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து வைகாசியின் முதற்கிழமைகளில், முள்ளிவாய்க்கால் மண் இரத்தம் தோய்ந்த செம்புழுதியானது. எங்குபார்த்தாலும் அழுகைதான். ஆர்ட்டி, அஞ்சிஞ்சிச் ஷெல்களின் தாக்குதல்கள் பகலில் சாதுவான ஆறுதலைத்தந்தாலும், இரவில் கடற்படையினரின் பீரங்கித்தாக்குதல்கள் எம்மை நிலைகுலைய வைத்துவிடும். சுமார் இரண்டு கிழமைகள் முள்ளிவாய்க்கால் பகுதிக்குள்ளேயே, பல இடங்களில் இடம்பெயர்ந்திருந்தோம். ஓரிடத்தில் ஷெல்லடித்து அந்த இடத்தில் சாவு விழுந்துவிட்டால், அதில் இருக்காமல் கொஞ்சம் தொலைவில் சென்று இருப்பது, அங்கும் அவலம் நடந்துவிட்டால் இன்னொரு இடமெனப் பல இடங்கள் முள்ளிவாய்க்காலுக்குள்ளேயே இடம்பெயர்ந்து விட்டோம்.

முள்ளிவாய்க்கால் காளிகோவிலடிக்கு முன்னாள் உள்ள தென்னங்காணியில் பதுங்குகுழி அமைத்துத் தங்கியிருந்தோம். நாங்கள் மட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான மக்களும் எங்களைப்போலவே அப்பகுதியெங்கும் பரந்திருந்தார்கள். இரவானால் போதும் கடற்படையின் பீரங்கித் தாக்குதல்களுக்குப் பஞ்சமில்லை. ஒருநாள் இரவு, திடீரெனப் பீரங்கிகளால் இராணுவத்தினர், தாக்குதல்களைக் கடற்பரப்பிலிருந்து கரையை நோக்கி நடத்தியிருந்தனர். எல்லோரும் மூடுபங்கருக்கள் முடங்கிக்கொண்டோம். தலைக்குமேல் முழங்குவது போன்ற உணர்வு. எங்கள் பதுங்குகுழியெல்லாம் இடிந்துபோவதுபோன்ற உணர்வு. இனி நாங்கள் உயிரோடு இருக்கப்போவதில்லை என்பதே உறுதியாகிவிட்டது.

முள்ளிவாய்க்கால் கடற்பகுதியில் ஒரு பெரும் கப்பலொன்று இரண்டு வருடத்திற்குமுன்னர் கரையொதுங்கியிருந்தது. அது ஜோர்தான் நாட்டிற்குச் சொந்தமான பெரிய கப்பல். அந்தக்கப்பலில் இருந்து புலிகள், தாக்குதலை நடத்துகிறார்கள் என்ற எண்ணத்தில், கப்பல் தரைதட்டி நின்ற கடற்கரைப் பகுதிக்குக் கடற்படையினரும், விமானப் படையினரும் ஆரம்பத்திலிருந்தே தாக்குதலை மேற்கொண்டுவந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இப்போது வீரியமடைந்த நிலையில், முள்ளிவாய்க்கால் கடற்பகுதியை இரத்தவெள்ளமாக்கியது. எத்தனை ஆயிரம் உயிர்கள் துடிதுடித்து மடிந்தன. பல்லாயிரக்கணக்கானவர்கள் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தனர். மருத்துவ வசதிகளே இல்லாத நிலை. முள்ளிவாய்க்கால் கிழக்கிலே 'புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளிகளின்' உதவியோடு தற்காலிக மருத்துவசேவை அளிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் எத்தனை ஆயிரம் பேருக்குத்தான் மருத்துவ சேவையினை வழங்குவது. கையில் மருந்துகளே இல்லாத நிலைமை. காயப்படுபவர்கள் மருத்துவமனைக்கே போகாத நிலையில், வெறும் துணிகளால் காயங்களைச் சுற்றிக் கட்டியிருந்தனர். முள்ளிவாய்க்கால் பிரதான வீதியின் இருமருங்கிலும் சனங்களின் வாகனங்கள். அவ்வாகனங்களின் கீழே எத்தனையாயிரம் மக்கள் எறிகணைகளுக்காகப் பதுகிருந்தார்கள். காலில்லாதவர்கள், கைகளற்றவர்கள், பார்வையிழந்தவர்கள், குடல்கிழிந்தவர்கள், கந்தகத்தீயில் கருகிப்போனவர்கள், குண்டுச்சன்னங்கள் துளைத்து வெளியேறாதபடி இருந்தவர்கள், பிய்ந்து போன பிஞ்சுகள், முடமாகிப்போன முதியவர்களெனப் பல இலட்சம் மக்கள் முள்ளிவாய்க்காலின் பூமியில் வானதிரக் குழறினார்கள்.

முள்ளிவாய்க்கால் கடற்கரைப்பகுதியில் இருந்து நந்திக்கடல் வரையும் மக்கள் பரவிக்கிடந்தார்கள். நந்திக்கடற்கரையில் இருந்தவர்கள், நந்திக் கடலில் தம்தேவைகளை நிறைவேற்றிக்கொண்டார்கள். அங்குதான் எல்லோரும் குளிப்பதும், முகங்கழுவுவதும், மலங்கழிப்பதும், மலங்கழுவுவதும், மீன்பிடிப்பதும், உடுப்புத்தோய்ப்பதுமாகத் தம்செயற்பாடுகளைச் செய்தார்கள். முள்ளிவாய்க்கால் கடற்கரைப் பகுதியில் இருந்த நாங்கள், கடற்படையின் பீரங்கித்தாக்குதல்களுக்கு நிலைகுலைந்து, முள்ளிவாய்க்கால் பிரதான வீதிக்கு மறுபக்கமுள்ள நந்திக் கடற்கரையில் ஒருகிழமை தங்கியிருந்தோம். அங்கும் தாக்குதலுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமே இல்லை. இரவானதும் நந்திக்கடலின் இக்கரையில் இருந்து அக்கரையைப் பார்த்தால், கோயில் திருவிழாவிற்குக் கட்டியிருக்கும் வண்ணக்கலர்கள் கொண்ட நீண்டமின்குமிழ்கள், நந்திக்கடல் நீளத்தையும் அழகாக்கும். இக்கரையில் நாங்களும் அக்கரையில் இராணுவமும் நிலைகொண்டதால், புலிகளின் முன்னேற்றத்தை அவதானிக்க அக்கரையின் நீளத்திற்கும் மின்குமிழ்களை இராணுவத்தினர் ஒளிரவிட்டார்கள். இந்தக்காட்சியைப் பார்க்கும்போது, வற்றாப்பளைக் கண்ணகியின் வைகாசிப்பொங்கல் காட்சியே நினைவுக்கு வந்து போகும். போராளிகளோ சிறிய வள்ளங்களில் சென்று, அக்கரையிலுள்ள இராணுவ முன்னரங்குகளுக்குத் தாக்குதல்களை இரவுகளில் நடத்துவதுண்டு. அப்படி ஏதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டால், அன்று இரவு எறிகணைகளின் தாக்குதல்கள் நான்கு புறத்திலிருந்தும் நிகழ்த்தப்படும். புதுக்குடியிருப்புப்பகுதி, முள்ளிவாய்க்கால் கடற்பகுதி, முல்லைத்தீவுப்பகுதி, நந்திக்கடலின் அக்கரையில் உள்ள கேப்பாப்புலவு முதலிய நான்கு திசைகளிலிருந்தும் துப்பாக்கிச்சூடு, ஆர்ட்டி, அஞ்சிஞ்சி, பொஸ்பரஸ் வெடிகுண்டுகள், கொத்துக்குண்டுகள் என்று எல்லாவகையான தாக்குதல்களும் செறிவாகவே நடத்தப்படும். அப்போதெல்லாம் ஒருநாளுக்குப் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் கொல்லப்படலாயின. அஞ்சிஞ்சித்தாக்குதல்கள் இப்போதெல்லாம் வெகுதீவிரமாகவே நடத்தப்பட்டுக்கொண்டிருந்தன. இறந்துபோனவர்களைத் தவிர ஏனையோர் பதுங்குகுழிகளிலேதான் முடங்கிக் கிடந்தனர். விழுகின்ற எறிகணைகள் மக்களின் தலைகளிலேயேதான் விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. அதிஷ்டமுள்ளவர்கள் மாத்திரமே எறிகணைக் குண்டுச் சிதறல்களிலிருந்தும், துப்பாக்கிச் சன்னங்களிலிருந்தும் தப்பினார்கள்.

காயப்பட்டவர்கள், மருத்துவக் கவனிப்பாரற்றுப் புழுக்கள் நெளிந்த புண்களோடு சிதறிக்கிடந்தார்கள். காயத்திற்குமேல் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் காயப்பட்டு இறந்துபோனவர்கள் பல்லாயிரம். நந்திக்கடற்கரையிலும் தாக்குதல் உக்கிரம் பெற்றதால், வட்டுவாகல் நோக்கிப் பயணித்தோம். எறிகணைகள் பொழியப்பட்டுக்கொண்டேயிருந்தன. வரண்டு இறுகிப்போய்க்கிடந்த வட்டுவாகல் விடத்தல் வெளிகளில், பதுங்குகுழிகளை வெட்டுவதே மிகவும் கடினம். இந்த நிலத்தில் விழும் எறிகணைகள் வெடிக்காமல் தப்புவதில்லை. அந்தளவிற்கு நிலம் உரமேறிப்போயிருந்தது. நாய்களுடன், மாடுகளுடன், மனிதர்களும் அந்த நந்திக்கடல் – வட்டுவாகல் வெட்டைகளில் இறந்து கிடந்தனர். அந்தப் பிணங்களைத் தின்பதற்கு ஒரு ஈக்குருவிகள் கூட வானத்திலே இப்போது பறக்கவில்லை. கந்தகத் தீப்புகையில் வன்னிக் காடுகளிலிருந்த பறவைகள் எங்குதான் இடம்பெயர்ந்திருக்குமோ? என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. செத்தபிணங்கள் அழுகிப்போயின. வட்டுவாகல் பூமிதான் ஈழத்தமிழர்களின் கடைசி அடைக்கலம். இராணுவம் இப்போது சுமார் இரு கிலோமீட்டர் பரப்புக்குள் எல்லோரையும் முடக்கிவிட்டது. சாவுகளே மலிந்தன. போராளிகள், போராட ஆயுதங்களின்றியும், வலுக்குறைந்தும் ஆங்காங்கு நின்ற விடத்தல் மரங்களுக்குக் கீழே யோசித்தபடி இருந்தனர். அவர்களின் மரபு ரீதியான இராணுவ உடைகளில் அவர்களைக் காணக்கிடைக்கவில்லை. சிவில் உடைகளில், இடுப்பில் ஒரு சறம் கட்டியபடி வோக்கிரோக்கியுடனும், சிறிய இயந்திரத்துப்பாக்கிகளையும் வைத்துக்கொண்டு நின்ற காட்சிகளை மறந்துவிடமுடியாது.

வட்டுவாகலில், பனங்கூடல் ஒன்றிலிருந்த பதுங்குகுழியில் தங்கியிருந்தபோது, களஞ்சியப்படுத்தியிருந்த உணவுப்பொருட்களைக் கொண்ட கன்ரைனர் வாகனங்களை இயக்கம் திறந்து விட்டது. பெரும் கடைக்காரர்களின் இருப்பில் இருந்த உலருணவுகளும் இப்போது கைவிடப்பட்டன. இதனை அறிந்த சனங்கள் அவ்விடத்திற்குச் சென்று உலருணவுகளை அள்ளிவந்தார்கள். இடம்பெயர்ந்து நாலைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களாகப், பட்டினியில் கிடந்த சனத்திற்கு இது பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

"அப்பா.. சனங்களெல்லாம் கடலை, பருப்பெண்டு எடுத்துக்கொண்டு வருதுகள்... உதில எங்கயோ இயக்கம் களஞ்சியப்படுத்தி வச்சிருந்த லொறியை திறந்து விட்டிற்றாங்களாம்... அதுதான் சனமெல்லாம் உங்கயிருந்து எடுத்துட்டு வருதுகள். இப்பத்தான் ஒரு அண்ணை சொல்லிக்கொண்டு போறார்.. நான் என்னென்டு பாத்திட்டு வாறன்"

என்று கூறிவிட்டுச் சனக்கூட்டம் நகர்ந்த திசையை நோக்கி நானும் பயணித்தேன். எதைச்சொல்ல? புலிகளுடையவை மட்டுமன்றி வீதியோரங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்ட அனைத்துப் பொருட்களும் கைவிடப்பட்டிருந்தன. ஆனாலும் உணவுப்பொருட்களை மட்டுமே மக்கள் அள்ளிச்சென்று கொண்டிருக்கிறார்கள். எறிகணைகளும், துப்பாக்கிச் சன்னங்களும் வந்துகொண்டிருந்தாலும், சனங்களுக்கு அவை பெரியதாகத் தெரியவில்லை. நானும் ஓடிச்சென்று பார்த்தேன். எள்ளு, கடலை, பருப்பு, சீனி எனத் தானியப்பைகள் கிழிக்கப்பட்டு அள்ளப்பட்டுக்கொண்டிருந்தன. ஆனால் மக்கள் அள்ளுவதை இரண்டாவது செயற்பாடாகவே செய்து கொண்டிருந்தனர். பட்டினியில் கிடந்தவர்களுக்கு அமிர்தம் கிடைத்துவிட்டதைப்போல அள்ளி, வாய் நிறைய அடைந்து தின்றுகொண்டிருந்தார்கள். அவ்வளவு பசி. நானும் எள்ளினை எடுத்து வாயில் அடைந்தபடி, சீனியையும் கிள்ளித் தின்றேன். பின்னர் அங்கு கிடந்த பைக்குள் சீனியையும், எள்ளையும், கடலையையும் ஒன்றாகப்போட்டு எடுத்து வந்தேன். புலிகளால் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட பொருட்கள் எல்லாம் மக்களுக்காகத் திறந்துவிடப்பட்டன. வியாபாரத்துக்கென மக்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டிருந்த அனைத்துப் பொருட்களும் இப்போது கைவிடப்பட்டுவிட்டன.

தமிழீழ வைகப்பகத்தின் சேமிப்புக் கன்ரைனரைப் போராளிகள் மக்களுக்காகத் திறந்து விட்டுள்ளனர் என்று கூறிப் பலர் அங்குமிங்கும் ஓடினர். ஆனாலும் தொண்ணூறு வீதமானவர்களுக்குப் பணமும், பொருளும் கண்ணுக்குத் தெரியவில்லை. அவை இப்போது மதிப்பிழந்து காண்பாரற்றுக் கிடந்தன. அவையிருந்து என்ன பயன்? உயிரை இழக்கும் தருணங்களில் உணவைத்தவிர எமக்கு ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை. எல்லாவற்றையும் அவதானித்தபடி இருப்பிடத்தை நோக்கி விரைந்தேன். இரண்டு, மூன்று நாட்களாக அரைகுறை வயிற்றோடு இருந்ததால், எலும்புகள் வெளித்தெரியும்படி புடைத்திருந்தன. திடீரென்று எள்ளையும், சீனியையும் வயிறுநிரம்ப உண்டதால் மயக்ககுணமாக வந்தது. அருகில் இருந்த வாகனத்துக்குக்கீழே போய்ப் படுத்துக்கொண்டேன். எனக்கருகில் வயதுபோன ஒரு கிழவனின் உடல் ஈமொய்த்தபடி கிடந்தது. அவர் இறந்து நான்கைந்து நாட்கள் கடந்திருக்குமென நினைக்கிறேன். அருகருகே வேறு சிதைந்து அழுகிய உடல்களும் கிடக்கின்றன. அந்தக் கிழவனுக்கு அருகில் இறந்துபோன நாயொன்றும் உடல் பொருமிக்கிடந்தது. கிழவன் கண்ணாடி அணிந்திருக்கிறார். அவரின் உடல் பொருமிக் கிடக்கிறது. அவர் அணிந்திருந்த கண்ணாடி அவரின் முகத்துக்குள் புதைந்து கிடக்கும்படியாக அவரின் முகம் பெருத்துப் பொருமிவிட்டது. சிறிது நேரம் அவ்விடத்தில் இருந்துவிட்டு, மீண்டும் எழுந்து நடக்கத்தொடங்கினேன். கால்களுக்குள் பிணங்கள் கிடக்கின்றன. அவற்றினைக் காலால் மிதித்துவிடக்கூடாதென்று நினைத்தபடி நடந்தாலும், என்னையறியாமலேயே பல பிணங்களை மிதித்து ஏறிக்கடந்தே நகரவேண்டியிருந்தது. பிணங்களோடு பிணங்களாகக் காயப்பட்டவர்களும் நகரப் பலமின்றிப் பரவலாகக் கிடந்தனர். போராளிகளும் சிவில் உடைகளில், அங்குமிங்கும் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாக யோசித்தபடியேயிருந்தனர். அடுத்து என்ன நடக்கப்போகிறது? என்ற கேள்வியே அவர்களின் மனதில் ஓடிக்கொண்டிருக்க வேண்டும். சனங்கள் அரிசி, கோதுமை, சீனி எனக் கிடைத்த பொருட்களை அப்படியே பச்சையாக உண்டுகொண்டிருந்தனர்.

மாத்தளனில் நாங்கள் இருக்கும்போது நடந்த சம்பவமொன்று இப்போது நினைவுக்கு வருகிறது. போராளிகள், காயப்பட்ட போராளிகளுக்காகக் குருதிசேகரித்துக்கொண்டிருந்தார்கள். குருதித்தானம் செய்பவர்களுக்கு இரண்டு கிலோ மாவும், ஒரு கிலோச் சீனியும் தருவதாகவும் அறிவித்திருந்தார்கள். இதை அறிந்த சனங்கள் உணவுக்கான ஆசையில், குருதியை வழங்கிவிட்டு அவ்வுணவுகளை வாங்கி வந்தார்கள். அச்சூழலில் உணவு இன்மையால் மக்களிடம் இரத்தமே இருக்கவில்லை. சில சமயம் காயப்பட்டால்கூட எங்களுக்கு யார் இரத்தம் கொடுப்பார்கள்? இந்தச் சிந்தனையிலேயே அதிக சனங்கள் இரத்தம் கொடுக்கவில்லை. ஆனால் எனக்கு நல்ல சாப்பாடு உண்ணவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. உணவுண்டு எத்தனை மாதங்களாகிவிட்டன? இப்போதெல்லாம் உப்புக் கஞ்சியும் அவ்வளவாகக் கிடைக்காத நிலையில், ஒருகப் கஞ்சிக்குள் ஒன்பது கப் தண்ணீர் கலந்து குடித்துக்கொண்டே பசியைத் தணிக்கவேண்டியிருந்தது. குருதிக்கொடை செய்தால் இரண்டு கிலோ மாவும், ஒருகிலோச் சீனியும் கிடைக்குமென்ற செய்தியை நானும் அறிந்துவிட்டேன்.

“அப்பா.. அப்பா... வலைஞர் மடத்தில ரெத்தம் குடுக்கிறாக்களுக்கு மாவும், சீனியும் குடுக்கிறாங்களாம்.. நீங்க குடுத்திட்டு வாங்கவனப்பா.. பசிக்குதுப்பா.. குடுத்தா... மாத் தருவாங்கள். றொட்டி சுட்டுத் தின்னலாம்பா... போங்கவன் பா...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி உனக்கென்ன பைத்தியமோ?... லூசுமாதிக் கதைக்கிறாய்.. அப்பாவே ரெத்தமில்லாமக் கருவாடு போல கிடக்கிறார்... உவரை ரெத்தம் குடுக்கச் சொல்லுறாய்... அடிக்கிற ஷெல் எப்ப தலையில விழுமெண்டு தெரியா.. சிலநேரம் காயப்பட்டா என்ன செய்யிறது.... பேசாம இரு.. அப்பா..பாவம்.."

அம்மாவின் பேச்சு என்காதுகளில் விழுகிறது. எனக்கு அந்த நேரங்களில் உணவு மட்டுமே பெரிது என்ற நிலை. அவ்வளவு பசி. பசி இங்கு பாசத்தையும் மறைத்துவிட்டது. என்ன செய்தாவது அப்பாவை இரத்தம் கொடுக்கவைத்து, றொட்டி சாப்பிட வேண்டும் என்ற சிந்தனையே மனதில் ஓடிக்கொண்டிருந்தது. அதனால் அப்பாவைச் சும்மாயிருக்க நான் விடவில்லை...

"அப்பா பசிக்குதப்பா... ரெத்தம் குடுத்தீங்க எண்டா ஒரு கிழமைக்குச் சாப்பிடலாம்பா..."

அப்பாவுக்கு என் வார்த்தைகள் எட்டிவிட்டன. பிள்ளைகள் பசியால் அழத் தந்தை பார்த்துக்கொண்டிருப்பாரா?.. ஒன்றும் சொல்லவில்லை... ஏதோ யோசித்தபடி கந்தசாமியண்ணையையும் அழைத்துக் கொண்டு போனவர், சில மணிநேரத்தின் பின்பு கைகளில் பொதியோடு வந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பாவால் என் பசியைப் பார்க்க முடியவில்லை. இரத்தம் கொடுத்துவிட்டுத்தான் வந்திருக்கிறார். வந்தவர் ஒரு செம்புத் தண்ணீரை வயிறு நிறையக் குடித்துவிட்டு,

"தம்பி றொட்டி சுடச்சொல்லி அம்மாவைச் சொல்லு... எத்தின நாளைக்குத்தான் பட்டினி கிடக்கிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கிறதைச் சாப்பிட்டிற்று சாகிற நேரம் செத்துபோறதுதானே....”

அப்பாவின் வார்த்தைகளில் உண்மை தெரிந்தது. எப்போதும் எங்களுக்கு என்ன நடக்குமென்றே தெரியாத நிலையில், மரணம் மலிந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அம்மா ஆரம்பத்தில் என்னைப் பேசினாலும், உணவுப் பொதியைக் கண்டவுடன் அவரின் முகம் மலர்ந்தது. தன் குடும்பத்திற்காக இப்படி எத்தனை அப்பாக்கள் அந்த மரணங்கள் மலிந்தபொழுதிலும், தன்னைப்பற்றி அக்கறை கொள்ளாமல் இரண்டிகிலோ மாவும், ஒருகிலோச் சீனியும் வாங்கியிருப்பார்கள்?.... இப்போது நினைக்கையிலும் ‘தந்தையைப் போல் ஒரு தெய்வம் இல்லை இந்தப் பூமியிலே’ என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

இப்போது பதுக்கி வைக்கப்பட்ட கோதுமைமாவும், கடலையும், அரிசியும், சீனியும் மக்களுக்காகத் திறந்து விடப்பட்டிருக்கின்றன. மக்கள் சும்மாயிருப்பார்களா? என்று நினைத்துப்பாருங்கள். இப்போது எல்லோருடைய கைகளிலும் உலருணவுகளே இருக்கின்றன. மக்கள் பதுங்குகுழிகளில் பதுங்கிக்கிடப்பதை மறந்து, வெளியிலிருந்து உண்டுகொண்டிருக்கிறார்கள். நானும், எடுத்துச் சென்ற எள்ளும், சீனியும் கலந்த பொதியை அப்பாவிடம் கொடுத்தேன். அப்போது அவர்களின் மகிழ்ச்சியைப் பார்க்கமுடியவில்லை. எத்தனை நாட்களுக்குப் பிறகு இப்படி ஒரு சாப்பாடு கிடைத்திருக்கிறது. வாங்கிய பொழுதே அதனைப் பகிர்ந்து எல்லோருக்கும் அப்பா கொடுத்தார். எல்லோரும் இரண்டு பிடி மட்டுமே உண்டிருப்பார்கள். அதற்குள் வயிறு நிரம்பிவிட்டது. ஐந்தாறு மாதங்களாகச் சோறே சாப்பிடாமல், கிடைக்கும் கஞ்சியை ஒருநேரமோ, இருநேரமோ குடித்துவந்த எமக்கு, இப்போதெல்லாம் குடல் சுருங்கிவிட்டது. நான் ஒருபிடி எள்ளை எடுத்து வாய்க்குள் போட்டபடி, எழுந்து நின்று அருகில் நடக்கும் புதினங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக்கொண்டிருந்தேன். துப்பாக்கிச் சன்னங்கள் வந்துகொண்டிருப்பதால் எல்லோரும் குனிந்தபடியே நடந்துகொண்டிருந்தனர். சாவைக்கண்டு அஞ்சாதவர்கள் என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று நிமிர்ந்து நடந்தார்கள்.

நான் சின்னப்பையன் என்பதால் அவ்வளவாக உயரமில்லை. எனக்கருகே இரண்டு மீட்டர் தூரத்தில் என் வயதை ஒத்த சிறுமியும் நின்று ஏதோ உண்டுகொடிருந்தாள். திடீரென "டச்ச்ச்ச்.." என்ற சத்தம் என்காதில் கேட்டது. அருகிலிருந்தவர்கள் குழறத்தொடங்கினார்கள். திரும்பிப்பார்த்தேன் அந்தச் சிறுமியின் தலைப்பகுதியின் ஒருபக்கத்தின் தசைத்தொகுதி சிதறிப்போயிருந்தது. அவளின் உயிர் போய்விட்டது. அவள் இன்னும் நிலத்தில் விழவில்லை. சுமார் நான்கு செக்கன்களின் பின்பு நிலத்தில் சரிந்தாள். இதைப்பார்த்த எனக்குத் தலையே விறைத்துவிட்டது. கண்ணுக்குமுன்னால் எத்தனையோ எறிகணைகள், விழுந்து எத்தனையோ பேர் துடிதுடித்து இறந்துபோனதையும், கிபீர்த் தாக்குதலில் அகப்பட்டபோது பலரின் உயிர் போன தருணங்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால் இப்போது துப்பாக்கிச் சன்னம் தலையில் பட்டு ஒருபகுதி இல்லாமலே போய்விட்ட நிலையிலும், அவள் சுமார் நான்கைந்து செக்கன்களுக்குப்பிறகு சரியும் காட்சியை இப்போதுதான் முதலில் பார்க்கிறேன். துப்பாக்கிச் சூடுகளும், சன்னங்களின் வருகைகளும் மலிந்திருந்தாலும் என் கண்ணுக்கு முன் நிகழ்ந்த இக்காட்சி, எனக்கு மனதில் ஆறாத வடுவாய்ப் படிந்துவிட்டது. அந்தச் சன்னம் எனக்குப் பட்டிருந்தால், நானும் அவளைப்போல்தானே இறந்திருப்பேன் என்ற சிந்தனையே என் மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

"தம்பீ... நீ திருந்த மாட்டாய்... பார்த்தியா.. இது உனக்கு நடந்திருந்தா இப்ப நாங்கள் என்ன செய்திருப்பம்?.... இனியாவது குனிஞ்சு கொண்டு திரி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் பேச்சு என்காதில் ஒலித்தது. சுய நினைவுக்குத் திரும்பியவனாய் நின்ற இடத்திலேயே குந்திவிட்டேன். அந்தச் சிறுமியின் உடலை மடியில் வைத்துக்கொண்டு தந்தை புலம்புகிறார். ஏற்கனவே காயப்பட்டுப்போன தாயார், அவளின் உடலைத் தழுவியழ முடியாமல் ஒப்பாரி வைக்கிறாள். அவர்களோடு இருந்த இன்னும் சில உறவுகள் எதையோ உண்டவண்ணம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

நாட்கள் நெருங்கி விட்டன. இராணுவமும் நெருங்கிவிட்டது. வைகாசி. 15ஆம் திகதி. காலை தொடங்கிய முழுமூச்சான அஞ்சிஞ்சித்தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்துகொண்டிருந்தனர். எங்கும் இறந்த உடல்களையும், காயப்பட்டு உருக்குலைந்து போன உறவுகளையுமே காணமுடிந்தது. இந்நிலையில் மக்கள் பதுங்குகுழிகளுள் முடங்கிக் கிடக்கவில்லை. சனங்கள் எல்லாம் நந்திக்கடலால் இராணுவத்தினரிடம் செல்லும் எண்ணத்தில் பயணித்துக்கொண்டிருந்தனர். பலர் என்ன செய்வதென்று தெரியாமல், சனங்கள் போகும் திசைநோக்கிப் பதுங்கிப் பதுங்கி நகர்ந்துகொண்டிருந்தனர். வாகனங்களின் ரியூப் மற்றும் மோட்டார் சைக்கிளின் ரியூப் முதலியவற்றினைப் பயன்படுத்திப் பலகுடும்பங்கள் நந்திக்கடலுக்குள்ளால் இராணுவத்தினரிடம் சென்றனர். நாங்களும் இராணுவத்தினரிடம் செல்வதற்கு எடுத்த இரண்டாவது முயற்சி இது.

நந்திக் கடற்கரையாக வட்டுவாகல் பாலத்தடிக்குச் சென்று விட்டோம். கரைகளிலே மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. ஆர்பீச்சி எறிகணைகள், கரை நிலங்களில் புதையுண்டு வெடிக்காமல் கிடந்தன. பாலத்தின் அருகில் உள்ள இக்கரையிலிருந்து அக்கரைக்குச் சுமார் 200 மீற்றர் இடைவெளி இருக்கும். காப்பரண்களிலிருந்து இராணுவம், ஒலிபெருக்கியில், இத்தொடுகடலைக் கடந்து வரும்படி அறிவித்துக்கொண்டிருந்தது. அத்தோடு சிலர் இயந்திரத்துப்பாக்கியை நீட்டி ஏனைய பக்கங்களுக்குச் சுட்டுக்கொண்டிருந்தார்கள். போராளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுவாகல் பாலத்திற்கு இக்கரையிலும், இராணுவத்தினர் பாலத்திற்கு அக்கரையிலும் முன்னரங்குக் காவலரண்களை அமைத்திருந்தனர். நாங்கள் நின்ற இடத்தில் பெரிய மரம் ஒன்று கரையில் இருந்தது. அந்த மரத்திலிருந்து பெரிய கயிறொன்று இராணுவத்தின் அரண்நோக்கிச் சென்றது. பெரும்பாலும் ஆழஊடுருவும் இராணுவத்தினர், இரவுகளில் இந்தப்பகுதிக்கு வந்து சென்றிருக்கலாம் என்றே எல்லோரும் பேசிக்கொண்டார்கள். போராளிகளின் அரண் இவ்விடத்தில் இல்லாமையால் இராணுவம் நிச்சயம் வந்து வேவு பார்த்திருக்கலாம். இராணுவத்தினரின் நடமாட்டம் துல்லியமாகத் தெரிகிறது. ஆயுதங்களால் புலிகளின் அரண்களை நோக்கித் தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள். சனங்கள் மரத்தில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்து நகர்ந்துகொண்டிருந்தனர். ரியூப் வைத்திருந்தவர்கள் அதனைப் பயன்படுத்திக் கயிற்றின் துணையோடு அக்கரைக்குச் சென்று, இராணுவத்தினர் வைத்திருந்த சாதாரண இயந்திரப்படகினை இக்கரைக்குக் கொண்டுவந்து, இங்கிருந்த தம்முறவுகளை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். இதனால் ஆயிரக்கணக்கான சனங்கள் கழுத்தளவுத் தண்ணீர்வரைக் கயிற்றைப்பிடித்துக்கொண்டு கடலுக்குள் இறங்கி விட்டார்கள். நாங்களும்தான். திடீரெனப் போராளிகள், தங்கள் அரண்களிலிருந்து இராணுவ அரணைநோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். அவர்களும் சுடத்தொடங்கினர். இருபக்கங்களிலிருந்தும் தாக்குதல்கள் வலுவாக நீடித்தன. மக்களுக்கு இது ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. எப்படியோ இராணுவத்தினரிடம் சரணடைந்து விட்டாலே போதும் என்ற இலக்குடன் நகர்ந்துகொண்டிருந்தார்கள். அப்போது,

“ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்....டும்ம்ம்ம்ம்”

நாங்கள் நின்ற கழுத்தளவுத் தண்ணீருக்குள் ஷெல் விழுந்து முழங்குகின்றது. பலநூற்றுக் கணக்கானோர் உயிரிழந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயப்பட்டவர்கள் பலர் நீருக்குள் அமிழ்ந்து இறந்துபோயினர். எஞ்சியவர்கள் மறுபடியும் கரையை நோக்கி ஓடிவந்தனர். குண்டு வெடித்தபோது என்னைக் கடல்த்தண்ணீர் மூழ்கடித்துவிட்டது. குண்டுவெடிப்பின் அதிர்ச்சியில், தண்ணீர் சீறற்று உயர்ந்து தாழ்ந்ததால் அனைவரும் நீருக்குள் அமிழ்ந்து எழுந்தனர்.

"ஐயோ.. அம்மாவைக்காணேல.. என்ரை அம்மா ..அம்மா.."

ஒரு பெண்ணின் அழுகுரல் ஒலித்துக்கொண்டிருந்ததுடன், பலரைக் காணாத நிலையில் அவர்களின் உறவுகள், ஒப்பாரி ஓலத்துடன் தண்ணீருக்குள் தேடத்தொடங்கினர்.

"இயக்கந்தான் ஆர்பீச்சிச் ஷெல்லடிச்சிருக்கிறான்... ஆமீற்ற சனங்கள் போறத நிப்பாட்டுறதுக்குத்தான் இந்த வேலையச் செஞ்சிருக்கிறாங்கள்"

என்று ஒரு கிழவன் கூறியபடி தன்னுடைய குடும்பத்தை மீண்டும் அழைத்துக்கொண்டு, வட்டுவாகல் விடத்தல் வெட்டைப் பகுதியைநோக்கிச் சென்றுகொண்டிருந்தார். நாங்களும் தண்ணீருக்குள் தாழ்ந்து எழும்பிக் கரையை நோக்கி ஓடிவந்தோம். நந்திக்கடல் கரைகளில் எறிகணைகள் வெடித்ததால் ஏற்பட்டிருந்த குழிகளுள் விழுந்து எழுந்தபடி கரையைக் கடந்தோம். பின்புதான் எல்லோரும் வந்துவிட்டோமா? என்று பார்த்தபோது, கந்தசாமியண்ணையையும், அவரது இரண்டு பிள்ளைகளையும் காணவில்லை.

"ஐயோ கந்தசாமியக் காணேல.. ரெண்டு பிள்ளையளையும் அவன்தான் வச்சிருந்தவன்... உதுக்குள்ள எங்கயும்தான் ஓடியிருப்பான்... ஒருக்காப் பாத்திட்டு வாங்கோப்பா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அம்மா கூறி முடிப்பதற்குள், அப்பா தொடர்ந்தார்.

"கந்தசாமி... ஆமி அனுப்பின படகுக்குள்ள பெடியனோட ஏறிட்டான். பெட்டைய நான்தான் தூக்கிக் குடுத்திட்டு, உங்களக் கூட்டிக்கொண்டு போவம் எண்டு வாறதுக்குள்ள ஷெல் விழுந்திட்டு... வோட்ட அவங்கள் எடுத்துட்டுப் போட்டாங்கள். அவன் ஆமீற்றப் போட்டான்..."

எல்லோரும் அப்பாவின் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றோம். எல்லோருக்கும் ஒருவித சந்தோசம் இருந்தாலும், கந்தசாமியண்ணை இல்லாத பயணம் ஒருவித மனக்கவலையையும் தந்தது. இடப்பெயர்வு முழுமைக்கும் பக்கத்திலேயே எங்களோடு இருந்து பயணித்து, இடையில் மனைவியைப் பறிகொடுத்தும், அப்பாவின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நின்று, இறுதிவரையும் எங்களோடே பயணித்தவர். இப்போது எங்களைவிட்டுப் பிரிந்து ஆமியிடம் போய்ச்சேர்ந்தது எம்மைத் தனிமைப்படுத்தியது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

"சரி சரி இதில நிக்கிறது சிக்கல்.. றோட்டுக்கு அங்காலப்பக்கம் போவம் வாங்கோ... வரேக்க கவனமாக் கீழ பாத்து நடவுங்கோ... குப்பிகளெல்லாம் அங்கயிங்க சிதறுப்பட்டுக் கிடக்கு.. உழக்கிடாம வாங்கோ.."

அப்பாவின் பேச்சைக்கேட்டுக் குனிந்தபடி நகரத்தொடங்கினோம். அஞ்சிஞ்சிச் ஷெல்களின் வெடிப்புக்களே நிகழ்ந்து கொண்டிருந்தன. துப்பாக்கிச் சன்னங்களுக்கும் குறைவில்லை. இராணுவத்தின் பீரங்கித்தாக்குதல்களும் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. வட்டுவாகலின் நந்திக்கடல் வெட்டையானது, விடத்தல் மரங்களால் சூழ்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிலம் வரண்ட உப்பள நிலமாக இறுகிப்போய் இருந்தது. இராணுவத்தினரின் தாக்குதல்களினால் வந்து விழுந்த ஆர்பீச்சி எறிகணைகள் பலநூற்றுக் கணக்காக, வெடிக்காமல் நிலத்தில் குத்தப்பட்டு இறுகிக்கிடந்தன. ஆங்காங்கு அஞ்சிஞ்சி, ஆர்ட்டிச் ஷெல்களின் எச்சங்களும் பரவிக்கிடந்தன. அவற்றையெல்லாம் கடந்தபடி கால்கள் நடந்துகொண்டிருந்தன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

விடத்தல் மரங்களுக்குக் கீழே சிவில் ஆடைகளில் பெண், ஆண் போராளிகள் மூவர், நால்வரென இயந்திரத்துப்பாக்கிகளோடு நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களின் இடுப்பில் சாறம் கட்டப்பட்டிருந்தது. கழுத்தில் குப்பி அணிந்திருந்தார்கள். கைகளில் வோக்கிரோக்கிகளும் இருந்தன. அடுத்த கட்டம் என்ன நடக்கும்? என்ற ஏக்கத்தோடு அவர்கள் நின்றிருந்தார்கள். மேல் இடத்திலிருந்து வரும் உத்தரவுகளுக்காக அவர்கள் காத்து நிற்பது தெரிந்தது. எல்லாவற்றையும் அவதானித்தபடியே நகர்ந்துகொண்டிருந்தோம்.

ஒரு விடத்தல் மரத்திற்குக் கீழே ஒரு இயக்க அண்ணாவும், இரண்டு இயக்க அக்காக்களும் ஏதோ செய்துகொண்டிருந்தார்கள். அருகில் வந்தவுடன் அதனைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. ஒரு பத்துவயது மதிக்கத்தக்க சிறுவன். அவனுடைய கால்கள் சிதறுண்டு போய் இருந்தன. கைகளைக் காணவில்லை. முகம் உருக்குலைந்திருந்தது. அவனுடைய கால்களின் தொடைகள் சிதைந்துபோய், வெண்மையான நார்கள் தும்புபோல் தொங்கியபடிக் காணப்பட்டன. நான், பள்ளிக்கூடத்தில் விஞ்ஞானப்பாடத்தில் தசைநார்கள் பற்றிப் படித்திருக்கிறேன். அந்தத்தசை நார்கள் அவைதானோ? என்று நினைத்துக்கொண்டேன். அவனுடைய உடல் இவ்வளவு படுகாயங்களுக்கு உட்பட்டாலும், வெளியேறுவதற்கு உடலில் குருதி இருக்கவில்லை. ஆனாலும் அவன் இறக்காத நிலையில் துடித்துக்கொண்டிருக்கிறான். அவன் நிச்சயமாகத் தப்பிவிடமாட்டான். ஏனெனில் அவனுடைய உடல் காப்பாற்ற முடியாத நிலையில் உருக்குலைந்து கிடந்தது. அவன் என்ன பாவம் செய்தானோ? தெரியவில்லை. அவனுடைய உயிர் இன்னும் போகவில்லை. வலியால் மயக்கமுற்ற நிலையில் முனங்கிக்கொண்டு கிடக்கிறான். அவனுடைய உறவுகளை அவ்விடத்தில் காணவில்லை. யாருமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயப்பட்ட நிலையில் அவனை அவனுடைய உறவுகள், இவன் தப்பமாட்டான் என்ற நிலையில் கைவிட்டுச் சென்றிருக்க வேண்டும்.

இந்தப்போர்க்காலம் மனிதனைச் சுயநலம் படைத்தவனாகவே மாற்றிவிட்டது. தன்னுடைய வயிறு நிரம்பினால் சரி என்ற சிந்தனையை இச்சூழல் தோற்றிவித்திருந்தது. அதே போலவே எல்லோரும், தமக்குத் துன்பம் நேர்ந்துவிடக் கூடாது என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இப்படி எத்தனை பேர் படுகாயமடைந்த நிலையில் உறவுகளால் கைவிடப்பட்டு இறந்திருப்பார்கள்? அச்சிறுவனின் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், அப்போராளிகள் அவனிடத்தில் கருணைகாட்டியிருக்கவேண்டும். அங்கு நின்ற இரண்டு பெண் போராளிகளும் அந்தச் சிறுவனை மடியில் கிடத்தி வைத்திருக்கிறார்கள். அந்த ஆண்போராளி, எதையோ அந்தச் சிறுவனின் காயங்களில் தூவிக்கொண்டிருக்கிறான்.

“அப்பா.. அப்பா.. உங்க பாருங்கோ.. அந்தப்பொடியனுக்கு உவையள் என்ன செய்யிறினமப்பா.. எதையோ காயத்தில போடுறினம்.. என்ன செய்யிறினமப்பா?”

“அந்தப்பெடியன் இனித் தப்பமாட்டான். உயிர்போகாமல் துடிச்சுக்கொண்டிருக்கிறான். அதுதான் உவையள் குப்பியை உடைச்சு அந்த மருந்தக் காயத்தில போட்டு, அவனைக் கருணைக்கொலை செய்யிறினம்... யார் பெத்த பிள்ளையோ வேகமாப் போய்ச்சேரட்டும்.

அப்பாவின் வார்த்தைகள், நான் முதலில் ஊகித்ததைத்தான் உறுதிப்படுத்தின. இப்படி எத்தனையாயிரம் பேர் சாவின்விளிம்பில் உயிர்போகாமல் காயப்பட்டுக் கிடக்கிறார்களோ? என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டேன். நந்திக்கடற்கரைப் பக்கமிருந்து வீதிக்கு மறுபக்கம் சென்றுவிட்டோம். சனங்கள் முக்கால்வாசிப்பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதிக்குள்தான் கிடந்தார்கள். இயக்கப்போராளிகளும், சனங்களோடு சனங்களாய்ச் சிவில் உடைகளில் நின்றுகொண்டிருந்தார்கள். இப்பகுதிக்குள் மரங்களும், பனை வடலிகளும் நிறைந்திருந்தன. ஒவ்வொரு மரங்களுக்குக் கீழும் தறப்பாழ்கள் கட்டப்பட்டிருந்தன. அவற்றுக்குக் கீழே சுமார் பத்து மீற்றர் நீளமும், ஐந்து மீற்றர் அகலம் கொண்டதும், மூன்று அல்லது மூன்றரையடி ஆழம்கொண்டதுமாகப் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்குள்தான் களமுனைகளில் விழுப்புண்ணடைந்த போராளிகள் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்வாறான ஒரு பதுங்குகுழியில் சுமார் முப்பது, நாற்பது போராளிகள் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். அந்தப்பகுதியில் காணப்படும் மரங்களுக்குக் கீழும் இவ்வாறான மெடிசின்கள் பல அமைந்திருந்தன. அதற்குள் இருக்கும் போராளிகள் நடமாடமுடியாதவர்களாகவே இருந்தனர். காலில்லாதவர்கள், இடுப்பிற்குக் கீழே இயங்கமுடியாதவர்கள், முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள், கண்தெரியாதவர்கள், உடலில் பாரியளவிலான விழுப்புண்ணடைந்தவர்களெனப் பல நூற்றுக்கும் மேற்பட்ட போராளிகள் இவ்வாறான பதுங்குகுழிகளில்தான் கவனிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். மருத்துவ வசதிகள் நூறுவீதம் இல்லாமையால், அவர்கள் வெறும் துணிகளையே காயங்களுக்கு மேலால் கட்டியிருந்தனர். அவர்கள் நாளுக்கு நாள் பலவீனமடைந்து சென்றுகொண்டிருந்தனர். எறிகணைகள் ஒரு பதுங்குகுழிக்கு மேல் விழுந்தால், அதற்குள் இருக்கும் அவ்வளவு போராளிகளையும் உயிரோடு பார்த்துவிடமுடியாது. அந்தளவிற்கு எறிகணைகளின் பாதிப்புக்கள் அமைந்திருக்கும்.

அன்று 16ஆம் திகதி மாலை ஐந்து மணியிருக்கும். சனங்கள் வட்டுவாகல் பாலத்தை நோக்கிப் பிரதான வீதியினூடாக இராணுவத்திடம் சரணடைவதற்குச் சென்றுகொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சனமெல்லாம் ஆமீற்றைப் போவுதுகள்.. எல்லோரும் வெளிக்கிடுங்கோ... எல்லாச் சனமும் போவுதுகள்"

என்றபடி யாரோ ஒருவர் கத்திக்கொண்டு ஓடினார். அதைக்கேட்ட நாங்களும் போகிற சனத்துக்குப்பின்னால் புறப்பட்டுவிட்டோம். போராளிகள் மறித்தும், சனங்கள் கேட்காமல் சென்று கொண்டிருந்தனர். நாங்களும் இயக்கத்தினைத் தாண்டிப் பதினைந்து மீற்றர் தூரம் சென்றிருப்போம். சனத்தை மறிப்பதற்காக முன்னரங்குகளில் நின்ற இராணுத்தைநோக்கிப் போராளிகள் துப்பாக்கிகளால் சுடத்தொடங்கினர். இதனால் இராணுவத்தினரும் பதில் தாக்குதலை மேற்கொண்டார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் எங்களுக்கு முன்னால் போய்விட்டதால், அவர்கள் இராணுவ முன்னரங்குப்பகுதியை அடைந்துவிட்டார்கள். நாங்களோ கடைசியாகச் சென்றதனால், தாக்குதல் தொடங்கியவுடன் நடுவில் மாட்டிக்கொண்டோம். எங்களுக்கு மேலால் இராணுவத்தை நோக்கிப் போராளிகள், மரங்களில் காப்பெடுத்தபடி இயந்திரத்துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டிருந்தனர். இறுதியில் இவர்களிடம் வேறு எந்த ஆயுதங்களும் இருந்ததாக நான் காணவில்லை. பத்து, இருபது மீற்றர்களுக்கு இருவர், மூவரென மரங்களில் காப்பெடுத்தபடி இராணுவத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தனர். இராணும் மிகப் பலம்பொருந்திய ஆயுதங்களை வைத்திருந்ததால் படுமோசமாகத் தாக்குதலை நடத்தியது. எங்களோடு கடைசியாக வந்தவர்கள் சுமார் ஐந்நூறு பேர்வரையிருக்கும். பலர் அத்தாக்குதல்களினால் எந்தப்பக்கம் ஓடுவது என்று தெரியாமல் சிதறி ஓடினர். இருபக்கத்தாக்குதல்களுக்கும் இடையில் சிக்குண்டு நூற்றுக்கும் மேற்பட்ட சனங்கள் கொல்லப்பட்டார்கள். பலநூறுபேர்வரை காயப்பட்டனர். காயப்பட்டவர்கள் பலர் தூக்குவாரின்றிக் கைவிடப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி...படுங்கோ படுங்கோ.. குப்பறப்படுங்கோ... இஞ்சேரண.. ரெண்டுபக்கமும் அடி தொடங்கீட்டு எழும்பினியளோ துலைஞ்சியள்.. காயப்பட்டா தூக்கவும் ஏலா... அப்பிடியே கிடவுங்கோ ... குப்பறக்கிடந்தா ஒண்டும் நடக்காது... கொஞ்சம் சூடு தணிஞ்சோடன திரும்பி ஓடுவம்"

அப்பாவின் எச்சரிக்கையான பேச்சு எங்களை வழிநடத்தியது. எங்களோடு அருகில் வந்தவர்கள் எல்லோரும் நிலத்தில் கிடந்தார்கள். சுமார் பத்து நிமிடங்கள் வரை துப்பாக்கித் தாக்குதல்களும், பீரங்கித்தாக்குதல்களும் வீரியமாகச் செயற்பட்டன. இடைநடுவில் எங்களோடு சிக்கிய பலரின் நிலை கவலைக்கிடமாக இருந்தது.

"உலகளந்த பிள்ளையாரப்பா... நடுவில மாட்டீற்றம்.. நீதானப்பா காப்பாத்தோணும்... எங்களுக்கு ஒரு கீறலும் வரக்கூடா... உனக்கு பள்ளிக்கூடம் போகேக்க, ஒவர்நாளும் பூ வைக்கிறனான். மறந்திடாத... எங்களை நீதான் காப்பத்தோணுமப்பா..."

நான் புதுக்குடியிருப்பு உலகளந்த பிள்ளையாரை மனதில் நினைத்துக் கும்பிட்டபடியே இருந்தேன். அம்மா, தங்கச்சியைக் கட்டிப்பிடித்தபடி ஒரு பள்ளத்தில் குப்பறக் கிடந்தார். சனங்களெல்லாம் செய்வதறியாது பயத்தில் சிதறுண்டு ஓடி, மண்ணிலே காயப்பட்டவர்களாகவும். பிணங்களாகவும் சரிந்து விழுந்தனர். பத்து நிமிடங்களின் பின், தாக்குதல்கள் ஓரளவு தணிந்தவுடன் மீண்டும் போராளிகளின் பக்கம் விழுந்தெழும்பி ஓடிவந்தோம். எங்களின் உயிர் போகாதது கடவுளின் அருளென்றே நினைத்து, மனதுக்குள் உலகளந்தவருக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிக்கொண்டேன். ஆமியிடம் போக முயற்சித்த மூன்று முயற்சிகளும் எங்களுக்குப் படுதோல்வியிலும், உயிர்ஆபத்திலுமே முடிந்தது.

மணியும் சென்று இருட்டிவிட்டது. அன்று இரவு துப்பாக்கிச் சூடுகளே அதிகம் கேட்டுக்கொண்டிருந்தன. இராணுவம் வட்டுவாகல் பாலத்தைத் தாண்டி வந்துவிட்டான். முள்ளிவாய்க்கால் பகுதிக்குள்ளும் இறங்கிவிட்டான். இப்போது முள்ளிவாய்க்கால் – வட்டுவாகல் ஆகிய இடங்கள் சந்திக்கும் நிலப் பகுதிக்குள்தான் சனங்களும், போராளிகளும் சுத்திவளைக்கப்பட்டிருக்கிறார்கள். இராணுவம் மிகவும் நெருங்கிவிட்டதால், எறிகணைத்தாக்குதல்கள் தற்போது ஓய்ந்துவிட்டன. ஏனெனில் அவர்கள் அடிக்கும் எறிகணைகள் அவர்களின் பகுதிக்குள்ளேதான் விழுந்து வெடிக்கும் நிலையிருந்தது. அந்தளவிற்கு இராணுவத்தினர் நெருங்கிவிட்டனர். தற்போது துப்பாக்கிச்சூடுகளும், சிறிய ரக எறிகணை வெடிப்புக்களும், பீரங்கிச்சூட்டுத் தாக்குதல்களுமே நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதனால் அன்றிரவு ஓரளவு அமைதி நிலவியதாகவே எங்களுக்குத் தோன்றியது. ஏனெனில் முன்னைய நாட்களில் எறிகணைகளின் மழைக்குள் பட்ட வேதனைகள் சொல்லிலடங்காது.

மறுநாள் 17 ஆம் திகதி விடிந்து விட்டது. துப்பாக்கிச் சூடுகள் மாத்திரமே இப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தன. கடற்கரைப் பக்கங்களில் இருந்து பெரிய தொடர் வெடிப்புச் சத்தங்கள் பல இடங்களில் கேட்டதுடன், பாரிய கரும்புகைமண்டலங்களும் எழும்பிக் கருமுகில்களாக வானத்தில் படிந்தன.

“அது இயக்கப்பெடியள் தங்கட வெடிபொருட்களஞ்சியங்களைச் சாச்பண்ணிக் கொழுத்துறாங்கள். ஆமீற்ற ஒண்டும் போய்ச்சேரக்கூடா எண்டு எல்லாத்தையும் அழிக்கிறாங்கள். அதுதான் உங்கால உப்பிடிச் சத்தமும் புகையுமாக்கிடக்கு.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ சிலர் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு, பக்கத்தில் நின்ற ஒரு அண்ணன் அப்பாவிடம் கூறினார். போராளிகள் பலர் தம் உறவுகளைச் சந்தித்துக்கொள்ள இக்குறுகிய போர்ப்பரப்பு ஏதுவாய் இருந்தது. ஆயுதங்களைப் போட்டுவிட்டும், உடைகளை மாற்றிவிட்டும் தம்தாய், தந்தையரோடும் உறவுகளோடும் அவர்களில் பலர் இணைந்து கொண்டனர். பெற்றோர் பலர் தம்மோடு வரமறுத்த பிள்ளைகளைக் கட்டாயமாகத் தங்களோடு சேர்த்துக்கொண்டார்கள். பலபோராளிகள் ஆயுதங்களோடு என்ன செய்வது என்று தெரியாமல், அடுத்தது என்ன நடக்கும் என்றும், கட்டளை வராமலும் அலைந்து திரிந்தனர். பலர் மரங்களுக்குக்கீழ்ச் சோர்ந்தபடி இருந்தார்கள். பார்க்கும் இடங்களிலெல்லாம் பிஸ்ரல்களும், துப்பாக்கிகளும், குப்பிகளும். தகடுகளும் ஆங்காங்கு சிதறிக்கிடந்தன. ஒவ்வொரு காலையும் வைக்கும்போதும் குப்பிகளை உழக்காமல் இருப்பதற்காகக் கீழே பார்த்து நடக்கவேண்டியிருந்தது. மதியம் நகர்ந்தது. துப்பாக்கிச் சூடுகளே நிகழ்ந்தவண்ணமிருந்தன. மாலை நான்கு மணியிருக்கும். போராளிகள் சிலர் வந்து எதையோ சனங்களுக்குக் கூறிக்கொண்டிருந்தனர். அந்த இடத்திற்குப் போய் வந்த அண்ணன் ஒருவர் கூறிய வார்த்தைகள் எல்லோரையும் பதறவைத்தது.

> "காயப்பட்ட போராளிகளப் பெற்றோர் கூட்டிற்றுப் போகலாம் எண்டு அறிவித்தல் வந்திருக்காம். காயப்பட்ட போராளிகளின்ர மெடிசின் இங்காலப்பக்கத்தில இருக்குது எண்டு.. உதில வந்த பெடியள் சொல்லிட்டுப் போறாங்கள்..."

அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடனே, அவ்விடத்தில் நின்ற பலர் தம் சகோதரர்களையும், பிள்ளைகளையும், சொந்தங்களையும் தேடி ஒவ்வொரு மெடிசினாகத் திரிந்து, அவர்களைத் தூக்கிவந்தார்கள். பலர் அங்குமிங்குமாகத் தேடித்திரிந்தனர். பலர் மெடிசின்களில் தேடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் பிள்ளைகளையும், சகோதரர்களையும் காணாததால் மனம் சோர்ந்து திரும்பி வந்தனர்.

"உங்க.. புள்ளா ஒவ்வொரு மெடிசினிலயும் போய் படையணின்ர பேரையும், இயக்கப்பேரையும் சொல்லி விசாரிச்சிட்டு வாறம்... உங்கால இல்ல. ஒவ்வொரு படையணிக்கும் ஒவ்வொரு மெடிசின் இருந்ததால ஒவ்வொரு இடமாப்போய் விசாரிச்சம். 'காயப்பட்டு நகரமுடியாத போராளிகள் இருக்கிற பங்கர்புள்ளா, அவர்கள் விருப்பப்படிச் சக்கை வச்சிருக்காங்களாம். ஆமி, கிட்டவந்தா சார்ச்பண்ணி வெடிச்சுப்போடுவாங்களாம். எல்லாரிட்டயும் குப்பி கொடுத்து வைச்சிருக்கிறதால, ஆமிற்ற உயிரோட மாட்டாம அதக்கடிச்சுச் செத்திருவாங்களாம்.. காயப்பட்ட நடக்க ஏலுமான போராளியளப் போகச் சொல்லிட்டாங்களாம். அதால நீங்கள் தேடிவந்தவர் வங்கரவிட்டு ஏறி, எங்கையும் போயிற்றேரோ தெரியாது. வேகமாப் போய்ப் பாருங்கோ... உங்காலை மற்ற மெடிசினுகளப்போய் பாருங்கோ' எண்டு, போனமெடிசின்ல காயப்பட்டிருந்த போராளிகள் சொல்லி அனுப்பினதுகள். அதுதான் தேடியும் கண்டுபிடிக்கேலாம வந்திட்டன்"

தன்னுடைய பெற்றோரிடம், சகோதரனைத்தேடிய செய்தியைக் கூறிக்கொண்டிருந்த ஒரு இளம் அண்ணனின் வார்த்தைகள் அன்றைய இறுதிநாட்களின் உண்மையைச் சொல்லுவதாய் இருந்தன.

சனங்கள் எல்லாம் தம் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். பலர் தேடி அலைந்தார்கள். ஏனெனில் வீட்டிற்கு ஒருவர் என்ற சிந்தனையில் வீட்டுக்கொருவர் போராட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கப்பட்டதால், ஒவ்வொரு வீடுகளும் போராளி குடும்பங்களாகவே இருந்தன. அதுமட்டுமன்றிப் போராட வலுவுடைய சிறுவர்கள் கட்டாய ஆட்சேர்ப்புக்கு உட்படுத்தப்பட்டுப் போராட்டத்தில் இணைக்கப்பட்டனர். ஒவ்வொரு வீட்டிலும் ஒருவரின்பங்களிப்புக் கட்டாயமாக இருந்தது. இதனால் தம் உறவுகளைத்தேடி எல்லோரும் அலைந்து கொண்டிருந்தனர். மாலை ஐந்தரை மணியளவில் இன்றும் பல்லாயிரக்கணக்கான சனங்கள் இராணுவத்திடம் சரணடைந்துவிட்டனர். இருள் கருக்கொள்ளத்தொடங்கியதால் போராளிகள் சனங்களைப் போகவிடாமல் தடுத்துவிட்டார்கள். இரவாகிவிட்டது. எல்லோரும் அச்சத்துடன் வீதியோரத்தில் நின்ற வாகனங்களுக்குக் கீழேயிருந்த பதுங்குகுழிகளில் படுத்துக்கொண்டோம்.

இரவிரவாகத் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. எறிகணைகள் வெடிக்காத நிம்மதியில் மக்கள் பதுங்குகுழிகளில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அதிகாலை சுமார் இரண்டரை, மூன்று மணியிருக்கும் பாரிய வெடிப்புச் சத்தங்கள் நிகழ்ந்தன. வீதியால் பலர் ஓடுப்பட்டுத் திரியும் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. ஜீப் வாகனங்கள் அங்குமிங்கும் வேகமாகப் போய்வரும் சத்தங்களும், பாரிய தீப்பிழம்புடன் கூடிய தாக்குதல் சத்தங்களும் கேட்டன. பாரிய குண்டுகள் தொடர்ந்து வெடித்துச் சிதறுகின்ற ஓசை. அதிரடித்தாக்குதல் சமராகத்தான் இருக்கவேண்டும். சுமார் ஒருமணித்தியாலம் இப்போர் நீடித்திருக்கவேண்டும். பின்பு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் ஓய்ந்து போனது. யாரும் வெளியில் வரவேயில்லை. அப்படியே பதுங்குகுழிக்குள் கண்ணயர்ந்து விட்டோம்.

காலை ஐந்தரையிருக்கும். சப்பாத்துச் சத்தங்களும், புதிய மொழி உறுக்கல்களும் எங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பின. எல்லோரும் பதுங்குகுழியிருந்து வெளியில் வந்தோம். இலங்கை இராணுவத்தினர் சூழ்ந்து கொண்டனர். சிங்கள இராணுவத்தை நேரடியாக முதன்முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறேன். அவர்களின் தோற்றம் பயங்கரமாய் இருந்தது. கைகளிலே துப்பாக்கிகளுடன் சனங்களைப் பார்த்து அவற்றை நீட்டியபடி, சிங்களத்தில் ஏதோ பேசிக்கொண்டு, எல்லோரையும் வட்டுவாகல் பாலத்தின் பக்கம் அனுப்பினார்கள்.

"நாங்களெல்லாம் இனிச்சரி... எங்களையெல்லாம் கொண்டுபோய்ச் சித்திரைவதை செய்து கொல்லப்போறாங்கள். துவக்காலை சுட்டுக் கடலுக்குள்ள போட்டிருவாங்கள். அப்பாவையெல்லாம் துவக்காலை அடிச்சுச் சாக்காட்டிருவாங்கள். அம்மாவையும், தங்கச்சியையும் சீரழிச்சுக் கொண்டிருவாங்கள்.... ஆமிக்காரங்கள் உப்பிடிப்பட்டவங்களெண்டு, புலிகளின் குரல் வானொலில போற கதை நிகழ்ச்சியில கேட்டிருக்கிறன். தெருக்கூத்துகளிலயும் பாத்திருக்கிறன். அப்ப நாங்கள் தப்பமாட்டம். எங்களை எல்லாம் சித்திரவதை செஞ்சு கொல்லப் போறாங்கள்"

என் மனதில் பல எண்ணங்கள் ஓடி அச்சத்தை எழுப்பின. பயத்துடன் ஒருவரை ஒருவர் ஒட்டியபடி சனங்களோடு சனங்களாய் நாங்களும் போய்க்கொண்டிருக்கிறோம். சிவில் உடைகளிலும், படையக உடைகளிலும் நின்ற பேராளிகளும், கிப்பியாகத் தலைவெட்டப்பட்ட பெண்களும், மொட்டையடிக்கப்பட்ட சிறுவர்களும், இளம் ஆண்களும், பெண்களுமாக இராணுவத்தால் தெரிவுசெய்யப்பட்டு ஒருபக்கத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களின் முகங்களில் பெரும் பீதி படர்ந்திருந்தது. நாங்கள் சனங்களோடு சனங்களாய் வட்டுவாகல் பாலம் நோக்கி நகர்ந்துகொண்டிருந்தோம். மெடிசின்கள் இருந்த பக்கமாகத் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும், வெடிப்புச்சத்தங்களும் இடையிடையே கேட்டுக்கொண்டிருந்தன. நந்திக்கடற்கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டைகளிலும் ஆங்காங்கு துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் இடையிடையே கேட்டன. போர் மௌனிக்கப்பட்டது. ஆனால் ஏன் இச்சத்தங்கள் இன்னும் மௌனிக்கவில்லை? வீதி நீளத்திற்கும் சனங்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள். வீதியின் இரு மருங்கிலும் உள்ள மரங்களில் காப்பெடுத்தபடி, இராணுவச் சிப்பாய்கள் இயந்திரத் துப்பாக்கிகளை நீட்டியபடி எங்களை நோக்கிப் பார்த்தவண்ணமுள்ளனர். அவர்களுக்குப் பின்னால் பெரும் ஆயுதங்களோடு கவச வாகனகளும், பீரங்கிதாங்கிய செயின்பிளக்குகளும் தென்பட்டன. சுமார் நூற்றுக்கும் அதிகமான இப்பீரங்கிதாங்கிய கவசவாகனங்களும், செயின்பிளக்குகளும் இவ்விறுதி யுத்தத்தில் முன்னரங்குகளில் பயன்படுத்தப்பட்டிருந்தன.

"கடைசிச் சண்டையில இந்தப்பெரிய பீரங்கிகளுக்கும், செயின்பிளக்குகளுக்கும் முன்னால... எப்புடித்தான் சின்னத்துவக்குகளோட அண்ணையாக்களும், அக்காக்களும் தாக்குப்பிடிச்சிருப்பாங்கள்?"

என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு நகர்கிறேன். வீதிகளில் பலநூற்றுக்கும் மேற்பட்டவர்களின் உடல்கள் அழுகிக் கிடந்தன. அவற்றில் புழுக்கள் துடித்தன. அவற்றையெல்லாம் கடந்து போகிறோம். பெரும்பாலும், இராணுவத்திடம் சரணடைய வந்தவர்களின் உடல்களாய்த்தான் இவை இருக்கவேண்டும். வட்டுவாகல் பாலத்தை நெருங்கிவிட்டோம். ஒடுக்கமான பாலம் பல வடுக்களைச் சுமந்த மக்களைத் தன் கரங்களால் சுமந்து அக்கரைக்கு அனுப்புகிறாள். பாலத்தால் நடந்து போகிறோம். எங்களுக்கு முன்னும், பின்னும் பல்லாயிரக் கணக்கான மக்கள். நந்திக்கடலிலிருந்து இறந்தவர்களின் உடல்கள், நீரோட்டத்தினால் அடித்துவரப்பட்டுப் பாலத்தை அண்டிய பகுதிகளில் ஒதுங்கியிருக்கின்றன. ஆங்காங்கு அழுகிய உடல்கள் வெள்ளை நிறமாக ஊதிய நிலையில் மிதந்துகொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலத்தைக் கடந்து கோவிலடிக்கு வந்துவிட்டோம். காயப்பட்டவர்களை இராணுவ வாகனங்களில் இராணுவத்தினர் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். சந்தேகத்துக்கிடமான ஆடவர்களையும், பெண்களையும் வாகனங்களில் ஏற்றினார்கள். குடும்பஸ்தர்களில் பலரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்கள். அவர்களை எங்கு கொண்டுசெல்கிறார்கள் என்றே தெரியவில்லை. அவர்களின் உறவுகளின் முகங்களில் பீதியே வெளித்தெரிந்தது. எஞ்சியவர்கள் அச்சத்தோடு வரிசையாக நகர்ந்துகொண்டிருந்தார்கள். வீதியின் இருமருங்கிலும் இராணுவத்தினர் துப்பாக்கிமுனைகளை நீட்டியபடியிருந்தனர். இனி என்ன நடக்குமோ? என்ற பயம் மனதுக்குள் படரக் கால்கள் நகர்ந்துகொண்டிருந்தன. போர்வெடியின் ஓசைக்குள்ளும் இருந்த சந்தோசம் இப்போது தொலைக்கப்பட்டுவிட்டதை மனம் உணர்ந்தது. சுதந்திரக் காற்றைச் சுவாசித்த நினைவுகளோடு நந்திக்கடல் தேசத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். முன்னால் முட்கம்பி வேலிகள் எம்மைச் சூழ்ந்து கொண்டன.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அணிந்துரையிலிருந்து.....

முருகையா சதீஸ் எழுதிய "கண்ணீரில் கரைந்த தேசம்" என்னும் நாவல் ஒரு போர்க்களப் பட்டறிவு எழுத்துருவாக அமைகிறது. ஆசிரியரே கதைமாந்தனாக நின்று நாவலின் கதையை நடத்திச் செல்கிறார். இந்த நாட்டிலே அரச படைக்கும் புலிகளுக்குமிடையே வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற போரின் முடிவுப் பகுதியைச் சித்திரிப்பதாக இந்த நாவல் அமைகிறது. புதுக்குடியிருப்பிலிருந்து உயிர்ப் பாதுகாப்புக்காகப் பல்வேறு இடங் களில் பல இன்னல்களுக்கும், குண்டுகளுக்கும் தப்பி வட்டுவாகல் பாலத்தைத் தாண்டும் வரையான களத்தினையும் காலத்தினை யும் கொண்டதாக அது அமைகிறது. உலகிலே போர்கள் நடை பெற்ற நாடுகளில் அப்போர்கள் தொடர்பான நாவல்கள் தோன்றி யிருப்பதை நாம் அறிவோம். அத்தகைய ஒரு நாவலாக இதுவும் அமைகிறது. இது ஆசிரியருடைய நேரடி அனுபவம் மலிந்ததாக அமைகிறது. வன்னிப் போரினை அறிய விரும்புபவர்கள் அதனின் ஒரு வெட்டு முகத்தை இந்த நாவலூடாக அறிந்து கொள்ளமுடியும்.

வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9 786249 940703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org